பதிவு இலக்கம் : 105267

வார இதழ்

# தீபம்

29.09.2019 தீபம் - 201

விலை ரூபா 30.00

மகிழ்ச்சி உணவகம்
கரடிப்போக்குச் சந்தி, கிளிநொச்சி.
தொ. இல 076 533 1798



## சுடர் விடும் தியாகத் தீ

படம் : ஹம்சனன்



## மூண்டெழும் பேரினவாதத் தீ





## மின்னணு மனிதம்



## மிரட்டும் சிலந்தி

இது தமிழ்பேசும் மக்களுக்கான தனித்துவமான பத்திரிகை




## மொழி அறிவோம்



**கத்திரிகோல் , கத்தரிகோல் எது சரி ?**

நிறைய சந்தர்ப்பங்களில் SCISSORS என்பதைக் குறிக்கக் கத்திரிகோல் என்ற சொல் பயன்படுத்தப்படுகிறது. சில இடங்களில் கத்தரிகோல் என்ற சொல் கையாளப்படுகிறது. கத்தரிப்பது என்பது தான் கத்தரிகோல் செய்யக்கூடிய தொழில். கோல் என்பது இவ்விடத்தில் கருவி என்ற பொருளில் வருகிறது. கத்தரிக்கப் பயன்படும் கோல் என்பதைக் குறிக்கவே கத்தரிகோல் என்ற சொல் உருவாக்கப்பட்டது. இதற்கு மாறாக கத்திரிகோல் என்று எழுதினால் அது பல மாறுபட்டஅர்த்தங்களை தந்துவிடும். ஏனெனில் கத்திரி என்பது வெயிலைக் குறிக்கும்

## அறிவோம் உயர்வோம்

ஓய்வு என்றால் என்ன? எந்த வேலையும் செய்யாமல் "சும்மா" உட்கார்ந்திருப்பதுதான் ஓய்வு என நினைத்துக் கொண்டிருக்கிறோம். ஆனால், ஓய்வு என்பது நாம் செய்து கொண்டிருக்கும் வேலையில் தவறு மற்றும் சலிப்பு ஏற்படாமல் இருக்க, தாற்காலிகமாக வேறு பணியைச் செய்து நம் உடலையும், மனதையும் உற்சாகப்படுத்திக் கொள்வதாகும்.

மனிதன் தன் வாழ்க்கையில் பணம், பதவி, பொன், பொருள் என எதை இழந்தாலும் மீண்டும் பெற்று விடலாம். ஆனால், காலம் என்ற ஒன்றை மட்டும் மீண்டும் பெறவே முடியாது.மாணவர்களின் விடுமுறைக் காலங்களைப் பயனுள்ளதாக மாற்றுவது பெற்றோரின் கைகளில்தான் உள்ளது.



ஒவ்வொரு விடுமுறையிலும் மாணவன் கற்றுக் கொள்ளும் ஏதேனும் ஒரு விஷயம், அவன் வாழ்நாள் முழுவதும் தொடர்ந்து பயனளிக்குமாறு அவர்களின் விடுமுறைக் காலத்தைப் பயனுள்ள வழியில் கழிக்க நாம் கற்றுக் கொடுக்க வேண்டும்.

## பொன்மொழிகள் கற்போம்

### நண்பர்கள்

- உன் நண்பர்களைக் காட்டு.. உன்னைப் பற்றிச் சொல்கிறேன்.
- புத்தகங்கள்தான் நம்முடன் பேசும் மௌன நண்பர்கள்.
- நட்பு என்பது நமது ஆரோக்கியம் போன்றது. அதை இழந்த பிறகுதான் அதன் அருமையை உணர்வோம்.



- எந்த ஒரு காயத்திற்கும் நண்பன் மருந்தாவான். ஆனால் நண்பன் ஏற்படுத்தும் காயத்திற்கு மருந்தே இல்லை.
- புத்தகங்களும், நண்பர்களும் குறைவாக இருந்தாலும் சிறந்ததாக இருக்க வேண்டும்.



## அணிலே அணிலே

அணிலே அணிலே ஓடி வா
அழகிய அணிலே ஓடி வா
கொய்யா மரம் ஏறி வா
குண்டுப்பழம் கொண்டு வா
பாதிப்பழம் உன்னிடம்
மீதிப் பழம் என்னிடம்
கூடிக்கூடி இருவரும்
கொறித்துக் கொறித்துத்
தின்னலாம்.

## அட அப்படியா?



- சிலந்தி ஒரு மணி நேரத்தில் 450 அடி நீளத்திற்கு வலை பின்னும்.
- பகவத் கீதை உலகம் முழுவதிலும் 50 மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.
- முதியோருக்கு ஓய்வூதியம் வழங்கும் முறையை 1898இல், முதன்முதலாக நியூசிலாந்து அறிமுகப்படுத்தியது.
- டிங்கோ என்னும் அவுஸ்திரேலிய நாய்க்கு குரைக்கத் தெரியாது.
- உலகின்மிகப் பெரிய பல்லி இனம் கோமோடா



## கொடிய பாம்பும் முனிவரும்



ஊருக்கு ஒதுக்குப் புறமாக ஒரு கொடிய விடப் பாம்பு வாழ்ந்து வந்தது. எவரையும் கொத்தும் சுபாவம் கொண்ட இந்தப் பாம்பிருந்த பக்கம் எவருமே போவதில்லை. இந்த ஊர்ச் சந்தைக்குப் போகும் குறுக்கு வழி, இந்தப் பாம்பிருந்த பாதையிலேயே இருந்தது. பாம்பு கடிக்கும் என்ற பயம் ஊரார் எவருமே இந்தப் பாதை வழியே நடக்காமல் தடுத்தது.

ஒரு நாள் மிருகங்களோடு பேசக்கூடிய யோகி ஒருவர் அந்த ஊருக்கு வந்தார். மக்கள் தங்கள் பிரச்சினையை அவரிடம் முறையிட்டார்கள். அந்த யோதகியும் தன் சக்தியால், பாம்புடன் பேசி, எவரையும் கடிக்க வேண்டாம் என்று உத்தரவிட்டு, போய்விட்டார். பாம்பு அடங்க மக்களின் சீண்டல் அதிகமாயிற்று. கல்லால் எறிந்து பாம்பு காயப்பட்டும் விட்டது. மீண்டும் அந்த ஊருக்கு வந்த யோகியிடம் பாம்பு தன் நிலையைச் சொல்லி முறையிட்டது." "உன்னைக் கடிக்க வேண்டாமென்றுதான் சொன்னேன். பக்கத்தில் வந்தால் சீறாதே என்று சொன்னேனா" என்று பாம்பைத் திட்டினார் யோகி.

**நீதி: "உங்கள் இயல்பை மற்றவர்களுக்காக எப்போதும் மாற்றிக் கொள்ளாதீர்கள்"**

## இது புதிர் நேரம்

1) வெட்டிக்கொள்வான் ஆனாலும் ஒட்டிக்கொள்வான் அவன் யார்?
2) ஓடியாடி வேலை செய்தபின் மூலையில் ஒதுங்கிக்கிடப்பாள் அவள் யார்?
3) ஏற்றி வைத்து அணைத்தால் எரியும் வரை மணக்கும் அது என்ன?
4) எவர் கையிலும் சிக்காத கல் எங்கும் விற்காத கல், அது என்ன?
5) ஆயிரம் தச்சர் கூடி அழகான மண்டபம் கட்டி ஒருவன் கண்பட்டு உடைந்ததாம் மண்டபம் அது என்ன?







**விடைகள்**

1) கத்தரிக்கோல் 2) துடைப்பம்/தும்புத்தடி 3) ஊதுபத்தி 4) விக்கல் 5)தேன்கூடு

# தீபம்

வார இதழ்

"யாமார்க்கும் குடியல்லோம்"

29.09.2019 இதழ் -201

gmail:- newsdeepam19@gmail.com

விநியோகம் / விளம்பரம் TP:- 021 4927542, 0771989445


## அழிவை நோக்கி தமிழினம் ஆழ் துயிலில் தலைமைகள்

இலங்கையில் சிங்கள பேரினவாதத்துடன் இணைந்த பௌத்த மத அடிப்படைவாதிகள் இங்கு வாழும் சிறுபான்மை இனத்தவரை – தமிழ்பேசும் மக்களை, முற்றாக அழித்தொழித்து இந்த நாட்டை ஒரு முழுமையான பௌத்த சிங்கள பூமியாக்கும் வெறிமிக்க கங்கணத்துடன் மிகத்தீவிரமாக செயற்படத் தொடங்கியுள்ளதென்பது பகிரங்கமான ஆபத்தாகி உள்ளது.

ஆரம்பத்தில் தமிழ்பேசும் வடக்கு கிழக்கு வாழ்மக்களின் அரசியல், மற்றும் வாழ்வியல் உரிமைகளை நிராகரிக்கத் தொடங்கிய பௌத்த சிங்கள பேரினவாதம் நாடு சுதந்திரமடைந்ததாகக் கூறப்படும் நாளிலிருந்தே மிகவும் துல்லியமாகத் திட்டமிட்டு பல்வேறு நடவடிக்கைகள் மூலம் மாறி மாறி வந்த ஆட்சியாளர்களால் சிறுபான்மை இனத்தை இல்லாதொழிக்கும் செயற்பாட்டை கட்டம் கட்டமாகத் தீவிரப்படுத்தி வந்துள்ளமையானது பரகசியமான விடயமேயாகும்.

இத்தகைய இனவாத – மதவாத – அரசியல் செயற்பாடுகளால் நாட்டின் சிறுபான்மை சமூகத்தவர் குறிப்பாக தமிழ் பேசும் மக்கள் – சந்தித்த இழப்புகள், இன்னல்கள் அவர்களின் சுதந்திர இருப்பை எதிர்கால நம்பிக்கைகளை சிதைத்து சின்னாபின்னப்படுத்தி இல்லாமல் ஆக்கி வருகிறது.

மதத்தின் பெயரால், நல்லிணக்கத்தின்பேரால், சமாதானத்தின்பேரால், அரசியல் மாற்றத்தின்பேரால், யாப்பு மாற்றம், மற்றும் 13ஆவது திருத்தச்சட்டம் உட்பட பல்வேறு சட்ட திருத்தங்கள், இணைப்புகளின் பேராக, விசாரணைக் குழுக்கள், விஷேட ஆணைக் குழுக்களின் ஆய்வுகளின் பேரால் அண்மைக்காலமாக நல்லாட்சியின் பேரால் இந்நாட்டில் தமிழினம் மனித குலத்தால் சகித்துக் கொள்ளவே முடியாத அவலங்களைச் சந்தித்து வந்துள்ளது சந்தித்தும் வருகிறது. என்பது விபரிக்கத் தேவையில்லாத ஒன்று.

உரிமை மறுப்பு மற்றும் பறிப்பு நடவடிக்கைகள் ஆரம்பமான இத்தகைய அநாகரிக ஜனநாயக செயற்பாடுகள் இன்று நில அபகரிப்பு, காணிப்பறிப்பு, என மூர்க்கம் கொண்டு இப்போது கலாசார அழிப்பு, பண்பாட்டு சீர்குலைப்பு, என்று விஸ்தாரம் கொள்வது மிக மிக ஆபத்தான கட்டத்தை நோக்கி தமிழினம் தள்ளப்படுகிறது என்ற அச்ச எச்சரிக்கையை ஏற்படுத்தியுள்ளது.

இவையாவும் நல்லாட்சியின் கீழ் பௌத்த தர்மத்தின் பேரால் காவியுடைத் தேரர்களின் நெறிப்படுத்தலில் பாதுகாப்பு கட்டமைப்பின் மௌன அங்கீகாரத்துடன் நீதித்துறை அவமதித்து அதன் தீர்ப்பை உதாசீனம் செய்துவிட்டு நடைபெறத் தொடங்கியுள்ளமை அதிர்ச்சியூட்டும் விடயமாகும்.

இத்தகையோரை கண்டிக்கவோ, தண்டிக்கவோ திராணியோ அற்ற தேசத் தலைமை நீதியை புறக்கணிக்கும் நீசத்தனத்தை மௌனமாக பார்த்துக் கொண்டிருப்பது ரசனையுடனா? வேதனையுடனா? என்பது புரியவில்லை.

இதேவேளை அண்மைக்கால சம்பவங்கள் குறித்து குறிப்பாக புத்ததுறவிகள் என இனங்காட்டியபடி இந்த மண்ணில் அடுத்து ஒரு இனக்கலவரத்தை, இரத்தக்களரியை உருவாக்கி அதன்மூலம் புத்தபகவானை குதூகலப்படுத்தலாம் என நினைப்போரும் அவர்களுக்கு வக்காலத்து வாங்கி அரசியல் லாபம் அடைய முனையும் பெரும்பான்மை இனஅரசியல் தலைமைகளும் அமைதியைப் புறந்தள்ளி விட்டு அவலத்துள் இந்த நாட்டை நிரந்தரமாக தள்ளிவிட முனைப்பு காட்டி நிற்பதை சர்வதேச சமூகம் எத்தனை காலத்துக்கு கைகட்டி வேடிக்கை பார்க்கப் போகிறதாம்...?

இத்தனை அவலங்களுக்கும் மத்தியில் எந்தவிதமான உணர்வுமின்றி ஆழ் துயிலில் இருக்கும் தமிழ் மக்களின் தலைவர்கள் என்று கூறிக்கொண்டு உலாவருவோர் என்ன செய்யப்போகிறார்கள். எல்லாம் முடிந்த பின்னர் எல்லாருடனும் பேசி ஒரு முடிவெடுப்போம் என்று இவர்கள் திருவாய் மலர்ந்தருளினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை...!

## பாரதி...




தண்ணீர் விட்டோ வளர்த்தோம் சர்வேசா இப்பயிரை
கண்ணீரால் காத்தோம் கருகத் திருவுளமோ?
கருகத் திருவுளமோ?
தண்ணீர் விட்டோ வளர்த்தோம் சர்வேசா இப்பயிரை
கண்ணீரால் காத்தோம் கருகத் திருவுளமோ?

எண்ணமெல்லாம் நெய்யாக எம்முயிரினுள் வளர்ந்த
வண்ண விளக்கிது மடியத் திருவுளமோ?
தண்ணீர் விட்டோ வளர்த்தோம்

ஓராயிரம் வருடம் ஓய்ந்து கிடந்த பின்னர்
வாராது போல வந்த மாமணியைத் தோற்போமோ?
மாதரையும் மக்களையும் வன்கண்மையால் பிரிந்து
காதல் இளைஞர் கருத்தழிதல் காணாயோ?




நன்றி : சிரித்திரன் சித்திரக் கொத்து

கலாநிதி கே.ரீ.கணேசலிங்கம்

# இஸ்ரேல் பாராளுமன்றத்துக்குள் எதிர்க்கட்சியினராக பாலஸ்தீனர்கள்?



இஸ்ரேலியப் பாராளுமன்றத் தேர்தல் மீண்டும் எந்தக் கட்சிக்கும் அறுதிப் பெரும்பான்மையைக் கொடுக்க வில்லை. ஆட்சி அமைப்பதில் யூதக் கட்சிகள் ஒன்று சேர்ந்து ஆட்சி அமைக்கும் நெருக்கடிக்கு முதல்முதலில் முகம் கொடுக்கும் நிலைமை ஒன்றினைக் காணமுடிகிறது. அது மட்டுமன்றி வரலாற்றில் முதல் தடவையாக அரபுக் கட்சி ஒன்றுக்கு எதிர்கட்சி வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுக்கப் போவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. இக்கட்டுரையும் அரபுக் கட்சிக்கான அரசியல் சூழலை விளங்குவதாகவே அமையவுள்ளது.

இஸ்ரேலில் அரசியலில் மிகக் குறுகிய காலத்தில் இரண்டாவது தடவையாக பொதுத் தேர்தல் (17.09.2019) ஒன்று நடைபெற்றுள்ளது. அதில் மீண்டும் பிரதமராக பெஞ்சமின் நெதன்யாகு. தேர்ந்தெடுக்கப்பட்டார். அத் தேர்தலில் 120 இடங்களில் 65 இடங்களில் நெதன்யாகுவின் லிகுட் கட்சி மற்றும் அதன் கூட்டணிக் கட்சிகள் வெற்றி பெற்றிருந்தன. ஆனால் அக்கூட்டணிக் கட்சிகளுக்கிடையே ஏற்பட்ட முரண்பாட்டினால் மீண்டும் ஒரு தேர்தலுக்கு இஸ்ரேல் தள்ளப்பட்டது. குறிப்பாக இஸ்ரேல் பெய்டனு கட்சித் தலைமை நெதன்யாகு அரசுக்கு அளித்து வந்த ஆதரவை திரும்பப் பெற்றதன் விளைவே பாராளுமன்றத்தில் அவருக்கான பெரும்பான்மைப் பலத்தை இழக்க நேரிட்டது.

அறிவிக்கப்பட்ட தேர்தலில் பிரதமரின் நெதன்யாகுவின் லிகுட் கட்சிக்கும் முன்னாள் இராணுவத் தளபதி பென்னி கன்டஸ் தலைமையிலான புளூ அண்ட ஒயிட் கட்சிக்கும் இடையில் பலத்த போட்டி நிலவியது. தேர்தல் பிரசாரத்தின் போதே பெருமளவு மோதல் வெடித்தது.பல இடங்களில் கைகலப்புக்கள் நிகழ்ந்தன. தேர்தலுக்கு பின்னர் வெளியிடப்பட்ட முடிவுகளின்படி நெதன்யாகுவிற்குப் பாரிய பின்னடைவு ஏற்பட்டுள்ளது. 120 ஆசனங்களை கொண்ட பாராளுமன்றத்தில் நெதன்யாகு தலைமையிலான லிக்குட் கட்சி 31 இடங்கள் மட்டுமே பெற்றது. அதன் வலது சாரி கூட்டணியுடன் சேர்ந்தே 55 இடங்களைப் பெற்றுள்ளது. எதிர்கட்சியான பென்னி கான்ட்ஸ் தலைமையிலான புளூ அன்ட ஒயிட் கட்சி 33 இடங்கள் உள்ளிட்ட அவரின் கூட்டணிக்கு 54 இடங்களும் கிடைத்துள்ளன. மூன்றாவது இடத்தில் அரபு இஸ்ரேல் கட்சிகளின் கூட்டமைப்பான ஜாயின்ட் லிஸ்ட் கட்சி 12 இடங்களுடன் இருக்கிறது.பழைமை வாத கட்சியான ஷாஸ்க்கு 9 இடங்கள் கிடைத்துள்ளன. ஆட்சி அமைக்க 61 ஆசனங்கள் தேவையெனும் பட்சத்தில் இரண்டு பிரதான கட்சிகளும் தனிப்பெரும்பான்மையை பெற்று ஆட்சியமைக்க முடியாத சூழல் ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில் எதிர்க்கட்சியான புளூ அன்ட் ஒயிட் கட்சியுடன் இணைந்து ஆட்சி அமைக்க பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு இணங்கியிருப்பது அதிக விமர்சனங்களை ஏற்படுத்தியுள்ளது. இது குறித்துப் பிரதமர் நெதன்யாகு நிருபர்களிடம் கூறுகையில் 'வலதுசாரி கூட்டணி ஆட்சியை அமைக்க விரும்பினேன். ஆனால் அதற்கு வாய்ப்பினை மக்கள் தர மறுத்துவிட்டனர். மூன்றாவது தேர்தல் ஒன்றினை சந்திக்கும் துணிச்சல் இஸ்ரேல் நாட்டுக்கு கிடையாது. எனவே எதிர்க்கட்சி தலைவரான பென்னி கான்ட்ஸ் உடன் இணைந்து கூட்டணி ஆட்சியை அமைக்க தயாராக உள்ளேன் என்று முன்னர் தெரிவித்தார். அதே கருத்தை முன்வைத்த பென்னி கான்ட்ஸ் பெஞ்சமின் நெதன்யாகுவுடன் இணைந்து கூட்டணி ஆட்சியை அமைக்கத் தயார். ஆனால் எங்கள் கட்சி தான் ஆட்சியை வழிநடத்த வேண்டும். நான் தான் இஸ்ரேலின் அடுத்த பிரதமர் என அவர் தெரிவித்தார்.



இரு கட்சிகளது இணக்கத்துடன் ஒரு தேசிய அரசமைவதற்கான தயார்ப்படுத்தல் நிறைவடைந்துள்ளது. ஆனால் பிரதமர் யார் என்பதில் நிலவும் இழுபறியே தற்போதைய உரையாடலுக்கான விடயமாக அமைந்துள்ளது. இதே நேரம் ஆட்சி அமைப்பதைக் கடந்து இத்தேர்தல் ஏற்படுத்திய இன்னுமொரு அரசியல் விளைவு அரபுக்களின் மிதவாத அரசியல் பிரவேசமாகும். இஸ்ரேலில் நடந்து முடிந்த இரண்டு பொதுத் தேர்தல்களிலும் அரபுக்கட்சிகள் பதிய வரலாற்றைப் படைத்தன. கடந்த ஏப்ரல் மாதம் இடம்பெற்ற தேர்தல் 10 இடங்களை வென்றதுடன் தற்போதைய தேர்தலில் பட்டியல் அடிப்படையில் 13 ஆசனங்களை கைப்பற்றியுள்ளது. இதன் மூலம் அரபுக் கட்சிகள் இஸ்ரேலிய பாராளுமன்றத்தில் மூன்றாவது பெரும் கட்சியாக வளர்ந்துள்ளன. இது அரபுக்களின் அரசியல் பிரவேசமாகவும் இஸ்ரேலியப் பாராளுமன்றத்திலுள்ள அனைத்து வாய்ப்புக்களையும் பெறுவதற்கான வாய்ப்பினையும் ஏற்படுத்தியுள்ளது. இதற்குப் பிரதான காரணமாகக் கருதப்படுவது நெதன்யாகுவின் அரபுக்களுக்கு எதிரான பிரச்சாரமாகும். அதிலும் குறிப்பான விடயம் தேர்தலில் வெற்றி பெற்றால் ஜோர்டான் பள்ளத்தாக்கு மற்றும் வடபகுதி டெட்சீ மீது இஸ்ரேலின் இறைமையை பயன்படுத்துவேன் என தெரிவித்திருந்தமை முக்கிய விடயமாகும். மேலும் மேற்குக் கரையில் உள்ள அனைத்து குடியேற்றங்களையும் இணைத்து கொள்ளவேன் என்று அவர் பாலஸ்தீனர்களுக்கு எதிரான பிரச்சாரத்தை முன்வைத்தார். யூதர்களை நோக்கி இஸ்ரேலிய பிரஜைகளாகிய உங்களிடமிருந்து தெளிவான ஆணை கிடைத்தால் நான் எனது திட்டத்தை நிறைவேற்றுவேன் எனத் தெரிவித்தார். இத்தகைய இன வெறிப் பிரச்சாரம் இஸ்ரேலிய பாலஸ் தீனர்களின் நெதன்யாகுக்கு எதிரான அரசியல் பங்குபற்றலுக்கு தூண்டியது.



இதுவே மூன்றாவது பெரும்பான்மை உடைய அரபுக் கட்சித் தலைவருக்கு எதிர்கட்சித் தலைவர் பொறுப்பு ஏற்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. அவ்வாறு நடந்தால், இஸ்ரேல் வரலாற்றில் அரபியர் ஒருவர் எதிர்கட்சித் தலைவராவது இதுவே முதல் முறையாக அமையும்.

இஸ்ரேலின் எல்லைக்குள் 20 சதவீதத்திற்கு மேல் உள்ள பாலஸ்தீனர். இதுவரை அந்த நாட்டு அரசாங்கத்தில் முக்கியப் பொறுப்பு எதையும் வகித்ததில்லை. அரபுக்கட்சியின் தலைவர் அய்மான் ஓடே எதிர்க்கட்சித் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டால், முதல் முறையாக அவருக்கு இஸ்ரேலிய அராங்கத்தில் முக்கிய அதிகாரம் கிடைக்க வாய்ப்புள்ளது. இஸ்ரேலிய அரச விதிப்படி அதன் உளவு அமைப்பான மொஸாட், மாதம் தோறும் அறிக்கைகளைத் தெரிவிக்க வேண்டியிருக்கும். மேலும் இஸ்ரேல் மட்டத்தில் மட்டுமன்றி சர்வதேச நாடுகளின் மத்தியிலும் இராஜதந்திர சேவையாற்ற வேண்டிய நிலை உருவாகும்.



எனவே இத்தகை அரசியல் பிரவேசமானது வரலாற்றில் முதன்மை பெறுவதுடன் இரு பிரிவினரும் இணைந்து ஆட்சி செய்யும் விடயம் ஏற்பட வாய்ப்புள்ளது. ஆனால் யூதர்கள் இத்தகைய சூழலுக்கு வாய்ப்பளிப்பார்களா? என்பதே பிரதான கேள்வியாகும். இது இலங்கை தமிழர் தலைமைகளுக்கு சிறந்த பாடமாக அமையும். கடந்த காலத்தில் கிடைத்த வாய்ப்புக்களையும் இழந்து போயிருப்பது போல் அல்லாது பாலஸ்தீனர்கள் போல் வாய்ப்புக்களை பயன்படுத்தும் இனமாக தமிழர் மாற வேண்டும்.

# கணவனைப் பறிகொடுத்த சோனியாவும் மனைவியைக் கைவிட்ட மோடியும்

மாசிலான்

இலங்கை சுதந்திரம் அடைந்ததென்று கூறப்பட்ட1948 க்கு முன்னரே பெரும்பான்மைச் சிங்கள அரசியல் தலைமைகள் அனைத்தும் சிங்கள பௌத்த மேலாண்மைச் சிந்தனையுடன் தான் அரசியல் தடத்தில் இருந்தன என்பது தான் வரலாறு. சுதந்திரத்திற்கு முன்னரான அரசாங்கசபைக் காலத்திலும் பின்னரான இப்போதைய நாடாளுமன்றக் காலத்திலும் சரி பெரும்பான்மை இனத்திடமே ஆட்சி உரிமை இருந்தது அது இப்பொழுதும் அவர்களிடமே இருக்கிறது. எண்ணிக்கையில் பெரும்பான்மையே சனநாயகத்தின் தீர்ப்பு என்று சொல்வார்கள். அப்படியான பெரும்பான்மை எண்ணிக்கையை சிறுபான்மை இனங்கள் என்றுமே நாடாளுமன்றத்தில் பெறமுடியாது. எனவே பெரும்பான்மையினச் சிங்களவர்கள் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றும் சட்டங்கள் தீர்மானங்கள் சிறுபான்மையினரைப் பாதிப்புக்குள்ளாக்கினாலும் அவை சனநாயகத்தின் பாற்பட்டதே ஆகும். இது தான் இலங்கை வரலாற்றில் கண்ட சனநாயகத்தின் யதார்த்த நிலையாகும்.

இந்த நாட்டின் செல்வத்தைப் பெருக்குவதற்காக பாம்புக் கடிக்கும் நச்சு உயிரினங்களின் கடிக்கும் இலக்காகி உயிரிழந்த மலையத்து மக்களின் குடியுரிமையைப் பறித்து வாக்குரிமையால் இல்லாமல் செய்ததும் பெரும்பான்மையை இறுக்கமாக நாடாளுமன்றத்தில் வலுப்பெறச் செய்வதற்கே ஆகும். அம்மக்களுக்கு வாக்குரிமை இல்லை வாக்களிக்க முடியாது ஆனால் அம்மக்கள் தொகையையும் கணக்கில் எடுத்துத்தான் நாடாளுமன்றத் தொகுதிகள் வரையறை செய்யப்பட்டன. இது முற்றிலும் ஒரு சிங்கள மேலாண்மைச் சிந்தனையின் உச்சக்கட்ட ஒடுக்குமுறை ஆகும்.1947 இல் நடந்த நாடாளுமன்றத் தேர்தலில் எட்டு த்தமிழ் உறுப்பினர்கள் மலையகத்திலிருந்து தெரிவு செய்யப்பட்டனர். இதை விடச் சில நாடாளுமன்றத் தொகுதிகளில் நாடாளுமன்ற உறுப்பினர்களைத் தீர்மானிக்கும் நிலையில் தமிழ் மக்கள் இருந்தனர். ஆனால் அவர்களின் வாக்குரிமையைப் பறித்ததன் மூலம் எட்டுத் தமிழ் உறுப்பினர்களைத் தமிழினம் இழந்தது மட்டுமல்ல இம் மக்களின் எண்ணிக்கையையும் சேர்த்துத் தொகுதி வரையறை செய்ததால் எட்டுப் பெரும்பான்மையினத்தவர் நாடாளுமன்ற உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர். இது பதினாறு உறுப்பினர்களை அங்கு பெரும்பான்மையினருக்குக் கொடுத்தது. அதாவது எப்பொழுதும் பெரும்பான்மையினரே ஆதிக்கம் செலுத்தும் வகையில் நாடாளுமன்றம் அமைக்கப்பட்டது. இந்நிலையில் பெரும்பான்மைச் சிங்கள பௌத்த மேலாண்மைச் சிங்களப் பெரும்பான்மை கொண்ட நாடாளுமன்றத்தின் மூலம் தமிழினம் உரிமைகளைப் பெறலாம் என்று கூறுவது மக்களை ஏமாற்றும் அரசியல் மட்டுமல்ல நகைப்புக்கிடமான அரசியலுமாகும்.

இதைப்பற்றி முன்னாள் முதலமைச்சர் விக்னேஸ்வரனிடம் கேட்ட கேள்வியையும் அதற்கு அவர் கொடுத்துள்ள பதிலையும் காண்போம்.


வினா : தேர்தல் அடிப்படையிலான பாராளுமன்ற அரசியல் மூலமும் பேச்சுவார்த்தைகள் மூலமும் எமது மக்களின் பிரச்சினைகளுக்கு விடிவு கிடைக்குமா? அப்படியானால் எப்படி ?

பதில் : வேறெந்தப் பாதையை நீங்கள் சிபார்சு செய்கின்றீர்கள்? பெரும்பான்மைப் பாராளுமன்ற ஆட்சியில் நெருக்குதல்கள் மூலமே நாங்கள் நன்மைகளைப் பெற முடியும். நாங்கள் சலுகைகளைக் கண்டு மயங்கி விட்டால் அது சாத்தியமாகாது என்று கூறியுள்ளார் விக்கினேஸ்வரன் .

நாடாளுமன்றம் சென்று என்ன முறையில் நெருக்குதல்களை கொடுக்க முடியும் என்பதைத் தெளிவுபடுத்த வேண்டியது அவரின் பொறுப்பு. நாற்பத்தெட்டு முதல் நாடாளுமன்றம் சென்றவர்கள் அங்கு எந்தவிதமான நெருக்குதல்களையும் கொடுக்கவில்லை என்று கூறுகிறாரா அல்லது அவர்கள் கொடுத்த நெருக்குதல்கள் சரியான வழியில் கொடுக்கப்படவில்லை என்று கூறுகிறாரா விக்கினேஸ்வரன்.

தற்பொழுதுள்ள நாடாளுமன்ற உறுப்பினர்களை விட்டுவிடுவோம். நாற்பத்தெட்டிற்குப் பின்னர் இருந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் தங்கள் பணிகளைச் சரியாகச் செய்யவில்லையா? முன்னைய நாடாளுமன்றப் பதிவுகளை எடுத்துப் படித்தால் அவர்கள் ஆற்றிய உரைகளைப் பற்றி அறிந்து கொள்ள முடியும். தந்தை செல்வா, ஜி.ஜி. பொன்னம்பலம், சுந்தரலிங்கம் வன்னியசிங்கம், நாகநாதன், மு. திருச்செல்வம், செனட்டர் நடேசன், இராசமாணிக்கம், அமிர்தலிங்கம், சிவசிதம்பரம், இராசதுரை, ஏகாம்பரம், கதிரவேலுப்பிள்ளை போன்ற பலர் எவ்வாறு நாடாளுமன்றத்தில் தங்கள் பங்களிப்பை வழங்கினார்கள் என்பது புரியும்.

உரிமைகளுக்காக நாடாளுமன்றத்தில் உரையாற்றிய துடன் உள்ளேயே போராட்டமும் நடாத்தியுள்ளார்கள் சுந்தரலிங்கத்தை குண்டுக்கட்டாகக் கதிரையுடன் தூக்கி வெளியில் கொண்டுவந்தது வரலாறு. சிங்களம் மட்டும் சட்டம் கொண்டுவரப்பட்டபோது ஜி.ஜி. ஆற்றிய உரை, பொன் கந்தையா ஆற்றிய உரை, வன்னியசிங்கம் ஆற்றிய உரை என்பன எவ்வளவு காத்திரமான பங்களிப்பு என்பதுதானே வரலாறு. இவ்வாறுதான் நீதிமன்ற மொழி சிங்களமே என்ற சட்டம் கொடுவரபபட்டபொழுது நள்ளிரவையும் தாண்டி அடுத்த நாள் விடியும் வரை விவாதம் செய்த தமிழ் நடாளுமன்ற உறுப்பினர்களின் பங்களிப்பைக் குறைத்து மதிப்பிட முடியாது



இந்தியாவின் கொள்கை வகுப்பாளர்கள் பதின்மூன்றுக்கும் அப்பால் செல்ல ஒருபோதும் இடமளிக்கமாட்டார்கள் என்பது அரசியலில் உள்ள அனைவருக்கும் தெரியும் ஆனால் விக்கினேஸ்வரனுக்கு அது புரியவில்லை. ஏனெனில் அவருக்கு அரசியல் புதியது. காஷ்மீரில் இப்பொழுது என்ன நடக்கிறது . எதற்காக அம்மாநிலத்தின் உரிமைகளைப் பறித்து இரண்டு ஒன்றியப் பிரதேசங்கள் ஆக்கினார் மோடி என்பது தெரியாமல் மோடி எதோ செய்வார் என்று நம்பும் அளவிற்கு இவர் உள்ளாரே. அரசியலையும் இந்திய நடப்புகளையும் கொஞ்சம் படிக்க வேண்டும் இவர். இந்தியாவின் மோடி ஆட்சியைத் தான் தமிழ்தேசியக் கூட்டமைப்பும் நம்பி உள்ளது. எனவே விக்கினேஸ்வரன் இந்த விடயத்திலாவது அவர்களுடன் இணைந்து பணியாற்றலாமே

இவ்வாறு ஏராளமான இடங்களில் எல்லாம் உரிமைக்காகக் குரல் கொடுத்த நாடாளுமன்றத்தால் சிறுபான்மையினருக்கு நன்மை கிடையாது என்று தந்தை செல்வா நாடாளுமன்றத்தில் பதிவு செய்துள்ளார் அது மட்டுமல்ல எழுபத்திரண்டில் புதிய அரசியல் யாப்பு தயாரிக்க அவைக்கு வாருங்கள் என்று சிறிமாவோ அழைப்பை ஏற்று அங்கு சென்று நல்லெண்ண அடிப்படையில் சிறிமாவோவின் அழைப்பை ஏற்று இங்கு வந்துள்ளோம் நல்லதை எதிர்பார்க்கிறோம் என்று செல்வா அங்கு சென்று ஆற்றிய உரையும் அதன் பின்னர் தமிழினம் சார்பில் கொண்டுவரப்பட்ட அரசியல் தீர்மானங்கள் அனைத்தும் திருத்தங்களாகக் கொண்டு செல்லப்பட்டபொழுது மொத்தச் சிங்கள உறுப்பினர்களும் அவற்றை எதிர்த்ததும் அதன் பின்னர் அரசியல் யாப்பு அவையிலிருந்து ஒரு வரலாற்று உரையை ஆற்றிவிட்டுத் தந்தை செல்வா தலைமையில் தமிழ் உறுப்பினர்கள் வெளியேறியது தானே வரலாறு.அதாவது இந்தப் பெரும்பான்மை இன அரசியலில் மகாவம்ச சிந்தனையில் இருக்கும் சிங்கள இனத்தின் நாடாளுமன்ற அரசியல் மூலம் உரிமைகள் பெறலாம் என்பது அரசியலுக்குப் புதிதாக வந்த விக்கினேஸ்வரனுக்கு புரியாமல் இருப்பது ஒன்றும் புதினமில்லை.

இருகட்சிகளைக் கொண்டிருந்த சிங்கள அரசியலில் தேர்தல்களில் ஆட்சியமைக்கப் போதிய பெரும்பான்மை இல்லாதபொழுது தமிழ்க் கட்சிகளுடன் ஒப்பந்தங்கள் செய்வதும் பின்னர் அவற்றைத் தூக்கி வீசுவதும் அக்கட்சிகளின் நிலைப்பாடு ஆகும். இதற்கு எக்கட்சியும் விதிவிலக்கல்ல.

எனவே நாடாளுமன்றம் செல்வதால் மட்டும் உரிமைகளைப் பெறலாம் என்ற கற்பனையில் விக்கினேஸ்வரன் வாழ்வது அரசியல் அறியாமையே ஆகும். அவர் முதலில் வேறெந்தப் பாதையை நீங்கள் சிபார்சு செய்கின்றீர்கள் என்று தன்னிடம் வினாவை வைத்தவரிடம் கேட்கிறார். (19ஆம் பக்கம் பார்க்க)

# 2019 எழுக தமிழும் படிப்பினைகளும்

சி.அ.யோதிலிங்கம்

கடந்த 16ஆம் திகதி திங்கட்கிழமை தமிழ் மக்கள் பேரவையினால் முன்னெடுக்கப்பட்ட 'எழுக தமிழ்' நிகழ்வு வெற்றிகரமாக நடந்தேறியுள்ளது. சுமார் ஆறாயிரம் வரையிலான மக்கள் இதில் கலந்து கொண்டனர். வெளிமாவட்டங்களிலிருந்து வந்தவர்களுக்காக மூவாயிரம் உணவுப்பார்சல்கள் விநியோகிக்கப்பட்டன. அன்றைய தினம் இடம்பெற்ற பகிஸ்கரிப்புக்கும் மக்கள் பூரண ஒத்துழைப்பினை வழங்கியிருந்தனர். முப்பதுக்கும் மேற்பட்ட பொது அமைப்புக்கள் பங்குபற்றியிருந்தன. முன்னைய எழுக தமிழில் பங்குபற்றிய தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியினர் கட்சி அரசியல் காரணமாக எதிர்ப்பிரச்சாரங்களை மேற்கொண்டு குழப்ப முயற்சித்த போதும் வெற்றிகரமாக நடந்தேறியமை குறிப்பிடத்தக்கதாகும்.

இந்த எழுக தமிழ் நிகழ்வு பலவகைகளில் முக்கியத்துவம் வாய்ந்தது. அதில் முதலாவது இன்றைய காலகட்டமாகும். அதாவது ஜனாதிபதித் தேர்தல் இடம்பெற இருக்கின்ற ஒரு காலட்டத்திலும், இலங்கைத்தீவு சர்வதேச அரசியலுடன் இறுக்கமாகப் பிணைக்கப்பட்டுள்ள ஒரு காலகட்டத்திலும் நடந்தேறியமை முக்கியமானதாகும். தமிழ் மக்களின் அரசியல் நிலைப்பாடுகளை தெளிவாக வரையறுத்து ஜனாதிபதி வேட்பாளர்கள் மத்தியிலும், சர்வதேச சமூகத்தின் மத்தியிலும் முன்வைக்க வேண்டிய தேவை இருந்தது. 'எழுக தமிழ் பிரகடனம்' இவற்றைத் தெளிவாக வரையறுத்து விளக்கியிருந்தது. முக்கியமாக அரசியல் தீர்வு தொடர்பில் தமிழ் மக்கள் பேரவை முன்வைத்த அரசியல் தீர்வு யோசனை நிறைவேற்றப்படல் வேண்டும் என்றும் அந்த அரசியல் தீர்வு தமிழ் மக்கள் மத்தியில் பொது வாக்கெடுப்புக்கு விடப்படுதல் வேண்டும் என்றும் கூறப்பட்டிருந்தது.

இரண்டாவது, தமிழ் அரசியல் ஒரு தேக்க நிலைக்குட்பட்டிருந்த காலத்தில் இவ் எழுக தமிழ் இடம்பெற்றிருந்தமையாகும். தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் இணக்க அரசியல் படுதோல்வியடைந்திருந்தது. சமஸ்டி கேட்டவர்கள் கம்ரெலியவுடன் திருப்திப்படும் அவலநிலைதோன்றியிருந்தது. மறுபக்கத்தில் மாற்று அரசியல் என செயற்பட்டவர்கள். கட்சி அரசியல் சாக்கடைக்குள் மூழ்கியிருந்தனர். அந்த சாக்கடை அரசியல் மக்கள் போராட்டத்தையே கொச்சைப்படுத்தும் அரசியல் கலாசாரத்தை தோற்றுவித்திருந்தது. இந்த நிலையில் மக்களும் அதிருப்திக்குளாகியிருந்தனர். இந்த அதிருப்திகளை நீக்கி புதிய அரசியல் கலாசாரத்தை நோக்கி நகர்வதாக இவ் எழுக தமிழ் அமைந்திருந்தது.


மூன்றாவது பாதிக்கப்பட்ட மக்கள் குறிப்பாக காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளும், அரசியல் கைதிகளின் உறவுகளும் பொது அரங்கில் தமது துயரங்களை உரத்து முன்வைப்பதற்கான சந்தர்ப்பமாக அமைந்தது. காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகள் தங்களது உறவுகளின் புகைப்படங்களுடன் பேரணியில் பங்குபற்றியிருந்தனர். அவர்களது கோஷங்கள் அனைவரையும் கலங்க வைக்கும் அளவிற்கு உணர்வு பூர்வமாக இருந்தன.

நான்காவது தாயகத்திற்கு சமாந்தரமாக கனடா, அமெரிக்கா, நியூஸிலாந்து ஜெனீவா போன்ற நாடுகளிலும் சென்னையிலும் எழுக தமிழ் நிகழ்வு நடத்தியமையாகும். இதன் மூலம் உலகத் தமிழர்கள் ஒன்றிணைந்து தமிழ் மக்களது அரசியல் நிலைப்பாட்டை உரத்துக் கூறுவதற்கான வாய்ப்பு ஏற்பட்டது. சர்வதேச ஊடகங்களும் இந் நிகழ்வுகளுக்கு முக்கியத்துவம் கொடுத்திருந்தன. அமெரிக்காவின் புகழ் பெற்ற ஊடகமான 'வோசிங்டன் போஸ்ற்' பத்திரிகை மிக விரிவாக எழுக தமிழ் நிகழ்வை பதிவு செய்திருந்தது. 'நியூயோர்க் ரைமஸ்' பத்திரிகையும் பதிவு செய்திருந்தது.

தமிழ் மக்கள் ஒரு சிறிய தேசிய இனம். அது தனது அக ஆற்றலை மட்டும் நம்பியிருக்க முடியாது. தனது புற ஆற்றலையும் வளர்த்துக் கொள்ள வேண்டும். தமிழ்மக்களைப் பொறுத்தவரை அடிப்படைச் சக்திகளாக இருப்பவர்கள் தாயக மக்களும் அதன் நீட்சியாக புலம் பெயர்ந்த நாடுகளில் வாழும் மக்களுமாவர். சேமிப்புச் சக்திகளாக இருப்பவர்கள் மலையகத் தமிழ் மக்கள் உட்பட உலகெங்கும் வாழும் தமிழக வம்சாவழித் தமிழர்களாவர். நட்புச் சக்திகளாக இருப்பவர்கள் சிங்கள முற்போக்கு ஜனநாயக சக்திகள் உட்பட உலகெங்கும் வாழும் முற்போக்கு ஜனநாயக சக்திகளாவர்.

இச்சக்திகளை உடனடியாக அணிதிரட்ட வேண்டும். உலகத்தமிழர்களை அணிதிரட்டுவதற்கு 'உலகத்தமிழ் தேசியம்' என்கின்ற கோட்பாட்டை கட்டியெழுப்பலாமா? என்பது பற்றியும் யோசிக்க வேண்டும். உலக முற்போக்கு ஜனநாயக சக்திகளை அணிதிரட்டுவதற்கு முற்போக்கு ஜனநாயக விழுமியங்களை தமிழ்த் தேசியம் உள்வாங்க வேண்டும். இதை விட மூன்று சக்திகளையும் ஒரே நேர்கோட்டில் கொண்டு வருவதற்கு நிலம் - புலம் - தமிழகம் இடையே ஒருங்கிணைந்த வேலைத்திட்டத்தை உருவாக்க வேண்டும்.

'எழுக தமிழ்' உலகத்தமிழர்களை இணைப்பதற்கான அத்திவாரத்தைப் போட்டுள்ளது. அடுத்த எழுக தமிழ் உலக முற்போக்கு ஜனநாயக சக்திகளையும் அணிதிரட்டுவதை நோக்கி முன்னேற வேண்டும்.




ஐந்தாவது பொது அமைப்புக்கள் உணர்வு ரீதியாக இணைக்கப்பட்டமையாகும். 30 க்கும் மேற்பட்ட பொது அமைப்புக்களுடன் நேரடியாக தொடர்பு கொண்டு உரையாடப்பட்டன. எழுக தமிழ் அரங்கிலும் அரசியல் கட்சிகளை விட பொது அமைப்புக்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. அரங்கில் நிகழ்வு தொடங்கி பிரகடனம் வாசித்து முடிந்து பொது அமைப்புகளின் சார்பில் யாழ் பல்கலைக்கழக பிரதிநிதி உரையாற்றி முடியும் வரை பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் மேடையில் கௌரவிக்கப்பட்டனர்.

தமிழ் மக்கள் பேரவை பொது அமைப்புக்களையும் அரசியல் கட்சிகளையும் கொண்ட ஆனால் பொது அமைப்புகளின் மேலாதிக்கமுள்ள ஒரு தேசிய அரசியல் இயக்கமாகும். பொது அமைப்புக்களின் மேலாதிக்கத்தை தொடர்ச்சியாகப் பேணுவதற்கு அவற்றின் உணர்வு பூர்வமான பங்களிப்பு மிகவும் அவசியமானதாகும். இந்த எழுக தமிழ் அதற்கான அத்திவாரத்தை உருவாக்கியுள்ளது.

இந்தத் தடவை எழுக தமிழ் பேரணியில் முன்னைய எழுக தமிழை விட குறைவான மக்களே கலந்து கொண்டனர் என்கின்ற விமர்சனம் இணையத்தளங்களிலும் முகப்புத்தகங்களிலும் முன்வைக்கப்படுகின்றது. அந்த விமர்சனங்களில் பெரும்பாலானவை கட்சி அரசியல் நோக்கில் முன்வைக்கப்பட்டவையாகும் பல இடங்களில் மிகைப்படுத்தியும் கூறப்பட்டிருக்கின்றன. காழ்ப்புணர்வின் அடிப்படையில் விமர்சனம் செய்வோர் தமிழ் அரசியலை பலவீனப்படுத்துகின்றனர் என்பதை நினைத்துப் பார்ப்பதில்லை. போராட்டங்களைப் பொறுத்தவரை யார் நடாத்தினாலும் ஆதரிக்க வேண்டும் என்கின்ற கலாச்சாரத்தை நாம் கடைப்பிடிக்க வேண்டும். கட்சி நலன்களின் அடிப்படையில் பார்க்கும் இந்த குழப்பும் கலாச்சாரம் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்.

சென்ற எழுகதமிழை விட இந்தத் தடவை மக்கள் குறைவாக பங்குபற்றியிருக்கலாம். அதற்குப் பல காரணங்கள் இருந்தன. அதில் முதலாவது தமிழ் அரசியலின் தேக்க நிலையாகும். இத் தேக்க நிலைக்கு கூட்டமைப்பின் இணக்க அரசியல், மாற்று அரசியல் சக்திகளிடையேயான முரண்பாடு, பொது அமைப்புக்களின் பலவீனம், அபிவிருத்தி அரசியல் மாயையின் வளர்ச்சி என்பவை காரணங்களாக இருந்திருக்கின்றன. மக்களை அக்கறையற்றவர்களாக மாற்றியதில் இரண்டு பாரம்பரிய கட்சிகளான தமிழரசுக் கட்சிக்கும் தமிழ் காங்கிரஸ் கட்சிக்கும் சமபங்கு உண்டு.

அரசியல் கட்சிகள் எப்போதும் தேர்தல் அரசியலையே இலக்காக கொண்டிருக்கும். அவர்களால் தமிழ் தேசிய அரசியலை வினைத்திறனுடன் கொண்டு செல்ல முடியாது. கட்சி அரசியலுக்கு அப்பாலான தேசியத் தளம் ஒன்றினாலேயே இதனை முன்னெடுக்க முடியும். தமிழ்த் தேசியத்தில் அக்கறையுள்ள பொது அமைப்புக்களை இணைப்பதன் மூலமே இதனைச் சாத்தியமாக்க முடியும். பொது அமைப்புக்கள் வலிமை பெற்றால் அரசியல் கட்சிகளையும் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்க முடியும். தமிழ் மக்கள் பேரவைக்கு அரசியல் கட்சிகளைக் கையாள்வதே இன்று பெரும் வேலையாகிவிட்டது.

தமிழ்த் தேசியச் சக்திகளைப் பொறுத்தவரை இன்றுள்ள மிக முக்கிய பணி தமிழ் மக்கள் பேரவையைப் பலப்படுத்துவதுதான். பேரவையில் தான் அரசியல் கட்சிகள் பொது அமைப்புக்கள் தமிழ்த்தேசியத்தில் அக்கறையுள்ள தனி நபர்கள் என மூன்று தரப்பும் பங்குபற்றக்கூடிய நிலை உள்ளது. இது விடயத்தில் தமிழ் மக்கள் பேரவைக்கு பல பணிகள் காத்திருக்கின்றன. அது முதலில் தன்னை கட்டுறுதியான அரசியல் இயக்கமாக வளர்த்தெடுக்க வேண்டும். பேரவைக்கான அமைப்பு விதிகளின் தொகுப்பு உடனடியாக வரையறுப்பட வேண்டும். அதில் பொது அமைப்புக்கள், அரசியல் கட்சிகள், தனிநபர்களின் வகிபாகம் தெளிவாக வரையறுக்கப்படல் வேண்டும். பேரவையின் அதியுயர் சபையில் பொது அமைப்புக்களும், தனிநபர்களும் இருக்க வேண்டுமே தவிர அரசியல் கட்சிகள் இருக்கக் கூடாது. அரசியல் கட்சிகள் உயர் சபையில் அங்கம் வகித்தால் தேர்தல் நலன் சார்ந்த கட்சி முரண்பாடுகள் பேரவையை முழுமையாகப் பாதிக்கும்.

இரண்டாவது பேரவை தனது கட்டமைப்புக்களை வட கிழக்கு முழுவதிலும் புலம்பெயர் நாடுகளிலும் விஸ்தரிக்க வேண்டும். பேரவையின் செயற்பாடுகள் யாழ்ப்பாணத்தை விட்டு ஏனைய மாவட்டங்களுக்கு இன்னமும் நகரவில்லை. யாழ்ப்பாணத்தில் கூட கட்டமைப்பு ஒழுங்காக இருக்கின்றது எனக் கூற முடியாது. கிளைக் கட்டமைப்புக்கள் ஒவ்வொரு பிரதேச செயலர். பிரிவிலும் உருவாக்கப்படல் வேண்டும்.

மூன்றாவது முழுநேர ஊழியர்களை செயற்படவிடுவதாகும். முழுநேர ஊழியர்கள் இல்லாமல் ஒரு தேசிய அரசியல் இயக்கத்தை ஒரு அடி கூட முன்னகர்த்த முடியாது. முழு நேர ஊழியர்கள் செயற்படுவதென்றால் அவர்களுக்கு உதவித்தொகை மாதாமாதம் வழங்கப்படல் வேண்டும். போக்குவரத்துச் செலவுகள் கூட்ட ஒழுங்குச் செலவுகள் வேறு செலவுகளும் இருக்கும். அதற்கும் வழி காணப்படல் வேண்டும். பேரவைக்கென ஒரு நிதியத்தை உருவாக்காமல் இதனைச் சமாளிக்க முடியாது. அந்த நிதியத்திற்கு புலம்பெயர் மக்களை மட்டும் நம்பியிருக்க கூடாது. வலுவான உள்ளூர் சேகரிப்புத் திட்டம் ஒன்றும் இருக்க வேண்டும். இந்தத் தடவை உள்ளூர் தரப்புகளும் வலுவான நிதிப்பங்களிப்பினைச் செய்திருக்கின்றன.

தற்போதய காலகட்டம் ஒரு தீர்க்கமான காலகட்டம். குறிப்பாக சர்வதேச அரசியலைக் கையாள வேண்டிய காலகட்டம். வலிமையும், நுட்பமான இராஜதந்திரமும் இல்லாமல் இக்கட்டத்தைக் கடக்க முடியாது.

தமிழ் மக்கள் பேரவை அதன் கடந்த காலத்தை மதிப்பீடு செய்வதற்காகவும் எதிர்காலம் பற்றிய பரிந்துரைகளைச் செய்வதற்காகவும் நிபுணர் குழு ஒன்றை உருவாக்கியுள்ளது. அது விரைவில் தனது அறிக்கையைச் சமர்ப்பிக்கும். அதன் பின்னர் பேரவை சீராக செயற்படுவதற்கு வாய்ப்புக்கள் உருவாகும்.

மொத்தத்தில் தமிழ் தேசிய சக்திகளுக்கு பணிகள் நிறையவே காத்திருக்கின்றன.

# செத்தும் கெடுத்தார்(ன்)
# கொலம்பே மேதாலங்காதர தேரர்

தயாளன்


செத்தும் கொடுத்தான் சீதக்காதி என்பார்கள். செத்தும் கெடுத்தார்(ன்) என செம்மலைப் பிள்ளையார் ஆலய வளாகத்தில் எரியூட்டப்பட்ட தேரரின் பெயர் வரலாற்றில் பதிவாகியுள்ளது.

'இந்த நாட்டில் பிக்குகளுக்கென தனிமரியாதை உள்ளது. இறந்த விகாராதிபதி கொலம்பே மேதாலங்காதர தேரரின் உடலை அமைதியான ஓர் இடத்தில் தகனம் செய்யவே பிக்குகள் தீர்மானித்திருந்தனர். ஆனால் தமிழ் அரசியல்வாதிகளின் பின்புலத்துடன் செயற்படும் சட்டத்தரணிகள் பிக்குகளை அவமதிக்கும் வகையில் செயற்பட்டார்கள். இந்தச் சட்டத்தரணிகள் தான் ஆலய நிர்வாகத்தினரையும் நீதிமன்றத்துக்கு இழுத்துச் சென்று இந்த விவகாரத்தை பெரிதுபடுத்தினார்கள்.' இவ்வாறு குறிப்பிட்டுள்ளார் பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதித் தேர்தல் வேட்பாளர் கோத்தபாய ராஜபக்ஷ. அவர் தனது நிலைப்பாட்டை மிகத்தெளிவாக வெளிப்படுத்தியுள்ளார். இதனை தாம் ஏற்றுக்கொள்வதாக டக்ளஸ், வரதர், பிள்ளையான், கருணா, வியாழேந்திரன், ஜெயானந்தமூர்த்தி, கோபாலகிருஷ்ணன்.... போன்றோர் கருதினால் தொடர்ந்தும் கோத்தாவுக்கு ஆதரவாக வாக்குக் கேட்கலாம். தேன் நிரம்பிய பாத்திரத்தினுள் விழுந்த வண்டு அதனைக் குடித்து குடித்தே வலம்வரும். மூழ்கும் ஆபத்து தெரிந்தாலும் கரையேற முயற்சிக்காமல் பாத்திரத்தை சுற்றிச் சுற்றியே வந்து சாகும். அதுபோன்றதே இவர்களின் நிலை.

ஜெனிவா விவகாரங்கள் ஒரு பக்கம் நடக்கின்றன. அங்கு தமிழர் தரப்பு இறுதிப் போரில் நடந்த விடயங்கள் தொடர்பாக சர்வதேச விசாரணையைக் கோருகிறது. அந்தக் கோரிக்கையை கவனத்தில் எடுக்கவேண்டிய நிலையை செம்மலை விவகாரம் உணர்த்துகிறது. பிக்குவின் உடலை எங்கே எரிப்பது என்பது தொடர்பாக நீதிமன்றம் தீர்ப்பை வழங்கியுள்ளது. அதனை மதிக்க பொதுபலசேன அமைப்பின் செயலர் ஞானசாரர் தலைமையிலான பிக்குகள் தயாராக இல்லை. ஏற்கனவே நீதிமன்ற அவமதிப்பு குற்றச்சாட்டில் சிறைத்தண்டனை பெற்றவர் ஞானசாரர்.


இந்த சர்ச்சையின் போது ஆலயப் பூசகரும், சட்டத்தரணிகள் சுகாஸ், கணேஸ்வரன் ஆகியோரும் தாம் பிக்குகளால் தாக்கப்பட்டதாக பொலிஸில் முறைப்பாடு செய்தனர். நீதிமன்ற உத்தரவைமீறி நடந்த தகன நடவடிக்கைக்கு முழுமையான பாதுகாப்புக் கொடுத்ததுடன் எதிர்ப்புக்காட்டிய மக்களை தள்ளிவிழுத்தி தாக்கியும் உள்ளனர் பொலிஸார். இதன்பின்னரும் அவர்களிடம் நீதிகிடைக்கும் என்று நம்பி முறைப்பாடு செய்திருக்கமாட்டார்கள். ஒரு பதிவுக்காகவே இந்நடவடிக்கை. தொல்பொருள் திணைக்களம், வனவள திணைக்களம் போன்றவை பௌத்த பீடங்களின் எண்ணக்கருத்தின் படியே செயற்பட்டு வருகின்றன. அவை சட்டத்தை ஒரு பொருட்டாகக் கொள்வதில்லை. மக்களின் மீள்குடியமர்வுக்கு இடைஞ்சல் கொடுக்கும் வனவள திணைக்களம் புலிகளால் நடப்பட்ட தேக்குமரங்களை தறித்துக் கொண்டு போனமை இந்நாட்டின் சட்டம் எப்படியெல்லாம் வளைக்கப்படுகிறது என்பதற்கான உதாரணம்.

தமிழர் இறுதி அஞ்சலி நிகழ்வுகளைச் செய்வதில் உணர்வு பூர்வமானவர்கள். நினைவு கூருவதும் அப்படியே. எல்லாம் சரியாக நடந்தால் உரிய கௌரவத்தை வழங்க தயங்காதவர்கள். யாழ்ப்பாண மக்களின் மனங்களை வென்ற அரசாங்க அதிபர் லயனல் பெர்னாண்டோவின் தாயாரின் மரணத்தின் போது இங்குள்ள ரக்ஷிகள் அனைத்தும் இறுதி ஊர்வலத்தில் கலந்து கொண்டன. பெருந்திரளான மக்கள் தனது தாயாருக்கு அஞ்சலி செலுத்தியதைக் கண்டு அரச அதிபர் நெகிழ்ச்சியுற்றார். இத்தனை பெரிய ஆயுதப் போராட்டம் நடந்த பின்னரும் ஒரு பொலிஸ் உத்தியோகத்தரின் மறைவுக்கு பெருமளவு தமிழர் அஞ்சலி செலுத்தினர். ஹேமச்சந்திர என்ற பொலிஸ் உத்தியோகத்தர் மேல்நீதிமன்ற நீதிபதி இளஞ்செழியனின் மெய்ப்பாதுகாவலராக இருந்தவர். அவரைப் பாதுகாப்பதற்காகவே தனது உயிரையும் இழந்தவர். இவரது குடும்பத்தினருக்காக தமிழர்கள் வீடமைத்துக் கொடுத்தனர். கிளிநொச்சியில் இருந்த பிக்கு இந்த யுத்தகாலத்திலும் அங்கிருந்து வெளியேறவில்லை. அவரைத் தமிழர் புரிந்துகொண்டனர். தமிழரின் உணர்வை அவர் புரிந்துகொண்டார். எதிலும் ஆக்கிரமிப்பு உணர்வுடன் செயற்படும் பொழுதே முரண்பாடு ஏற்படுகிறது என்பதை சிங்களத் தரப்பு என்று புரிந்து கொள்ளப் போகிறதோ?




முல்லைத்தீவு நிதிமன்றத் தீர்ப்பை பொலிஸார் மதிக்கவில்லை. பிக்குகளின் நிலைப்பாடும் அப்படியே. அவ்வாறாயின் நீதிமன்றத் தீர்ப்பை மதிக்கவில்லை என நீதியரசர் விக்னேஸ்வரனை எப்படித் தண்டிக்க முடியும் என்ற கேள்வி தமிழர் தரப்பில் எழுகிறது. இந்தியாவில் முதல்வர் ஜெயலலிதா ஒரு அமைச்சரைப் பதவிவிலக்குகிறேன் என அறிவித்தால் சரி. அந்த முடிவை ஆளுநருக்கு அறிவிப்பார். அதனை அவர் ஏற்பார். அமைச்சரவை இயங்கும் காலத்தில் ஒரு சம்பிரதாயபூர்வமான பதவிதான் ஆளுநர். அமைச்சரவை இல்லாத காலத்தில் தான் ஆளுநருக்கு அதிகாரம். ஆனால் இங்கோ....?

அனந்தியையும் சிவநேசனையும் அமைச்சர்களாக நியமிக்கிறேன் என முதல்வர் அறிவிக்கிறார். அதனை ஆளுநர் ஆட்சேபிக்க வில்லை. டெனிஸ்வரன் அமைச்சராக இல்லை என்று அவர் கருதியதாலேயே இவர்கள் இருவரையும் அமைச்சர்களாக ஏற்றார். இதில் கோளாறு யார் பக்கம் இருக்கிறது? மலேசியாவில் உரையாற்றிய தமிழக நடிகர் எம்.ஆர்.ராதா ஒரு விடயத்தைக் குறிப்பிட்டார். மன்னன் "அமைச்சரே! மாதம் மும்மாரி பொழிகிறதா?" எனக் கேட்பான். நாட்டில் மழைபொழிகிறதா இல்லையா என்று தெரியாமல் மன்னன் என்ன செய்து கொண்டிருந்தான் என்று குறிப்பிட்டு சில கொச்சையான விடயங்களையும் கேட்டார். அதுபோலவே வடக்கு ஆளுநர் கூவில் கள்ளினதோ, ஒடியல் கூழினதோ மயக்கத்தில் இருந்த போதா இந்த இருவரின் நியமனத்தை ஏற்றார்?



லயனல் பெர்னாண்டோ



ஹேமச்சந்திர

இலங்கை அரசியலமைப்பில் பல குளறுபடிகள் உண்டு. முன்பென்றால் ஒரு தொகுதியின் எம்.பி ராஜினாமா செய்தால் இடைத்தேர்தல் நடக்கும். இப்போது எதுவும் செய்ய முடியாது. ஈரோஸ் சார்பில் தெரிவான எம்.பிக்கள் ஒட்டுமொத்தமாக ராஜினாமா செய்த போது அடுத்த கட்டம் என்ன என்பதற்கு சட்டத்தில் இடமில்லை. எல்லாவற்றிலும் நிறைய ஓட்டைகளை வைத்துக்கொண்டு பிரச்சினை தமிழருக்கா சிங்களவருக்கா என்பதை மட்டுமே பார்த்து நீதி வழங்கப்படுவதாக மக்கள் கருதுவதை தவறாக எடுக்கமுடியாது தானே.

70களில் செம்மணியில் நாவற்குழியைச் சேர்ந்த பராசா என்ற இளைஞர் சுட்டுக்கொல்லப்பட்டார். கொலைகாரனான பொலிஸ் உத்தியோகத்தர் மீது வழக்குத் தொடர்ந்து விசாரணை நடந்து கொண்டிருந்தது. அப்போது பலாலிக்கு விமானம் மூலம் வந்த சட்டமாஅதிபர் திணைக்களத்தைச் சேர்ந்த அதிகாரி இவ்வழக்கை கைவிடுமாறு சட்டமாஅதிபரின் பணிப்பை நீதிபதியிடம் கையளித்தார். அதன் பிரகாரம் அந்தக் கொலைகாரர் விடுவிக்கப்பட்டார். உடனே அந்தக் கொலையாளியை தமது தோளில் சுமந்துகொண்டு ஜெயவேவா கோசத்துடன் நீதிமன்றச் சூழலில் ஊர்வலம் போனார்கள் சக பொலிஸார். அன்றே தமிழர்கள் சிறிலங்காவில் நீதிகிடைக்கும் என்ற நம்பிக்கையை இழந்தனர். அது முல்லைத்தீவு வரை தொடர்கிறது. இதனால் தானே தமிழர் சர்வதேச விசாரணையைக் கோருகின்றனர்.

துன்னாலை செல்வம்

# தொடரும் பிக்குகளின் அடாவடி

நீதிமன்றத் தீர்ப்புக்கு கட்டுப்படும் நாடுகள் சிறந்த நாடுகளாகவும் பொருளாதாரத்தில் முன்னேறிச் செல்லும் நாடுகளாகவும் விளங்குகின்றன. அந்த நாடுகளில் நீதிமன்றங்கள் நாட்டைப் பாதுகாப்பதில் சட்டம் ஒழுங்கைப் பேணுவதில் முக்கிய பங்கை வகிக்கின்றன. அதனால் தான் பல நாடுகள் தரவரிசையில் முன்னேறிக் கொண்டிருக்கின்றன. இந்த நாடுகளின் பட்டியலுக்குள் செல்ல முடியாத சில நாடுகளில் இலங்கையும் ஒன்றாகும். நீதித்துறை அறிவிப்பை அடுத்து அந்த தீர்ப்பை கடைப்பிடிக்க வேண்டியது கடமையாகும். அப்பொழுது தான் நாட்டில் குற்றங்கள் நீங்கி சிறந்த நாடாக ஏனைய நாடுகளுடன் ஒப்பிட முடியும் என்பது உண்மை.

பௌத்த துறவிகள் என்பவர்கள் அனைத்தையும் துறந்து வன்முறையில்லாமல் அமைதியான நாட்டை உருவாக்குவதற்கு முன்னிற்பவர்கள் என்பது பல நாடுகளில் உள்ள பௌத்த துறவிகளின் செயற்பாடுகளில் இருந்து தெரிகிறது. ஆனால் இலங்கையில் உள்ள சில பௌத்த துறவிகளால் நாட்டை நாசமாக்கும் இனவெறியையும் மதவெறியையும் தோற்றுவிக்கும் பிரச்சினை எழுகிறதென்றால் அது சிந்திக்க வேண்டிய விடயமாகும். பௌத்த மதம் போதிக்கும் நற்சிந்தனைகளை கடைப்பிடிக்கும் பிக்கு சிறந்த சமுதாயத்தை உருவாக்குவதில் முன்னிற்பர் என்பது வரலாறு.

முல்லைத்தீவில் கடந்த வாரம் பிக்குகளால் பிரச்சினை ஒன்று எழுந்துள்ளமை எல்லோருக்கும் தெரியும். அதாவது புற்றுநோய் காரணமாக இறந்த பிக்குவின் உடலை நீராவியடிப் பிள்ளையார் ஆலய சூழலில் பிக்குகள் தகனம் செய்ய முற்பட்ட போது பிரச்சினை எழுந்துள்ளது. பௌத்த மத வழியில் வந்தவர்கள் என்றால் இன்னொரு புனித மதத்துக்குள் தங்கள் மத காரியங்களை செய்யமாட்டார்கள்.

முல்லைத்தீவு கடற்படை முகாமுக்கு அருகில் உள்ள கடற்கரையாக உள்ள இடத்தில் இறந்த பிக்குவான மேதாலங்கார கீர்த்தியின் உடலை தகனம் செய்யுமாறு நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ள போதிலும், நீராவியடிப் பிள்ளையார் ஆலயத்திற்குப் பின்புறமாகவுள்ள குளக்கரையில் தகனம் செய்துள்ளனர். நீதிமன்றத் தீர்ப்பெல்லாம் ஒரு பொருட்டே அல்ல அவர்களுக்கு என்பது போல் பிக்குகளின் செயற்பாடுகள் அமைந்துள்ளன.

இந்த ஆலய வளாகத்தினுள் அடாத்தாக குருகந்த புராண ரஜமகா பௌத்த விகாரை எனும் பெயரில் விகாரை அமைத்து அங்கு தங்கியிருந்த சர்ச்சைக்குரிய இந்த பிக்குவே புற்று நோய் காரணமாக கொழும்பில் உயிரிழந்தார். அவருடைய பூதவுடலை முல்லைத்தீவுக்கு கொண்டு வந்து நீராவியடி பிள்ளையார் ஆலயத்தை அண்மித்த பகுதியில் இறுதிக் கிரியைகளை முன்னெடுத்து உடலை தகனம் செய்ய ஏற்பாடுகள் நடைபெற்றன.






இதனை அடுத்து முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்திற்குச் சென்ற பிள்ளையார் ஆலயத்தைச் சேர்ந்தவர்கள், பௌத்த பிக்குவின் உடலை இந்து ஆலயத்திற்கு அருகில் தகனம் செய்வது இந்து மதத்தை அவமதிக்கும் செயற்பாடு எனவும் அதனால் முல்லைத்தீவு மாவட்டத்தில் அமைதியின்மை ஏற்பட சந்தர்ப்பங்கள் உள்ளமையால், முல்லைத்தீவில் பௌத்த பிக்குவின் உடலை தகனம் செய்ய அனுமதிக்க கூடாது என முறைப்பாடு ஒன்றினைப் பதிவு செய்தனர். அதுதொடர்பில் முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றில் பொலிஸார் அறிக்கை தாக்கல் செய்தனர்.

நிரந்தர நீதிவான் விடுப்பில் இருந்தமையால் பதில் நீதிவான், பௌத்த பிக்குவின் உடலை முல்லைத்தீவில் புதைக்கவோ, தகனம் செய்யவோ முடியாது என இடைக்காலக் கட்டளை வழங்கியிருந்தார். இந்த நிலையில் வழக்கு நிரந்தர நீதிவான் லெனின்குமார் முன்னிலையில் விசாரணைக்கு வந்தது. இரு தரப்பிலும் சட்டத்தரணிகள் முன்னிலையாகி வாதப் பிரதிவாதங்களை முன்வைத்தனர்.

நீதிமன்ற அவமதிப்பு வழக்கில் ஏற்கனவே சிறையில் இருந்த ஞான சாரதேரர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தலையீட்டுடன் விடுவிக்கப் பட்டார். இப்போது அவர் மீளவும் நீதி மன்ற தீர்ப்பை புறந்தள்ளி நீராவியடி பிள்ளையார் ஆலயத்தின் தீர்த்த கரைக்கு அருகாமையில் பிக்குவின் உடலை தகனம் செய்வதற்கு முன்னின்றுள்ளார். சட்டத்தை மீறிய அவரையும் அவரது சகாக்களையும் கைது செய்யாமல் பொலிசார் வேடிக்கை பார்த்தனர். வவுனியா வெடுக்குநாரி மலையில், ஆலயத்திற்கு செல்ல ஒரு ஏணியை பொருத்தியதற்கு பல மாதங்களாக ஆலய நிர்வாக சபையை பொலிஸ் நிலையத்திற்கு அழைத்த பொலிஸார் இந்த அடாத்தான சம்பவத்தை கைகட்டிப் பார்த்துக் கொண்டிருந்தது மட்டுமல்ல பிக்குகளுக்குப் பாதுகாப்பும் வழங்கினர்.

தமிழ் மக்கள் என்றால் சிறிலங்காவின் நீதித்துறை உடனடியாகவே நீதியை நிலை நாட்டியிருக்கும். வீடு வீடாகச் சென்று கைதுகள் நடந்திருக்கும். சிறிலங்காவில் நீதித்துறையை மதிப்பதற்கு பௌத்த பேரினவாதம் தயாராக இல்லை என்பது இந்த சம்பவங்களில் இருந்து தெரிகிறது.

ஆட்சிக்கவிழ்ப்பிற்கு எதிராக நீதிமன்றம் சென்று அரசாங்கத்தை காப்பாற்றியவர்களால், அரசாங்கத் துக்கு முண்டு கொடுக்கும் தமிழ்க் கட்சிகளால் என்ன செய்ய முடிந்தது. இவ்வாறான விடயத்தில் தாம் சார்ந்த மக்களுக்கான எதனையும் இவர்களால் செய்ய முடியாது என்பது இந்த சம்பவத்தில் இருந்து நன்கு உணர்த்தியிருக்கின்றது. வெலிக்கடைப் படுகொலைகளும், ஜூலை இனப்படுகொலையும் காவல் இயந்திரம் கைகட்டி வேடிக்கை பார்க்க பிக்குகள் ஆதரவுடன் நடந்தேறிய அவலத்தை இங்கு நாம் நினைவு கொள்ளவேண்டும். வடக்கு கிழக்கில் முளைத்திருக்கின்ற அனைத்து பௌத்த விகாரைகளுக்கும் பின்னால் வரப்போகிற பிரச்சினை இதுதான்.

ஏற்கனவே கடந்த வருடம் யாழ்ப்பாண முற்றவெளியில் இப்படியொரு பிரச்சினை வந்த போது மக்கள் திரண்டு எதிர்ப்பைக் காட்டியிருந்தால் இன்று இந்த சம்பவம் நடந்திருக்க வாய்ப்பில்லாமல் போயிருக்கும். நாளைக்கு எலும்பு, தாடை, பல் என பிக்குமாரின் உடலெச்சங்களைக் கொண்டு எழுப்பப்படப்போகும் தூபிகளுக்குரிய காணிகளை வழங்கவும் தமிழர்கள் இப்போதே தயாராக வேண்டும்?

சட்டத்தை மீறிய பிக்குகள் மீது முல்லைத்தீவு நீதிமன்றம் கடுமையான நடவடிக்கை எடுக்கப் போகின்றதா? சிறிலங்காவில் நீதித்துறையை மதிப்பதற்கு பௌத்த பேரினவாதம் தயாராக இல்லாத நிலையில் நீதி தேவதையின் ஆன்மா அவமதிக்கப்பட்டுள்ளது. சிறிலங்காவை சர்வதேச அரங்கில் தலைகுனிய வைத்துள்ளது.


அன்பு மார்க்கத்தின் பேரால் அடாவடித்தனம் புரிந்துவரும் இனவாதம் தலைக்கேறிய பௌத்த அடிப்படைவாதிகளான பிக்குகளால் உண்மையான பௌத்த மக்கள் வரலாற்று அவமானங்களை சுமக்கிறார்கள் என்பதே உண்மை.

பிக்குகளின் அடாவடித்தனத்தால் வெட்கத்தால் தலைகுனிகிறோம் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கூறியிருப்பதை பேரினவாதம் ஏற்றுக் கொள்ளுமா என்பதே இன்றைய கேள்வி?

ஆலயக் கேணிப் பகுதியில் மேதாலங்க தேரரின் உடலை எரிப்பதற்கு தமிழ் மக்கள் மற்றும் சட்டத்தரணிகள் எதிர்ப்பு வெளியிட்ட போது அங்கிருந்த தேரர் ஒருவர் கடும் ஆவேசத்துடன் 'நீதிமன்ற உத்தரவு சரி, இலங்கையில் தேரர்களுக்கு முன்னுரிமை கொடுக்க வேண்டும் என்று தெரியாதா?. இது ஆலயம் இல்லை! இது பௌத்த பூமி' என்று பொலிஸார் முன்னிலையில் இனவாதம் கக்கியுள்ளார்.

பகலவன்

# கறிவேப்பிலை அரசியல் தமிழருக்குத் தேவைப்படாது!



தங்களது தேவை முடிந்ததும் சிறுபான்மையினரை குறிப்பாக தமிழரை எட்டி உதைப்பது சிங்களத் தலைவர்களின் வாடிக்கை. குத்துக்கரணம் அடி பிரதட்டை செய் என்றால் கண்ணை மூடிக்கொண்டு செய்ய வேண்டியது சிறுபான்மையினரின் கடமை என சிங்களவர்கள் கருதுகின்றனர். ஜனாதிபதித் தேர்தலில் வெற்றியீட்டியதும் தனது வெற்றிக்கு உதவியோர்களின் பெயர்களை மைத்திரி பட்டியலிட்டார். இந்த உரையில் சம்பந்தன் உட்பட தமிழரின் பெயர்கள் குறிப்பிடப்படவில்லை. ‘அவர்களின் பரவணிப்புத்தி இது” என்று சாடினார் மனோகணேசன். சமாதானத்தைக் கொண்டு வருவேன் என்றார் சந்திரிகா. சிறுபான்மையினரும் யுத்தம் குறித்த பீதியில் இருந்த சிங்களவரும் அவருக்கு வாக்களித்தனர். இதுவரை எந்த ஜனாதிபதியும் பெற்றிருக்காத வகையில் 62.28 வீத வாக்குகளை அவர் பெற்றார். குறிப்பாக பட்டிருப்பு தொகுதியில் மிகஅதிக வீதமான வாக்குகள் அவருக்கு கிடைத்தன. மட்டு.மாவட்ட அளவில் 87.30 வீத வாக்குகள் அவர் பெற்றார். அவர் வெற்றிபெற்றதும் சமாதானம் ஏற்படுமா என்ற தொனியில் பி.பி.சி அப்போது ஐ.தே.க.வில் அங்கம் வகித்த அஸ்வரிடம் கேள்வி எழுப்பியது. அதற்கு அவர் ‘சந்திரிகா வெற்றிபெற்றதும் சமாதானம் தேவைதான்: அதற்கு எப்படியும் சமாதானம் என்று பொருளல்ல” என்று கூறியதை சுட்டிக்காட்டி அவநம்பிக்கையை வெளியிட்டார். அதுபோலவே நாகர்கோயில் பாடசாலை, சென்பீற்றேர்ஸ் தேவாலயம் போன்றவற்றின் மீதான குண்டுவீச்சுகள், படுகொலைகளுடன் செம்மணிபுதைகுழி விவகாரத்தையும் வரலாறு பதிவு செய்தது.

தமிழ்கள் வந்தேறுகுடிகள் என்றார் சந்திரிகா. இது குறித்து அப்போதைய தமிழ் அரசியல் தலைமை மௌனமாக இருந்தது. அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் கட்சித் தலைவர் குமார் பொன்னம்பலம் இக்கூற்றுத் தொடர்பாக சந்திரிகாவுக்கு பகிரங்க கிடித வடிவில் பதில் அனுப்பினார். இவ்விடயம் சண்டே லீடர் பத்திரிகையில் வெளியானது. ‘அன்புள்ள ஒன்றுவிட்ட சகோதரிக்கு...” என்று ஆரம்பித்த இக்கடிதத்தில் நீங்களும் நானும் உறவினர் எனக் குறிப்பிட்டார். சந்திரிகாவின் பரம்பரை நீலாப்பெருமாள் என்பவருடன் தொடர்புபட்டது என்பதைச் சுட்டிக்காட்டினார். அதன் வம்சவிருட்சத்தை படமாகவும் காட்டினார். கண்டிய அரசர் ஸ்ரீவிக்கிரமராஜசிங்கரின் குதிரை லாயத்தை பராமரித்தவர்கள் ரத்வத்தைப் பரம்பரையினர் என்பதையும் வெளிப்படுத்தினர். ரத்வத்தைக் குடும்பத்தை பிரமாண்டாகப் பார்த்த அனைவருக்கும் சில உண்மைகள் புரிந்தன.

இக்காலத்தில் டெனிஸ், கிரிபேர்ட், சீவலி... எனப்பல ரத்வத்தைகள் உயர் பதவியில் இருந்தனர். பிரதிப் பாதுகாப்பு அமைச்சராக இருந்து யுத்தத்தை வழிநடத்திய அனுருத்த ரத்வத்தை இவரது தாய் மாமனாரே.

ஜனாதிபதிக்கென உத்தியோகபூர்வ மாளிகை இருந்தும் பிரேமதாசா நிறைவேற்று ஜனாதிபதியாக இருந்து ஆட்சி செய்த கதிரையில் அமர அவர் விரும்பவில்லை. அது தனது பரம்பரை பெருமைக்கு இழுக்கு என கருதியிருப்பார் போல உள்ளது. அதனால் அலரிமாளிகையில் இருந்தே ஆட்சி செய்தார்.

ஒல்லாந்தர் காலத்தில் மது உற்பத்தி நிலையமாக இருந்த இடத்திலேயே அலரி மாளிகை உள்ளதாக தயாசிறி ஜெயசேகர ஐ.தே.க எம்.பியாக இருந்த போது பாராளுமன்ற உரையில் குறிப்பிட்டிருந்தார். அதனால் தானோ என்னவோ அலரி மாளிகையில் இருந்து எடுக்கப்படும் முடிவுகள் பெரும்பாலும் தள்ளாட்டமாகவே உள்ளன.

ரணிலைப் பதவிநீக்கம் செய்து மஹிந்தவை பிரதமராக மைத்திரி நியமித்ததும் ரணிலின் பதவியை தக்கவைக்க தீவிர முயற்சி மேற்கொண்டார் சுமந்திரன். அந்தச் சூடு ஆறமுன்னரே நன்றி மறந்து சம்பந்தனின் எதிர்க்கட்சித் தலைமையைப் பறித்தது ரணில் - கரு அணி. ஆனால் இவர்களுக்கு சூடு சுரணை இருக்க வேண்டுமே. சஜித்துக்கு ஜனாதிபதி வேட்பாளர் நியமனம் வழங்கக்கூடாது; நிறைவேற்று அதிகார முறைமையை நீக்க வேண்டும் என்பதில் ரணிலைவிட தீவிரமாக இருந்தார் சுமந்திரன். இவருக்கு தமிழ்த் தேசியம் தான் சுத்தசூனியம் என்றிருந்தோம். சிங்களவர்களையும் விளங்கிக் கொள்ளவில்லை இவர்.

மகளின் சிறைச்சாலை GH வாட்டுக்குச் சென்ற இவர் தான் கோத்தாவுடன் டின்னரில் கலந்து கொள்வதாகவும் அரசியல் கைதிகள் விவகாரம் தன்னிடமே ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும் வேறு எவரிடமும் இவ்விவகாரம் தொடர்பாக அனுகவேண்டாம் எனவும் முழங்கித்தள்ளினார். கைதிகள் யாரும் கேட்காமலேயே தான் நாமல், கருணாவுடன் (எம்.பிக்கள் அணி பிரித்து) கிரிக்கெட் விளையாடியதாகவும் இது தனது இராஜதந்திரம் எனவும் தனது முதுகில் தானே தட்டிக்கொண்டார். கைதிகளோ ‘நாங்கள் சிறையில் இருக்கிறோம் எமது மனைவி பிள்ளைகள் வறுமையில் வாடுகின்றனர். வெளிநாடுகளில் உள்ள எம் உறவுகளுடன் தொடர்புகொண்டு இவர்களுக்கு வாழ்வாதார உதவி செய்ய முடியுமா?” எனக் கேட்டனர். அதற்கு ‘முன்பென்றால் புலிகள் இருந்தனர். கேட்டவுடன் பணம் வாங்க முடியும். இப்போது நிலைமை அவ்வாறு இல்லை. எமது கட்சியிலும் நிதியில்லை. தேர்தல் செலவுக்கு கூட பணமில்லாமல் கஸ்ரப்பட்டோம்” என்று பஞ்சப்புராணம் பாடினார் சுமந்திரன். தமது குடும்பத்தினரின் வறுமையையும் தேர்தல் செலவுக்கு பணமில்லை என்பதையும் ஒரே தராசில் வைத்துப் பார்க்கும் ஒருவரிடம் தமது விடயத்தை கூட்டமைப்பு ஒப்படைத்திருப்பதால் என்ன நடக்கப் போகின்றது என்பதை உணர்ந்து கொண்டனர் கைதிகள்.

மலையக கட்சிகளும் முஸ்லிம் அமைப்புகளும் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை சிறுபான்மையினருக்கு பாதுகாப்பானது என்ற நிலைப்பாட்டில் உள்ளனர். நாடு முழுவதிலும் உள்ள சகல இன மக்களும் தீர்மானிக்கும் சக்தியாக இந்த முறைமை உள்ளது. அதனை மாற்றுவது ஆபத்தானது என அவர்கள் கருதுகின்றனர்.

‘ஜனாதிபதி தேர்தல் முறைமையை மாற்ற ரணில் மேற்கொண்ட முயற்சி பால்பொங்கி வரும் போது பானையை உடைத்த செயலாக இருக்கிறது. சிறுபான்மை மக்களின் பிரச்சினை நேரடியாகத் தீர்க்கக்கூடியதாக ஜனாதிபதி முறை காணப்படுகிறது. இதனை சிறுபான்மை மக்களும் விரும்புகின்றனர். இம்முறைமையை ஒழிப்பதற்காக சமர்ப்பிக்கப்பட்ட பிரேரணைக்கு எனது எதிர்ப்பைத் தெரிவிக்கிறேன் என்று குறிப்பிட்டுள்ளார் மலையக மக்கள் முன்னணியின் தலைவர் வே.ராதாகிருஸ்ணன். ஹக்கீம் போன்றோரும் இந்நிலைப்பாட்டிலேயே உள்ளனர்.

உதாரணத்துக்கு ஒரு விடயத்தைக் குறிப்பிடலாம். சிங்களம் மட்டும் - சிங்கள ஸ்ரீ விவகாரம் பற்றி பொதுவாக அனைவரும் அறிந்திருப்பர். இனஅழிப்பின் முக்கிய அல்லது ஆரம்ப புள்ளியாக இது அமைந்தது. தமிழரின் மார்பில், முதுகில் சிங்கள ஸ்ரீயை கம்பியால் காய்ச்சிச் சுட்டனர் இனவெறியர். வாகனங்களில் சிங்கள ஸ்ரீ பொறிக்கப்பட்ட இலக்கத்தகடுகளே காணப்பட வேண்டும் என உத்தரவு வந்தது. தமிழ் எம்.பிக்கள் சிலர் தமது எதிர்ப்பை வெளிப்படுத்தும் முகமாக தமிழ் ஸ்ரீ உண்மையில் அது சமஸ்கிருதம்) மற்றும் ஈ.எல் போன்ற எழுத்துகள் பொறித்த வாகனங்களில் வலம்வந்தனர். சிங்களம் மட்டும் சட்டத்தைக் கொண்டு வந்த பண்டாரநாயக்கா மட்டக்களப்பில் ராசதுரையின் தமிழ் எழுத்து பொறிக்கப்பட்ட மோட்டார் வண்டியில் ஏறவேண்டிய நிலைமை ஏற்பட்டது. பிரேமதாஸா ஆட்சிக்கு வந்ததும் ஸ்ரீ பிரச்சினைக்கு முடிவு கட்டினார். ‘இது என்ன வீணாக இடத்தைப் பிடிக்கிறது. இனிமேல் ஸ்ரீ க்குப் பதிலாக சிறிய கோடு போடுங்கள்” என உத்தரவு பிறப்பித்தார். உடனடியாக அவரது உத்தரவு அமுலாகியது. இதுவே பாராளுமன்றத்தில் ஒரு பிரேரணையாகக் கொண்டு வந்திருந்தால் என்ன நடந்திருக்கும். சேலையை வரிந்து கட்டிக்கொண்டு கடுமையான எதிர்ப்பை வெளியிட்டிருப்பார் சிறிமா. தனது கணவர் கொண்டு வந்த சிங்களம் மட்டும் சட்டத்தை புறந்தள்ளுவதாக கூப்பாடு போட்டிருப்பார். அப்போது அரசியலில் நடந்ததெல்லாம் சுமந்திரனுக்கு தெரியாது என்று நம்புவோமாக. எப்போதுமே தமிழர் தரப்புக்கு செய்ய வேண்டியவற்றை செய்யாமல் இருப்பதற்காக எதிர்க்கட்சியினரின் எதிர்ப்பை காரணம் காட்டி தப்பித்துக் கொள்வது சிங்கள ஆட்சியாளரின் வழமை. சுமந்திரன், சஜித்துக்கும் நிறைவேற்று அதிகாரத்துக்கும் எதிராகச் செலவு செய்த நேரத்தை அரசியல் கைதிகளின் விடுதலைக்கு பயன்படுத்தியிருந்தார் எனில் அனைத்துக் கைதிகளும் விடுதலையாகியிருப்பர். கோத்தாவுடன் நிற்கும் டக்ளசும் கைதிகள் விடுதலையை வலியுறுத்துகின்றார். 20 வருடங்களுக்கு மேல் சிறையில் இருந்த அரசியல்கைதி லோகநாதனுடன் மகனின் சிறையில் பழகிய நாமல் அவரது குடும்பத்தினருக்கு கிளிநொச்சியில் வீடமைத்துக் கொடுத்துள்ளார். தனது திருமணத்துக்காக தனிவாகனம் அனுப்பி லோகநாதன் குடும்பத்தினரை வரவழைத்துள்ளார். அவர் இன்றைய நிலையில் அரசியல் கைதிகளின் விடுதலையை எதிர்க்கப்போவதில்லை என நம்பலாம். தனிநபர்களின் முடிவுகள் அரசியலில் சாத்தியமாவது வழமையே. சம்பந்தனும் சுமந்திரனும் பிச்சைக்காரரின் புண்போல இவ்விடயத்தைப் பேண விரும்புவதாக தோன்றுகிறது. ஞானசாரதேரருக்கு உள்ள உரிமை ரகுபதிசர்மாவுக்கு வந்துவிடக் கூடாது என எண்ணுகின்றனர் போல உள்ளது.

# இந்து அதிபர் கைது பிறருக்கு ஒரு பாடமாகட்டும்

லம்போதரன்

இந்துக்களின் கலாசார பண்பாட்டைப் பறை சாற்றுகின்ற முன்னோடிகளில் ஒன்றாகத் திகழ்வது யாழ். இந்துக் கல்லூரி. கம்யூனிஸ்ட் கார்த்திகேசு போன்றோர்களால் வழி நடத்தப்பட்டதோடு மட்டுமல்லாது பல பிரபலங்களை உருவாக்குவதில் பிரபல்யம் பெற்றதொரு கல்வி நிறுவனம் என்று பலராலும் போற்றப்படுகின்ற பாடசாலை. திரு. கார்த்திகேசு அவர்கள் பற்றிச் சுருக்கமான பதிவொன்று உண்டு. தனது பாடசாலைச் சம்பளத்தை எடுத்து மாஒணவர்களுக்குக் கல்விக்கான உதவிகளைச் செய்வதில் அவருக்க நிகர் அவரே என்று சொல்லப்படுவது வழமை. அப்படிப்பட்ட பெருமை மிக்கோரால் வழி நடத்தப்பட்ட பாபடசாலை இத்துணை சிறுமைப்பட்டு நிற்பதுக்குரிய காரணம் அதிபர் ஆசனத்துக்குப் பொருத்தமற்ற ஒருவரை அதிபராக்கியதே என்று சொல்லப்படுகிறது. அவர் பற்றிய முகநூல் பதிவுகளில் நாம் கண்டவற்றையும் ஆதாரமாக் கொண்டே இக்கட்டுரை எழுதப்படுகிறது.

பல காலம் உட் புகையாக இருந்த இந்துக் கல்லூரி விவகாரம் தற்போது சட்டரீதியாக வெளிக் கொண்டு வரப்பட்டிருக்கிறது. இன்று நேற்றல்ல, பல ஆண்டுகளாக அதிபர் இந்துக் கல்லூரியில் மாணவர்களைப் புதிதாக இணைப்பதற்குக் கையூட்டுப் பெறுகிறார் என்ற விடயம் கல்லூரி மட்டத்திலும், பழைய மாணவர்கள் மட்டத்திலும், திணைக்கள மட்டத்திலும் மட்டுமல்ல பொதுமக்கள் மத்தியிலும் வலுவாகவும், விரிவாகவும் பேசப்பட்டதொரு விடயம் எனலாம். இரண்டு வருடங்களுக்கு முன்னர் இச் சம்பவம் இணைய தளத்தில் பத்தி எழுத்தாக எழுதப்பட்டு உலகளாவிய ரீதியில் உரையாடப்பட்டபோது, கல்லூரிக்கு அவப்பெயர் ஏற்பட்டுவிடும் என்று சுட்டிக்காட்டப்பட்ட நபர்களால் அழுத்தம் கொடுக்கப்பட்டு பின்னர் அது இணைய தளத்திலிருந்து நீக்கப்பட்டு விட்டது. அப்போது அக்கறை கொண்டு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தால் பலர் பாதிக்கப்பட்டிருக்கமாட்டார்கள். பாடசாலையும் தரமான மாணவர்களை மட்டும் உள்வாங்கித் தனது தரத்தைப் பேணி இருக்கும்.

தற்பொழுது இந்துக் கல்லூரி அதிபர் நீக்கப்பட்ட விடயத்தைப் பெரிது படுத்துவதல்ல எமது நோக்கம். அவர் இலஞ்ச ஆணைக் குழுவினால் தகுந்த ஆதாரத்தோடு கைது செய்யப்பட்டிருக்கிறார். அவரைச் சட்டம் என்ன செய்யுமோ? அதை அது பார்த்துக்கொள்ளும். ஆனால், அதைத் தொட்டு ஒரு முக்கியமான விடயத்தைக் குறிப்பிடுவது காலத்தின் தேவை என எண்ணுகிறேன். அதிபரின் கைதுக்குப் பிறகு சின்மயா மிஷன் சுவாமி மற்றும் சிவ பூமியின் தலைவரான ஆறு.திருமுருகன் ஆகியோர் பாடசாலைப் பெயரைக் காக்க உதவுமாறு அறிக்கை விடுத்துள்ளனர். வந்த பின் காப்போராகச் செயற்பட்டிருக்கும் அவர்கள் இதுவரை வாளாதிருந்ததேனோ? இத்தனை காலமும் இப் பாடசாலையோடு தமது உறவை நன்கு பேணியவர்கள் இவர்கள். பாடசாலையில் நடைபெற்ற பல நிகழ்வுகளில் இவர்களைப் பார்த்திருக்கிறேன். எனவே இவர்களுக்கு இந்த விடயம் ஏற்கனவே தெரிந்தும் தெரியாதவர்கள்போல் நடந்து கொண்டுள்ளார்களா? எனக் கேள்வி எழுப்பத் தோன்றுகிறது.

அடுத்ததாக இந்த அதிபருக்கு உண்டான அரசியல் பக்க பலத்தையும், அரசியல் செல்வாக்கையும், திணைக்கள மட்டத்தினாலான நல்லுறவையும் பற்றி மக்கள் பேசத்தொடங்கியிருக்கின்றனர். அவர் தனக்குண்டான இத்தகைய செல்வாக்கினாலேயே பகிரங்கமாகக் கையூட்டம் பெற்றுக் கொண்டு வந்திருக்கிறார என்ற விடயத்தை பின்வரும்



சம்பவங்கள் மிகவும் வலுவாக்ககின்றன.

கையூட்டம் பெற்ற காணொளியின்படி அவர் மாணவனொருவரைப் புதியதாக இணைத்துக்கொள்ள ஒருவரிடம் கையூட்டம் பெறும்போது வலு சர்வசாதாரணமாக உரையாடுகிறார். தான் கொடுத்த பணத்துக்குப் பற்றுச் சீட்டுத் தருவீர்களா? என்று கேட்டதற்கு "இலஞ்சப் பணத்துக்கு யாராவது பற்றுச் சீட்டுத் தருவார்களா?" என்று அதிபர் அவரை எவ்வித பயமுமின்றி நகைச்சுவையாகவும், அதே வேளை பகிரங்கமாகவும் கேட்கிறார். அடுத்து இலஞ்ச ஊழல் கமிஷனால் அவர் கைதுசெய்யப்பட்டபோது அவரது பாடசாலை ஆசிரியர்கள் இலஞ்ச ஊழல் கமிஷன் அதிகாரிகளிடம் "இன்னும் ஆறு மாதங்களில் அவர் ஓய்வு பெறப் போகிறார். எனவே அவரை விட்டுவிடுங்கள்" என்று மன்றாடினராம். அதற்கு அதிபர் "நான் வருகின்ற திங்கட்கிழமை பாடசாலையில் நிற்பேன் பயப்படாதீர்கள்" என்று வீரவசனம் பேசிவிட்டுப் போயிருக்கிறார்.

எனவே தான் எந்தவிதத்திலும் கையூட்டுப் பெறலாம். கைது செய்யப்படமாட்டேன் என்றதில் அதிபர் நிமலன் உறுதியாகவிருந்ததாகக் கல்லூரி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. ஆசிரியர் தொழிலில் இருந்தபோதே இவர் ஒரு பிரபல்யமான காணித் தரகர் எனப் பலரால் அறியப்பட்டவர். பின்னர் பாரிய தொகையினை வட்டிக்குக் கொடுத்துவரும் ஒரு வட்டி முதலாளியாகவும் பிரபல்யமானவர். இன்றும் இவரிடம் வட்டிக்குப் பணம் வாங்கித் தொழில் செய்யும் தொழில் முதலைகளும் நகரில் இருக்கிறார்கள். அது மட்டுமல்ல திணைக்களத்தில் இவர் செல்வாக்குப் பெருகக் காரணம் திணைக்களத்தில் உள்ள அதிகாரிகள் பலருக்கு இவர் வட்டிக்குப் பணம் கொடுத்திருப்பதாகவும், சிலருக்கு வட்டி இல்லாக் கடனுதவியையும் கொடுத்துதவி இருப்பதாகவும் கல்வி வட்டாரத்தில் வதந்திகள் உண்டு. எனவே திரு. சபாலிங்கம் போன்ற நேர்மையான அதிபர்களால் கட்டியெழுப்பப்பட்ட கல்லூரிக்கு ஒரு வியாபார மனோ நிலையுள்ள ஒருவரை அதிபராக நியமிக்க முயற்சிகள் மேற்கொண்டபோதே ஆறுதிருமுருகன்,சின்மயா சுவாமி போன்றோர் விழித்திருந்திருக்க வேண்டும். பாடசாலையின் பெயர் நாறிப் போய்விட்டபோது அறிக்கை விட்டு என்ன பயன்?

ஆனால் இந்துக் கல்லூரி சார்ந்த சில மரியாதைக்குரியவர்கள், பொறுப்புள்ளவர்கள் முயற்சியாலேயே இவர் இப்போதாவது வலைவீசிப் பிடிக்கப்பட்டுள்ளார். அடுக்காக வந்த இடமாற்றங்களை எல்லாம் தனது அரசியல் பலம் கொண்டு இரத்துச் செய்துவிட்டுப் பல காலம் இங்கு அதிபராக இருக்கிறார். இதில் அவருக்குண்டான பாரிய பின் பலம் என்ற விடயம் பெரிதெனப் பேசப்படுகிறது. ஊழல் இலஞ்சக் கமிஷனைச் சார்ந்தவர்களும், இந்துக் கல்லூரி சார்ந்த பொறுப்பானவர்களும் ஒன்றிணைந்து இதுவரை அதிபருக்குக் கையூட்டமத் பெறுவதில் பக்க பலமாக இருந்த அரசியல்வாதிகள், அதிகாரிகள், பாடசாலையிலுள்ள ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியைகள், பழைய மாணவர் சங்க உறுப்பினர்கள் என எல்லோரது பெயர்களையும் பட்டியல் இட்டுப் பகிரங்கப்படுத்த வேண்டும் என யாழ்.கல்விச் சமூகம் வேண்டி நிற்கின்றது.

இந்த அதிபர் விடயத்தில் ஊடகவியலாளர்கள் பலர் பொறுப்போடு நடந்து கொண்டுள்ளனர். ஒரு தடவை , இரண்டு தடவை அல்ல பல தடவைகள் இந்த அதிபர் பணம் பெறும் விடயம் பத்திரிகைகள் வாயிலாகவும், இணையச் செய்திகள் வாயிலாகவும் பகிரங்கப்படுத்தப்பட்டும், அவருக்கு எதிராக எந்தவித நடவடிக்கைகளையும் எடுக்காததற்குச் சில பழைய மாணவர்களும் காரணமென்ற உண்மையும் தற்போது கசியத் தொடங்கி இருக்கிறது. அதிபர் மாணவர்களைப் புதிதாக இணைப்பதற்குக் கையூட்டம் பெறுவதில் இவர்களுக்கு உண்டா இலாப நோக்கம் என்ன? என்றதை மற்றைய சங்கங்கள் அல்லது சங்க உறுப்பினர்கள் வெளிப்படுத்தினால் நன்று. இவரிடம் வட்டிக்குப் பணம் வாங்கிப் பழக்கப்பட்ட யாழ். பிரபலம் ஒன்றும் இவர் சமூகவிரோதத்திற்கு உறுதுணையாக நின்றிருக்கிறதாகவும் பேசப்படுகிறது.

அதிபர் மாணவர்களைப் புதியதாக இணைப்பதற்கு மட்டும் தான் கையூட்டம் பெற்றாரா? அல்லது இந்துக் கல்லூரி வட்டாரத்தில் நடைபெற்றதாகச் சொல்லப்படும் போதை வஸ்துகளோடு சம்பந்தப்பட்ட காரியங்களுக்கும் இவர் போன்றோர் உடந்தையாக இருந்திருக்கிறார்களா? என்று பல சந்தேகங்கள் எழுப்பப்படுகின்றன. அப்படியான சந்தேகங்கள் எங்கிருந்து எழுகின்றன? பாரிய வருவாயற்ற குடும்ப மாணவர்களையும் கல்லூரியில் சேர்ப்பதற்கு வாய் கூசாது கையூட்டத்தைக் கேட்டு வாங்கும் ஒரு மனிதனுக்கு எந்த வித சமூகப் பொறுப்பும், சமூக அக்கறையும் இருக்கு வாய்ப்பிருக்காது என்று மக்கள் நம்புகின்றனர். எனவே சமூக விரோதச் செயல்களைக் கல்லூரியை மையப்படுத்தி நடத்தவும் இவர் கையூட்டம் பெற்றிருக்கலாம் என்று நம்புவதற்கு வாய்ப்பிருக்கிறது.

இதைவிடப் பொதுவாகத் தமது பாடசாலைகளில் மாணவர்களைப் புதிதாக இணைப்பதற்குப் பல பாடசாலை அதிபர்கள் கையூட்டுப் பெறுவதாக வதந்திகள் கிளம்பத் தொடங்கி இருக்கின்றன. இந்துக் கல்லூரி பற்றிப் பேசும்போது இந்துப் பெண்கள் அதிகம் படிக்கும் பாடசாலை அதிபரைப் பற்றி மக்கள் அடிக்கடி சிலாகிப்பது வழமையான விடயம். அவரும் இன்மை, வறுமை பாராது பணம் கேட்பதில் கில்லாடியாம். இந்துக் கல்லூரி அதிபருக்கு முன்னர், இல்லாவிடில் அவரோடு சேர்ந்து கம்பிகள் எண்ண வேண்டியவர் என்றும் மக்கள் பேசிக் கொள்கின்றனர். அவர் மட்டுமல்ல யாழ். மக்களிடம் கையூட்டம் பெறுபவர்கள் என்று ஒரு நீண்ட பட்டியலே இருப்பதாகச் சொல்லப்படுவதில் எவ்வளவு உண்மை உண்டென்று தெரியவில்லை. ஆனால் பலர் பணம் பெறுகிறார்கள்.

தற்போது மக்களுக்கு இருக்கும் ஒரே ஒரு வாய்ப்பு. தகவல் அறியும் சட்ட மூலத்தை மக்கள் நாடி அவர்களிடம் அதிபர் நிமலன் பற்றிய சகல தகவல்களையும் பெற்றுக் கொள்வது. அத்துடன் அவரது சொத்து மற்றும் சேமிப்புத் தொடர்பான சகல விபரங்களையும் பெற்றுக் கொள்வது. அவர் பற்றிய காணொளியில் அவர் தனக்கும், தனது மனைவிக்கும் வெவ்வேறான வங்கிக் கணக்கு உண்டென்பதை உறுதிப்படுத்தி இருக்கிறார். அதை விட அவருக்குப் பல தொடர்மாடிக் கட்டடங்களில் வசிப்பிடம் உண்டு என்ற செய்தியும் கசிந்து இருக்கிறது. அவரை மட்டுமல்ல யாழ். மாவட்டத்திலுள்ள சகல அதிபர்களையும் அவர்கள் சொத்துக்கள் பற்றிய விபரத்தை அது சார்ந்த அரச திணைக்களம் கோரி வெளியிட வேண்டும் என்று பொது மக்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர். கடந்த பத்தாண்டுகளுக்குள் உண்டான அவர்கள் பற்றிய தகவல்களைச் சேகரிப்பது நன்று.

இதன் மூலம் இது போன்ற மோசடிகளில் அதிபர்கள் பங்குபற்றுவதையும், கல்லூரிகளில் கற்பித்தலில் அக்கறையற்று வெளியிடங்களில் சென்று ரியூசன் கொடுத்துச் சொத்துச் சேகரிப்பதையும் உடனடியாக ஒரு முடிவுக்குக் கொண்டு வரலாம். இதன் மூலம் கல்விச் சமூகம் கொண்ட பாரியதொரு பின்னடைவைத் தடுத்து நிறுத்தலாம் என்றது மக்கள் கருத்து.

# யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் நீக்கமும், உயர்கல்வியை இராணுவ, அரசியல் மயமாக்குதலும்

**சண்டே ஒப்சேவர் பத்திரிகையில் கடந்த 15 செப்ரெம்பர் 2019 அன்று ஆங்கிலத்திலே வெளியாகிய கட்டுரையின் தமிழ் மொழிபெயர்ப்பு இது.**

**கலாநிதி N.சிவபாலன்,**
**கலாநிதி S.அறிவழகன்,**
**கலாநிதி P. ஐங்கரன்,**
**கலாநிதி N.ராமரூபன்,**
**கலாநிதி ராஜன் ஹூல்,**
**M. திருவரங்கன்**

(கடந்த வாரத் தொடர்ச்சி)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களால் "தமிழமுதம்" நிகழ்வு ஒழுங்கமைக்கப்பட்டமையால் அந்த நிகழ்வில் பேராசிரியர் விக்கினேஸ்வரன் 2018 ஆம் ஆண்டு கலந்துகொண்டார். எவ்வாறாயினும், அவர் துணைவேந்தராக இருந்த போது இறந்த விடுதலைப் புலிப்போராளிகளை நினைவுகூரும் மாவீரர்நாள் நிகழ்வுகளில் கலந்து கொள்வதைத் தவிர்த்தார். கருத்தியல் காரணங்களுக்காக, இந்த நிகழ்வுகளில் சிலவற்றில் விக்னேஸ்வரன் பங்கேற்பதை ஒருவர் கேள்விக்குள்ளாக்கினாலும், துணைவேந்தர் எந்த நிகழ்வுகளில் கலந்துகொள்ள அனுமதிக்கப்படலாம் அல்லது துணைவேந்தருக்கு எவ்வகையான அரசியல் கருத்துகள் இருக்க முடியும் என்பதை பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவோ அல்லது இராணுவமோ தீர்மானிக்கமுடியாது. இது ஒரு தனிப்பட்ட கல்வியாளராக மற்றும் ஒரு கல்வி நிறுவனத்தின் தலைவராக அவரது சுதந்திரத்திற்கு அச்சுறுத்தலாகும்.

### யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நினைவுகூரும் அரசியல்

கடந்தகால வன்முறைகளின் அதிர்ச்சிகரமான அனுபவங்களுடன் இன்னும் போராடிக்கொண்டிருக்கும் மற்றும் தேசிய இனப் பிரச்சினைக்கு பொருத்தமான தீர்வை எதிர்பார்த்துக்கொண்டிருக்கும் போரினால் பாதிக்கப்பட்ட சமூகத்தில், நினைவுகூருதல் என்பது மறுக்கமுடியாததும் முக்கியமானதும் மற்றும் ஆற்றுப்படுத்துவதுமான சமூக மற்றும் அரசியல் நடவடிக்கையாகும். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில், நினைவுகூரல் என்பது முரண்பாடுகள், தவிர்ப்புக்கள், மற்றும் விலக்கல்கள் போன்ற சவால்களுடனான ஒரு முரண்பட்ட பிரச்சினையாக இருக்கிறது. புலிகளின் மாவீரர்கள் ஆண்டு தோறும் பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் ஊழியர்களால் நினைவுகூரப்பட்டாலும், மற்ற தமிழ் ஆயுத இயக்கங்களின் போராளிகளுக்கான நினைவு நிகழ்வுகள் எதுவும் நடைபெறுவதில்லை. முள்ளிவாய்க்காலில் போரின் முடிவு ஆண்டு தோறும் நினைவுகூரப்படுகின்ற அதேவேளையில், புலிகள் வடக்கிலிருந்து முஸ்லிம்களை வெளியேற்றியமையைக் குறிக்கும் வகையில் எந்தவொரு நிகழ்வையும் கல்விச் சமூகம் ஏற்பாடு செய்யவில்லை. புலிகளால் சுட்டுக் கொல்லப்பட்ட புகழ்பெற்ற கல்வி மற்றும் மனித உரிமைச் செயற்பாட்டாளரான ராஜனி திராணகமவின் வாழ்க்கை மற்றும் செயற்பாடுகளை நினைவுகொள்ளும் ஒரு நிகழ்வை ஏற்பாடு செய்ய ராஜனி திராணகம நினைவு நிகழ்வின் அமைப்பாளர்களுக்கு 2014 ஆம் ஆண்டு பல்கலைக்கழகத்திற்குள் இடம் மறுக்கப்பட்டது. அவரது உருவப்படம் இன்னும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பணியாற்றிய பெரும்பாலான இறந்த கல்வியாளர்களின் உருவப்படங்கள் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ள சிரேஷ்ட பொது அறையிலிருந்து விலக்கப்பட்டுள்ளது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நினைவுகூரலைச் சுற்றியுள்ள இந்த விலக்குகள் மற்றும் ஒதுக்கல்களை ஒருவர் விசாரிக்க வேண்டும் என்றாலும், துணைவேந்தருக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தைப் பயன்படுத்தி மாணவர்களும் கல்வி சமூகமும் ஏற்பாடு செய்த நினைவு நிகழ்வுகளைத் தடைசெய்வது சமூகத்தின் கூட்டு உளவியலைப் பாதிக்கும் என்பதோடு, இவ்வாறான விடயங்கள் தமக்கும் ஒட்டுமொத்த சமுதாயத்திற்கும் தீங்கு விளைவிக்கும் செயல்களை நாடுவதை நோக்கி மாணவர்களைத் தள்ளிவிடும். ஈஸ்டர் ஞாயிறு தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களை நினைவுகூரும் வகையில் மாணவர்கள் ஏற்பாடுசெய்த நினைவு நிகழ்வானது யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பட்டதாரி மாணவர்கள் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினைகள் குறித்தும் அக்கறை கொண்டுள்ளனர் என்பதைக் குறிக்கிறது.

முரண்பாட்டு வலயங்களில் அமைந்துள்ள பல்கலைக்கழகங்களில் முக்கியமான நிர்வாகப் பதவிகளை வகிப்பவர்கள், நினைவுகூரல் மற்றும் ஜனநாயக, அகிம்சை வழியிலான அரசியல் எதிர்ப்புடன் தொடர்புடைய நிகழ்வுகளை, அவற்றை ஒழுங்கமைக்கும் மாணவர்களை அந்நியப்படுத்தாமல் கவனமாக அணுகவேண்டும். தெற்கில் உள்ள பல பல்கலைக்கழகங்களில் அரசுக்கு எதிராக ஆயுதம் ஏந்திய ஜே.வி.பி கிளர்ச்சியாளர்களை நினைவுகூரும் வகையில் ஆண்டு தோறும் மாணவர்கள் நினைவு நிகழ்வுகளை ஏற்பாடு செய்கிறார்கள். ஆனால் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் செய்வது போல அங்கு அரசு கடுமையான முறையில் நடந்துகொள்வதில்லை. வடக்கு மாகாணசபை கூடக் கடந்த காலங்களில் போரின் இறுதிக் கட்டங்களில் இறந்தவர்களுக்காக நினைவு நிகழ்வுகளை ஏற்பாடு செய்தது. போராட்ட காலங்களில் இறந்த விடுதலைப் புலிகளின் போராளிகளை நினைவுகூர்ந்த யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் கடந்த ஆட்சியில் இராணுவத்தால் தாக்கப்பட்டனர். தற்போதைய சூழலில், மாணவர்களால் கட்டப்பட்ட நினைவுச் சின்னத்தை இல்லாமல் செய்யாமைக்காகப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் அவமானகரமான முறையில் பதவிநீக்கம் செய்யப்பட்டிருக்கிறார். கல்விச் சுதந்திரத்தை வழங்குதல் மற்றும் இராணுவத் தலையீடு அற்ற வெளியைப் பல்கலைக்கழகத்தில் உருவாக்குதல் என்ற இரு விடயங்களிலும் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் இயலாமையானது, ஆணைக்குழு இலங்கை அரசின் சிங்களப் பெரும்பான்மை எந்திரங்களின் கையாக இயங்குகிறது என்பதையே காட்டுகிறது. இராணுவம், அதன் புலனாய்வுத்துறை மற்றும் ஊடகங்களின் சில பிரிவுகளின் பேரினவாத அழுத்தங்களுக்கு இசைவதன மூலம், பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு மற்றும் உயர்கல்வி அமைச்சு ஆகியவை வடக்கில் உள்ள ஒரே பொதுப் பல்கலைக்கழகம் மற்றும் அந்தப் பல்கலைக்கழகம் சேவை செய்யும் சமூகங்களுக்கான தமது பொறுப்புகளில் இருந்து தவறியிருக்கின்றன.

1970களின் பிற்பகுதியிலிருந்து யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் தமிழ்தேசியவாத நடவடிக்கைகளுக் கான ஒரு இடமாக இருந்தபோதும், 1990ஆம் ஆண்டு விடுதலைப்புலிகள் யாழ்ப்பாணத்தைத் தமது கட்டுப்பாட்டில் கொண்டுவரும் வரையில் தேசியவாதம் மற்றும் தமிழ்ப் போராளிகளின் சர்வாதிகார நடவடிக்கைகள் ஆகியவற்றை விமர்சிக்கும் வகையிலான கருத்துக்களை வெளிப்படுத்த பல்கலைக்கழகத்திற்குள் இடம் இருந்தது. பேராசிரியர் விக்னேஸ்வரனுக்கு முன்னர் பதவியிலிருந்த பலரின் பதவிக்காலத்தில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்குள் பல தமிழ்த் தேசியவாத அணி திரட்டல்கள் மற்றும் நிகழ்வுகள் நடந்தன. கொல்லப்பட்ட தமிழ்ப் போராளிகளுக்கான ஒரு நினைவுச்சின்னம் பிரதான வளாகத்திற்குள் அவர்களில் ஒருவரின் பதவிக் காலத்திற்தான் கட்டப்பட்டது. அவர்கள் யாரும் துணைவேந்தர் பதவியில் இருந்து நீக்கப்படவில்லை. அவர்களிலிருந்து வித்தியாசமாகச் செயற்படாத விக்னேஸ்வரன் ஏன் குறிவைக்கப்படல் வேண்டும்?

தமிழர்கள் மற்றும் பிற சமூகங்கள் மீது தமிழ்த் தேசியத்தின் பெயரில் மேற்கொள்ளப்பட்ட வன்முறை கள் மற்றும் விலக்குகள் பற்றிய சுயமதிப்பீடு மற்றும் வெளிப்படையான உரையாடல்களுக்கான வெளி போருக்குப் பிந்தைய ஆண்டுகளில் பல்கலைக்கழகத்திற்குள் மீண்டும் ஏற்படுவதாகத் தென்படுகிறது. சுயநிர்ணய உரிமை மற்றும் சுயாட்சி என்பனவற்றிற்கான அர்த்தத்தை வடக்கில் வாழும் வேறுபட்ட இனங்கள், மதங்கள் மற்றும் கலாச்சாரக் குழுக்கள் எவ்வாறு கருதுகிறார்கள், மற்றும் பிராந்தியத்தில் சாதி, வர்க்கம் மற்றும் பாலினம் ஆகியவற்றின் அடிப்படையில் தோன்றும் முரண்பாடுகள் மற்றும் ஏற்றத்தாழ்வுகள் என்பன பற்றிய உரையாடல்களுக்கான வெளி தற்போது தோன்றிவருகின்றது. இராணுவமயமாக்கல், போர்க்குற்றங்களுக்கான பொறுப்புக்கூறல், பெரும்பான்மை அரசிலிருந்து வரும் பிறவகையான அடக்குமுறைகள் பற்றிய விவாதங்கள் மற்றும் கலந்துரையாடல்களில் கல்விச் சமூகமும் ஒட்டுமொத்த சமூகமும் பங்கேற்கவும், மற்றும் இனங்களுக்கிடையேயான நல்லிணக்கம், நியாயமான, சமமான சமத்துவமான சகவாழ்வு பற்றிய விவாதங்களுக்குச் சாதகமான பங்களிப்பை வழங்குவதற்கும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் எதேச்சாதிகாரம் இல்லாத இடமாக இருக்க வேண்டும்.

1980களின் பிற்பகுதியில் முரண்பாடுகளின் போது மாணவர்கள் மற்றும் கல்வியாளர்கள் அனைத்து தரப்பினராலும் கொல்லப்பட்டுக் கொண்டிருந்தபோது, பல்கலைக்கழகங்கள் செயற்படுவதற்காக, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அப்போதைய தலைவரான பேராசிரியர் அர்ஜுன அலுவிகாரே பல்கலைக்கழகங்களின் மதிப்புகளினை உறுதிப்படுத்த வேண்டியிருந்த அதே நேரத்தில் யார் பயங்கரவாதி, யார் பயங்கரவாதி இல்லை என்ற பெயரிடலைத் தவிர்த்துக்கொண்டார். அன்றைய உயர்கல்வி அமைச்சர் ஏ.சி.எஸ். ஹமீத் இதைப் புரிந்துகொண்டார். நடந்து கொண்டிருந்த பயங்கரத்திலே ஒவ்வொரு கட்சியும் தமது சொந்தக் கதையாடல்களைக் கொண்டிருந்த அதேவேளை, அவை அந்தக் கதையாடல்களைத் தமது வசதிக்கேற்ப மாற்றிக்கொண்டும் இருந்தன.எந்தவொரு நிலையான விழுமியங்களையும் கொண்டிராத, இத்தகைய நெருக்கடி நிறைந்த அரசியலில், இராணுவப் புலனாய்வு அறிக்கைகளில் உள்ள உறுதிப்படுத்தப்படாத குற்றச்சாட்டுகளை மட்டும் வைத்து உரிய செயன்முறையில்லாமல் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு எப்படி மற்றவர்களைத் தண்டிக்கலாம்?

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ்க் கடந்த காலங்களில் இராணுவம் அல்லது காவல்துறையினரால் தனிநபர்கள் மீது சுமத்தப்பட்ட சில குற்றச்சாட்டுகளை, உண்மையற்றன அல்லது போதுமானதாக இனங்காணப்படவில்லை என்று நீதிமன்றங்கள் நிராகரித்திருந்தன. துணைவேந்தர் விக்கினேஸ்வரனுக்கு ஒரு பக்கச்சார்பற்ற தீர்ப்பாயத்தின் முன் பதிலளிக்கும் உரிமை மறுக்கப்பட்டது. இது தான் நமது உயர்கல்வி முறையின் தலைவர்களால் நிர்ணயிக்கப்பட்ட தரமா? நீதி என்பது பல்கலைக்கழக அமைப்பின் அத்திவாரமாக இருக்க வேண்டும். அங்கீகரிக்கப்பட்ட தீர்ப்பாயத்தால் (அது நிச்சயமாக இராணுவப் புலனாய்வுப் பிரிவு அல்ல) ஏற்றுக்கொள்ளப்பட்ட ஆதாரங்கள் இல்லாத நிலையில், எந்தவொரு ஊழியருக்கும் தண்டனை வழங்கப் பல்கலைக்கழக சட்டம் அனுமதிக்காது. நாட்டில் இன்று சமூகங்கள் பாரிய அளவில் துருவங்களாகிப் போகின்ற நிலைமையினையும், நல்லறிவு திரும்புவதற்கான சிறிய நம்பிக்கையினையுமே நாம் காண்கிறோம். பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு மற்றும் உயர்கல்வி அமைச்சு தற்போது செயற்பட்டு வரும் முறையானது நாடு தழுவிய பல்கலைக்கழகத்துறையின் கடுமையான நெருக்கடியைக் காட்டுகிறது.

(முற்றும்)

# கீழடியிலிருந்து மேலடிக்கு வரவேண்டிய உண்மைகள்!



சிலம்பு

தமிழனின் பெருமையைப் பறைசாற்றிக் கொண்டிருக்கும் கீழடி என்பது எங்கே அமைந்திருக்கிறது. அதனால் என்ன பெருமை தமிழினத்திற்கு என்று மேலோட்டமாகப் பார்ப்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும். இதில் தரப்பட்டுள்ள தகவல்கள் அத்தனையும் தமிநாட்டு அரசால் வெளியிடப்பட்ட வைகை நதிக்கரையில் சங்ககால நகர நாகரிகம் என்ற கீழடி தொல்லியல் அகழ்வாராய்ச்சி பற்றிய நூலிலிருந்து பெறப்பட்டவையே ஆகும்.

உலக மாந்தரின் நாகரிகம் ஆற்றங்கரையோரத்தில் தான் செழித்து வளர்ந்தது என்பார்கள். சிந்துவெளி நாகரிகமும் அவ்வகையானதே. அதே போன்று தான் வைகை நதியின் அருகே இந்த தமிழனின் கீழடி நாகரிகமும் செழித்து இருந்தது என்பது ஆய்வாளர்களின் கருத்தாகும். தமிழினத்தின் தொன்மையைப் பறைசாற்றும் கீழடி அகழ்வாராய்ச்சிக்கண்டு பிடிப்புகள் தமிழினத்திற்கான பெரும் புதையலாகும்.

தமிழர் பண்பாட்டுப் புகழ் பரப்பி வரும் கீழடி அகழ்வாராய்ச்சிப் பகுதியானது 110 ஏக்கர் நிலப்பரப்பிற்கு மேல் அதிக சிதைவில்லாமல் தென்னத்தொப்புகளால் பாதுகாக்கப்பட்டுச் சுற்றிவர இயற்கைப் பாதுகாப்புகளுடன் உள்ள ஒரு தொன்மை நகரிய குடியிருப்பு தொழிற்கூடப் பகுதியுமாகும்.

தமிழ் நாட்டின் சிவகங்கை மாவட்டத்தில் உள்ள கீழடி என்ற இடத்தில் தொல்லியல் ஆய்வாளர்களால் அகழ்வாராய்ச்சி மேற்கொண்ட பொழுது கிடைக்கப்பெற்ற சான்றுகள் இதுவரை மறைக்கப்பட்ட தமிழினத்தின் தொன்மை பற்றிய கூற்றுகள் அனைத்தையும் புரட்டிப்போட்டு விட்டன. இதற்கு முன்னர் ஆதிச்ச நல்லூர் என்ற இடத்தில் நடந்த அகழ்வாராய்ச்சிக் கண்டு பிடிப்புகளை தொடரவிடாமலும் கண்டுபிடிப்புகளை மாற்றம் செய்யவும் முனைந்த இந்திய மத்திய அரசு கீழடி ஆய்வையும் மறைக்கவும் அழிக்கவும் முயன்றது. தமிழ் நாட்டில் சிறந்த அகழ்வாராய்ச்சியாளர்கள் இருந்தும் தொல்லியல் ஆராய்ச்சி பெங்களூரு என்ற அமைப்பே கீழடி அகழ்வாராய்ச்சிக்கு மத்திய அரசால் அமைக்கப்பட்டிருந்தது. அக்குழுவினர் ஆய்வில் கண்ட அரிய சான்றுகளால் அதிர்ச்சி அடைந்த மத்திய அரசு அப்பணியில் இருந்த தலைவர் உட்படப் பலரை வெவேறு இடங்களுக்கு இடமாற்றம் செய்ததுடன் அங்கு கண்டெடுக்கப்பட்ட சான்றுகளைத் தமிழகத்தில் வைக்க விடாமல் பெங்களூருக்குக்கொண்டு சென்றது அழிக்கவும் செய்தது. அங்கே கிடைத்த சான்றுகள் இதுவரை தங்களால் புனையப்பட்ட கதைகளை எல்லாம் பொய்யாக்கி தமிழினத்தின் உண்மை வரலாற்றை மொழியின் வளர்ச்சியை உலகத்திற்கு எடுத்துக் காட்டியது. இவற்றைப் பொறுத்துக்கொள்ள முடியாதவர்களே இவற்றை அழிக்கவும் அகழ்வாராய்ச்சியை நிறுத்திவிடவும் முடிவு செய்தனர். ஆனால் தமிழ் மக்கள் பெங்களூருக்குக் கொண்டு செல்வதை எதிர்த்துப் போராடினார்கள். தமிழ் ஆர்வலர்களால் வழக்கு மன்றம் சென்று இவற்றிற்குத் தடை பெறப்பட்டதோடு கண்டுபிடிக்கப்பட்டனவற்றை தமிழ் நாட்டிலேயே வைக்கவேண்டும் என்ற பணிப்புரையையும் நீதிமன்றத்தில் பெற்றனர். இந்தப் போராட்டத்திற்கு அரசியல் கட்சிகள் எவையும் ஆதரவு கொடுக்கவில்லை. மக்களே தங்கள் பங்களிப்பினைக் கொடுத்தனர். இவ்வழக்கை கனிமொழி மதி என்ற பெண் வழக்கறிஞர் தான் முன் நின்று வாதாடி வெற்றி பெற்று இன்று இவ்வாராய்ச்சி பற்றிய அறிக்கை வருவதற்குக் காரணமாகினார் என்பது குறிப்பிடப்பட வேண்டியதாகும் அத்துடன் தமிழ் நாட்டுத் தொல்லியல் துறை மத்திய அரசின் ஒப்புதலுடன் ஆய்வுப்பணிகளை மேற்கொள்ளவும் பணிக்கப்பட்டது. முதல் இரண்டாம் மூன்றாம் ஆய்வுப்பணிகள் மத்திய அரசின் கட்டுப்பாட்டிலும் பின்னர் நான்காம் ஐந்தாம் கட்டப் பணிகள் தமிழ் நாட்டு தொல்லியல் துறையினராலும் மேற்கொள்ளப்பட்டுள்ளன மேலும் அகழ்வாராய்ச்சியைத் தொடர்வதற்கு ஒப்புதலுக்கு மத்திய அரசின் அனுமதியை எதிர்பாத்திருக்கின்றனர்.

இதுவரை காலமும் கி.மு. மூன்றாம் நூற்றாண்டில் தான் நகரமயமாதல் தொடங்கியதென்று கருதப்பட்டு வந்துள்ளது. ஆனால் கீழடியில் கண்டுபிடிக்கப்பட்ட பொருள்களை அமெரிக்காவில் ஆய்வுக்குட்படுத்தியபோழுது அவை கி.மு ஆறாம் நூற்றாண்டுக்கு உரியவை என்று கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. அதாவது 2600 ஆண்டுகளுக்கு முன்னரே மிகச்சிறந்த நகரங்களை தமிழர்கள் கொண்டிருந்தார்கள் என்று நிறுவப்பட்டுள்ளது.



அது மட்டுமல்ல தமிழ்ப் பிராமி எழுத்து வடிவம் கி.மு ஐந்தாம் நூற்றாண்டுக்கு உரியவை என்று கருதியிருந்த நிலையில் அதனிலும் முன்னரே நூறு ஆண்டுகள் கூடியதென்றும் கூறப்படுகிறது. இங்கே எழுத்துப் பொறிமுறையில் பெற்ற பானை ஓடுகள் கிடைக்கப்பெற்றதன் மூலம் எழுத்தறிவு பெற்ற நகரமாக கீழடி 2600 ஆண்டுகளுக்கு முன்னதாவே இருந்தது என்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. அதாவது தமிழினம் இரண்டாயிரத்து அறு நூறு ஆண்டுகளுக்கு முன்னரே எழுத்தறிவு பெற்ற இனமாக மிளிர்ந்துள்ளது என்பது உறுதி செய்யப்பட்டுள்ளது


திருவள்ளூர் மாவட்டம் அத்திரம்பாக்கம் என்ற இடத்து அகழ்வாராய்ச்சியில் கண்டறியப்பட்டவை பழைய கற்காலக் கருவிகள் 15 இலட்சம் ஆண்டுகள் என்றும் இரண்டாம்பழைய கற்காலக் கருவிகள்385000 ஆண்டுகள் பழமையானனவைகள் என்றும் அறிவியல் ஆய்வுகள் தெரிவித் துள்ளன. இவ்வாறு காலத்துக்குக் காலம் பல்வேறு இடங்களில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் புதிய கற்காலம் இரும்புக்காலம் என்று தொடர்ந்து வருகிறது. ஆதிச்சநல்லூர் காலம் கி மு. எட்டாம் நூற்றாண்டு எனவும் இப்பொழுது கண்டுபிடிக்கப்பட்ட கீழடி யின் காலம் கிமு. ஆறாம் நூற்றாண்டு எனவும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இதில் சிறப்பு என்ன வென்றால் இக்காலப்பகுதியில் வாழ்ந்த மக்கள் எழுத்தறிவு பெற்று இருந்தனர் என்பது உறுதியாகி உள்ளது. இங்கு வாழ்ந்த மக்கள் நெசவுத் தொழிலில் ஈடுபாட்டுடன் இருந்ததையும் காண முடிகிறது. கீழடியில் கிடைக்கப்பெற்ற தொல்பொருட்கள் அக்காலச் சமூகத்தினைப் பிரதிபலிக்கும் வகையில் உள்ளன.. அச்சமூகம் வேளாண்மை கால்நடை வளர்ப்பு ஆகியனவற்றினை முதன்மைத் தொழிலாக மேற்கொண்டிருந்தது. வேளாண்மைக்குத் தேவையான இரும்புப் பொருள்கள் தயாரித்தல் தச்சு வேலை அத்துடன் தேவையான பானை வரைதல் ஆடை நெசவு என்பனவும் அவர்களின் தொழிலாக இருந்துள்ளன. உடைந்த குவியலாகப் பானை ஓடுகள் இருப்பது அங்கே தரமான பானை உற்பத்தி நடந்ததற்கான சான்றாக உள்ளது

**தாழப் பெண்களின் நாகரிக அணிகலன்கள்**

இவற்றுக்கும் மேலாகப் கீழடிப் பெண்கள் தங்களை அலங்கரித்துக் கொள்ளும் தங்கத்திலான ஏழு ஆபரணத் துண்டுகள் செம்பு அணிகலன்கள் மதிப்பு மிக்க மணிகள், நாலாயிரத்துக்கும் மேற்பட்ட கல்மணிகள் கண்ணாடி மணிகள் சுடு மண்ணாலான மணிகள் சங்கு வளையல்கள், பளிங்குக் கற்களிலான மணிகள், தந்த வளையல்கள்,. ஆகியன கண்டெடுக்கப்பட்டுள்ளன. இவை மக்கள் எவ்வளவு உயந்த வாழ்க்கையை வாழ்ந்திருக்கிறார்கள் என்பதைக் காட்டி நிற்கிறது.


**சதுரங்கமும் விளையாட்டும்**

இவை மட்டுமல்ல விளையாட்டுப் பொருள்களும் பொழுதுபோக்குப் பொருள்களும் ஏராளமாகக் கிடைத்துள்ளன. பெண்கள் விளையாடும் வட்டச் சில்லுகள், அதாவது இப்பொழுதும் அப்பகுதியில் விளையாடும் பாண்டி விளையாட்டிற்குப் பயன்படுத்துபவை 2600 ஆண்டுகளுக்கு முன்னரே மக்கள் பாவித்த விளையாட்டுப் பொருள் என்பதை நிரூபிக்கின்றன. தாய விளையாட்டுக்கான பகடைக் காய்களும் சிறுவர்களின் விளையாட்டுப் பொருட்கள், வண்டி இழுத்து விளையாடும் வண்டில் சில்லுகள், மட்டுமல்ல பெரியவர்கள் தங்கள் திறமையை வெளிப்படுத்தும் வகையில்




அன்றாட பயன்பாட்டில் அரவைக் கல்
தந்தத்தில் செய்யப்பட்ட சீப்பு





விளையாடும் சதுரங்க விளையாட்டிற்குப் பயன் படும் ல்வேறு அளவிலான சதுரங்கக் காய்கள் என்பன கிடைக்கப்பெற்றுள்ளன. கீழடியில் ஆண்கள் பெண்கள் றுவர்கள் எவ்வகையான விளையாட்டுகளில் டுபட்டிருந்தனர் மகிழ்வுடன் நாகரிகமாக வாழ்ந்தனர் ன்று பறைசாற்றுகின்றன.

இம்மக்கள் வணிகத்தில் எவ்வளவு ஈடுபட்டார்கள் ன்பனவற்றை அங்கு காணப்படும் பொருள்களின் மூலம் காணக்கூடியதாக உள்ளது.


இவை தவிர மக்கள் கட்டிடத் தொழில் நுட்பத்திலும் றந்து விளங்கியுள்ளனர் என்பது அங்கு ண்டறியப்பட்ட செங்கல் சுவர்கள் கூரை ஓடுகள் அவற்றில் விழும் மழை நீர் வழிந்து ஓடக்கூடிய வகையில் விரல்களால் அழுத்திய பள்ளங்கள் ட்டிடங்களுக்குத் தேவையான சுண்ணாம்பு ஒட்டு வகைகள் பலமான சுவர்கள் என்பன வற்றின் மூலம் காண முடிகிறது .இக்கட்டுமானங்கள் அம்மக்கள் வ்வளவு வளர்ந்த நாகரிகமான சமூகமாக இருந்தனர் ன்பதைக் காட்டுகின்றன. மேலும் அகழ்வாராய்ச்சி தொடரும் நிலையில் மேலும் பல தகவல்களைப் பெறக்கூடியதாக இருக்கும்.

கீழடி ஆய்வு இதுவரை சங்க காலம் என்பது கிமு மூன்றாம் நூற்றாண்டில் திர்ஹான் தொடங்கியதாகக் கருதப்பட்டு வந்ததை மாற்றி எழுத்தறிவு பெற்ற மக்கள் கிமு ஆறாம் நூற்றாண்டிலேயே வாழ்ந்தார்கள் ன்பதால் சங்ககாலத்தையும் பின்னுக்குத் தள்ள வேண்டி வந்துள்ளது.என்கின்றனர் ஆய்வாளர்கள்.

கீழடி ஆய்வில் கண்ட மிகப் பெரிய உண்மையும் றப்பும் என்னவென்றால் இங்கு எந்தக் கடவுள் வழிபாட்டுத் தடையங்களும் கிடைக்கவில்லை ன்பதோடு சாதி பற்றிய தடையங்களும் எதுவும் கிடைக்கவில்லை என்பதாகும் எனவே கடவுள் வழிபாடு சாதிய அமைப்பு என்பன அன்று தமிழ் மண்ணில் இருக்கவில்லை என்பதும் பின்னரே உருவாகியது குத்தப்பட்டது என்பதும் தெரிய வருகிறது

சுருங்கக் கூறின் தமிழனின் தொன்மையைப் பறைசாற்றக்கொண்டிருக்கும் கீழடி அகழ்வாராய்ச்சி ன்பது தமிழினமே உலகின் மூத்த மக்களினம் ன்பதையும் எழுத்தறிவு பெற்ற தமிழினம் கிமு அறுநூறு ஆண்டுகளுக்கு முன்னரே சிறந்த நகர யும் நகாரிகத்தையும் கொண்டு வாழ்ந்துள்ளார்கள் ன்பதையும் எடுத்துக்காட்டி நிற்கிறது.

இவ்வாராய்ச்சி ச்சிப் பணிகள் தொடர்ந்தால் மேலும் ல அரிய தகவல்கள் கிடைக்கும் என்பது திண்ணம்.



# ஊடுருவி உலகநாதன்



உந்தப் பெண் பிள்ளைகள் மோட்டார் சைக்கிள் ஓடு வதைப் பார்த்தால் பயமாக இருக்கிறது. இப்பத்த பெண் பிள்ளைகள் வீட்டில இருக்கிறதைவிட தெருவில தான் நிற் குதுகள். பெண்கள் என்றால் பேயும் இரங்கும் என்று ஒரு கருத்து இருக்கிறது அந்தளவுக்கு பெண்களைக் கண்டால் இரக்கம் வரும் பெண்கள் விடயத்தில் சிறப்புச் சான்றிதழ் வழங்காமல் யார் விட்டினம்.. இப்பத்த காலத்தில் பெண்கள் என்றால் பேயும் தயங்கும் என்ற கருத்தும் இருக்கத் தான் செய்கிறது.

ஆனாலும் இன்றைய காலம் பெண்களின் காலம். எதிலும் சிறந்து விளங்குகிறார்கள். கல்வித்துறையில் ஆரம்பித்து மருத்துவத்துறை அரச நிர்வாகத்துறை வரை பெண்கள் மிளிர்கிறார்கள். ஆனால் என்ன அரச நிர்வாகத் துறையில் தான் அவர்களால் மிளிரமுடியாமல் இருக்கிறது அதற்கு பெண்களும் ஒரு காரணமாக இருக்கிறார்கள்.

வடக்கில் இன்று அரச நிர்வாகத்துறையில் அதிகாரிகளாக பெண்கள் வலம் வருகிறார்கள். அதுவும் போரால் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள அரச திணைக்களங்களில் உயர் பதவியில் பெண்கள் அதிகம் இருக்கிறார்கள். இவர்களால் ஒன்றுமே செய்ய முடியாமல் இருக்கிறது என்ற குறை மக்களிடம் இருக்கிறது. மக்களின் குறைகளை நீக்குவார்கள் என்றால் இந்த சமூகத்தில் பெண்களுக்கு தனியிடம் இருக்கும் என்பது உண்மை.

பிறந்த தாயை மட்டுமல்ல மண்ணையும் தாய் மண் என்று சொல்வதில் உயிரோட்டம் இருக்கிறது. உயிருக்கு நிகர் பெண் என்று பெருமைப்படும் இன்றைய உலகில் எல்லாம் நடக்கிறது. வழிப்படுத்துவதற்கு பெண்கள் அமைப்புகள் இல்லை.

ஒரு பெண்ணுக்கு பிரச்சினை எழுந்துவிட்டால் வீதிக்கு வரும் பெண் அமைப்புகள் அன்றைய ஒரு நாள் ஒரு மணிநேர போராட்டத்துடன் அவர்களின் போராட்டம் முடிந்துவிடுகிறது. ஒரு பிரச்சனை தொடர்பில் நீதி கிடைக்கும் வரை தொடர்ந்து குரல் கொடுப்பார்கள் ஆயின் பெண்கள் சுதந்திரமாக வாழக்கூடிய சூழல் ஏற்படும்.

கணவரை இழந்து பிள்ளைகளோடு வாழ்கின்ற தாய்க்கு கோழிக்குஞ்சுகள் அல்லது ஆடு ஒன்றை வழங்கி விட்டு வாழ்வாதாரம் வழங்கப்பட்டு விட்டது என்று பதிவு செய்யப்பட்டால் அந்த பெண் தன்னுடைய பிள்ளைக்கு பால்மா வாங்குவதா அல்லது அந்த கோழிக்குஞ்சிற்கு ஆட்டுக்கு தீனி வாங்குவதா என்ற நிலைக்கு உள்ளாக்கப்படுகின்றாள். இப்படிப்பட்ட உலகில் படித்து பட்டம் பெற்று உயர்ந்த பதவிக்கு வந்தும் பல பிரச்சினைக்கு முகம் கொடுக்கிறார்கள் என்றால் அது அவர்களின் தவறு என்று தான் சொல்ல வேண்டும்.

2009 இற்கு முற்பட்ட காலம் பெண்கள் தாங்களே முடிவெடுக்கும் காலத்தில் இருந்தார்கள். 2009 இற்குப் பின்னர் பெண்கள் தாங்களே முடிவெடுக்கும் காலத்தில் இல்லை. இதனால் தான் இன்று பதவிகளில் இருந்தும் அவர்களால் ஒன்றுமே செய்ய முடியாமல் இருக்கிறது.

மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டங்களில் முன்வைக்கப்படும் மக்களின் பிரச்சினைக்கு தீர்வு கிடைப்பதில்லை. மக்கள் சந்திப்புகளை கூட அவர்கள் மேற்கொள்ள மறுக்கிறார்கள். கூட்டம் கூட்டம் என்று அலுவலகங்களிலே இருக்காமல் வெளியே செல்லும் இவர்கள் அந்தக் கூட்டத்தில் மக்களின் தேவைகள் பற்றி பேசப்படுகின்றனவா என்ற கேள்வி எழுகிறது.

முல்லைத்தீவில் போரால் பாதிக்கப்பட்டு கணவனை இழந்த பெண்கள் படும் பாட்டை வார்த்தைகளால் சொல்ல முடியாதுள்ளது. அந்த மண்ணில் போரில் பாதிக்கப்பட்டவர்களை மேலும் பாதிப்படைய வைத்தது கடன் சுமையாகும். இதனால் எத்தனைபெண்களை இழந்துள்ளோம். பிள்ளைகளுடன் கிணற்றில் விழுந்து தற்கொலை செய்த பெண்கள் தொடர்பில் ஆய்வு செய்தீர்களா? பெண்கள் ஆதிக்கம் செலுத்தும் மண்ணில் பெண்களின் கஷ்ரங்கள் கலையப்படவில்லை என்றால் பெண்களால் முடியாது என்று அர்த்தமாகுமா?

முல்லைத்தீவு மாவட்டத்தில் பெண்களே அதிகளவில் யுத்தத்தில் பாதிக்கப்பட்டவர்கள். இதனால் பெண்களுக்குரிய நீதி நியாயம் அவர்களுக்கு கிடைத்தாக வேண்டும்.

பெண்கள் வெளிப்பட வேண்டும் என்றால் பெண் கல்விமான்கள் அதிகாரிகள் உட்பட அனைவரும் வேலை செய்ய வேண்டும். இல்லாது போனால் எதிர்காலத்தில் பெண்கள் முன்னேற்றத்தைக் கண்டும் பெண்கள் பெண்நிலைபால் வளர்ச்சியடையவில்லை என்ற கருத்து தான் மேலோங்கும்.

உங்கள் கையில் அதிகாரம். முல்லைத்தீவில் இடம்பெறும் காடழிப்பு சிங்களக் குடியேற்றங்களை தடுப்பதற்கான வேலையைச் செய்யுங்கள். இதனைச் செய்யாது அதிகார தரத்தில் பெண்கள் இருப்பதால் தான் இன்றும் பெண்கள் வெளிப்படவில்லை என்ற கருத்து நிலவுகிறது.

ஒவ்வொரு காட்டு மரங்களும் பெண்களின் துணிவுகளை நன்கு அறியும். வீரமிக்க பெண்கள் வாழ்ந்த மண்ணில் இன்று பெண்களுக்கு நிறையப் பிரச்சினைகள். அரச அதிகாரத்தில் இருப்பவர்களால் முடியவில்லை என்றால் பெண்களால் வேறு என்ன செய்ய முடியும். தங்களை ஒதுக்குகிறார்கள். தங்களுக்கு இடமில்லையா? என்று கேள்வி கேட்கமுடியாத அளவுக்கு இன்று பெண்கள் பதவிகளில் இருக்கிறார்கள்.

வடக்கு மாகாணத்தில் 3 இலட்சத்துக்கும் அதிகமான பெண்கள் போரினால் பாதிக்கப்பட்டுள்ளனர். இதில்சுமார் 89 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பெண்கள் போரினால் விதவைகளாக்கப்பட்டுள்ளனர். இதற்கும் அப்பால் வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் குடும்பங்கள், காணாமற்போன அங்கத்தவர்களின் குடும்பங்கள், தடுப்புக்காவலிலுள்ள அங்கத்தவர்களின் குடும்பங்கள்,ம ாற்றுத்திறனாளிகளாக்கப்பட்டு குடும்பத்தைத் தலைமை தாங்கமுடியாத நிலையிலுள்ள ஆண்களின் குடும்பங்கள், தாய் தந்தையை இழந்த குடும்பத்தைத் தலைமை தாங்கும் பெண்கள், மாற்றுத்திறனாளிகளாய் குடும்பத்தைத் தலைமை தாங்கும் பெண்கள் என்ற வகைப்பாட்டுக்குள் உள்ள பெண்களென கிட்டத்தட்ட மூன்று இலட்சத்துக்கும் மேற்பட்ட பெண்களில் எத்தனை குடும்பங்கள் பொருளாதாரத்தில் முன்னேறி இருக்கிறார்கள் என்று சொல்ல முடியுமா?


இராணுவமயமாக்கல் ஒருபக்கம் இளைஞர்களின் போதைவஸ்துப்பாவனை. நாம் உழைப்பதற்கு ஒருபோதும் அஞ்சுபவர்கள்அல்ல. ஆனாலும் பல வருடங்களாகத் தொடரும் எங்களது மனக்கவலைகளும் ஆரோக்கியமற்ற நிலையும் எங்களை நோயாளிகளாக்கிவிட்டன என்று தெரிவிக்கின்றனர்.

போருக்குப் பின்னரான வடக்கு மாகாணத்தின் தினசரி வாழ்க்கை, பிரச்சினைகளிலிருந்து பிரச்சினைகளுக்கு, கடனிலிருந்து துஷ்பிரயோகத்திலிருந்து வன்முறைக்கு என, நகர்ந்து செல்கிறது.

தமிழ்த் தலைமைத்துவமும் அரச தலைமைத்துவமும் இந்த யதார்த்தத்தை உதாசீனம் செய்துகொண்டிருக்கும் நிலையில், சமூகப் புத்துயிர்ப்புக்கான தூரநோக்குச் சிந்த னைகளோ அல்லது தலைமைத்துவமோ காணப்படாத நிலையே உள்ளது. இதனை பெண் சமூகம் அறிந்து ஆக்கபூர்வமான செயற்பாடுகளை செய்வதற்கு முன்வர வேண்டும். வடக்கில் அரச திணைக்களங்களில் அதி காரிகளாக ஆண்களுக்கு பெண்கள் சரி சமனாக பதவிகளில் இருக்கிறார்கள். இருந்தும் பெண்களுக்கு என்ன பயன்.

மருத்துவர் சி.யமுனாநந்தா

# மின்னணு மனிதம் (i Human)



அறிவியலுடன் அற்புதமாய் கணணிகள் இன்று உலகை மாற்றி அமைக்கின்றன. மனிதன் கல்லைக் கருவியாக உபயோகித்த கற்காலம் முதல், சில்லைக் கருவியாக உபயோகித்த அண்மைக்காலம் வரை கைத்தொழில் புரட்சி, பசுமைப்புரட்சி, தொழில் புரட்சி ஏற்பட்டு இன்று கணணித் தொழில்நுட்பப்புரட்சியும் ஏற்பட்டுவிட்டது. இதன் புதிய பரிமாணமாக நரம்புக்கலங்களைக் கணணியுடன் இணைக்கும் நரம்பு இடைமுக இணைப்புத் தொழில்நுட்பம் (Neural Interface Technology NIT) உருவாகியுள்ளது.

உயிருக்கும் சடப்பொருளுக்கும் இடையே மின்னணுப்பாய்ச்சல் மூலம் தொடர்பாடல் தொழில்நுட்பம் ஊட்டப்படும் காலம் கனிவு பெறுகின்றது. இதனால் மனிதமூளையின் புத்திக்கூர்மை, தீர்மானிக்கும் சக்தி, கற்றல்திறன் என்பவற்றை அதிகரிக்க, மீளமைக்க, மாற்றியமைக்க முடியும். அதாவது மனிதன் எந்திரத்தினை உருவாக்கிய காலத்திலிருந்து எந்திரம் மனிதனை இயக்கும் காலத்திற்கு நாம் காலடி எடுத்து வைத்துவிட்டோம். இங்கு மனவெளியானது கணணிவெளியுடன் அல்லது இணையவெளியுடன் நரம்பு இடைமுகத் தொழில்நுட்பப் புரட்சிமூலம் ஒன்றிக்கின்றது. இது மனிதனின் மனதை மின்னணு மனிதமாக மாற்றுகின்றது.

| நரம்புக்கலம் | ⇄ | நரம்புக்கல இடைமுகத்தாங்கல் | ⇄ | கணணி |
|---|---|---|---|---|
| உயிர் | | | | சடப்பொருள் |


புதிய புதிய கண்டுபிடிப்புக்கள் கண்டறியப்படும்போது அதன் ஆபத்துக்களுக்கான பரிகாரங்களையும் கண்டறிய வேண்டும். கப்பலைக் கண்டறிந்தபோது அது உடைந்தால் எவ்வாறு கடலில் மூழ்காது தப்புவது என்பது அறியப்பட்டது. விமானத்தைக் கண்டறிந்தபோது அது உடையும்போது எவ்வாறு வானில் இருந்து தப்புவது குறித்து கண்டறியப்பட்டது. மின்னேற்றத்தைக் கண்டறிந்தபோது எவ்வாறு மின்தாக்குதலில் தப்புவது என்பது அறியப்பட்டது. அவ்வாறே மின்னணு மனிதம் எமது எதிர்கால மானிடவியலில் பல சமூகவியல், பொருளியல், மருத்துவ ஒழுக்கவியல், சட்டத்துறைசார் கடப்பாடுகளையும் கொண்டுள்ளது.

இன்று நாம் பல்வேறு வகையான இலத்திரனியல் சாதனங்களை உபயோகிக்கின்றோம். தொடுதிரைக் கணணிகள் (Touch Screen), புவிநிலைக்கணிப்பிகள் (Geocalculators), மாயமெய்நிலைக் காணிகள் (Virtual reality) இன்று எம்மை நிய உலகிற்கு அப்பாலுள்ள வெளிக்கு இட்டுச் செல்கின்றன.

நரம்பு இடைமுகத் தொழில்நுட்பம் மூலம் புதிய பரிமாணத்திற்கு மருத்துவம், வாழ்வியல், விரகியல், பொருளியல், அரசியல் என்பவற்றினை இட்டுச் செல்லலாம். மருத்துவத்தில் நரம்பு இடைமுக ஊடுருவல் தொழில்நுட்பத்தில் Neural Interface Invacive Technology (NIIT) செவிப் புலனிழந்தவர்களுக்கு கேட்டற்கருவி, பார்வைப் புலனிழந்தவர்களுக்கு செயற்கை விழித்திரை, வலிப்பு நோய்க்கான சிகிச்சை, நடுக்கத்திற்கான சிகிச்சை, மனச்சோர்விற்கான சிகிச்சை, உளப்பிளவை நோய்க்கான சிகிச்சை, பாரிசவாதத்திற்கான சிகிச்சை என்பன வெற்றியளிக்கும் நிலையில் உள்ளன. இவை மருத்துவத்தில் பாரிய மாற்றத்தினை ஏற்படுத்தும். ஆனால் இவற்றிற்குப் பெரும் முதலீடும், பொருளாதாரமும் மிகவும் இன்றியமையாததாக அமையும். மூளை முண்ணாண் பாயியில் "மிதக்கும் நுண்ணிழைகளின் கண்ணிகள்" (Floating mesh of Spaghetti) ஆல் நரம்பு இடைமுக தொடர்புகள் ஏற்படுத்தி மனிதமூளையை கணனிகளுடன் இணைத்து மனிதமூளையில் உள்ள தரவுகளைக் கணனியிலும், கணனிகளிலுள்ள தரவுகளை மனித மூளைக்கும் பாய்ச்சக்கூடிய தன்மையினை உருவாக்க முடியும். இதுவே மின்னணு மனிதம். இதன் வியாபகம் தனிமனிதனுக்கு ஏற்பவும் கணனியின் தகவல் சேகரிப்புக் கொள்ளளவுக்கு ஏற்பவும் வேறுபடும். உளமின்னணுச்சுட்டி (mental mouse) மூலம் கணனியைக் கட்டுப்படுத்தக்கூடிய தன்மை ஏற்படும். இது கணனி விளையாட்டு, பாதுகாப்பு நடவடிக்கைகள் என்பவற்றில் செல்வாக்குச் செலுத்தும்.

மின்னணு மனிதம், உலகில் தனிமனிதரின் எண்ணங்கள், இலட்சியங்கள் என்பவற்றை மற்றையவர்கள் பகிரவும், திருடவும் வழிவகுக்கும். இது ஒரு மனித உரிமைமீறலாக அமையலாம். இதற்கான காப்பு ஒழுங்குகளும் உருவாக்கப்படல் வேண்டும். இவை வர்த்தகம், சட்டம், உலக நியதி சார்ந்ததாக அமையும். தகவல் தொழில்நுட்பம் இன்று உலகில் எவ்வாறு முதன்மை அடைகின்றதோ, எதிர்காலத்தில் மனிதனை, தகவல் தொழில்நுட்பம் சடமாக மாற்றிவிடும். அதாவது மனிதன் உலகில் ஓர் இடத்தில் அசைவின்றி இருந்தபடியே எல்லா உணர்வுகளையும் அனுபவிக்கும் மின்னணு மனிதம் என்ற நிலையினை அடைந்து விடுவான். அவனால் ஆழ்கடலையும் உணர முடியும். அகிலத்தின் விளிம்பினையும் இரசிக்க முடியும். நரம்பியல் விஞ்ஞானிகள், கணனி வலைப்பின்னல் பொறியியலாளர்கள், நனோ தொழில்நுட்பப் பௌதீகவியலாளர்கள் என்பவர்களது அயராத முயற்சி நரம்பு இடைமுகத் தாங்கல்களை (Neural Interface buffers) நடைமுறையில் உருவாக்குவதற்கு உதவியுள்ளது. இவை குறிப்பாக 2050ஆம் ஆண்டிற்குப்பின் சாதாரண வாழ்வியல் அம்சங்களாக அமைந்து விடும் என்பதில் ஐயமில்லை.





# கலப்புத் திருமணங்களின் பரிமாணங்கள்: அழகுநிலாவின் பெயர்த்தி

"ம். சொல்லு லீ!"

"அப்பா! எங்க இருக்கிங்க?"

"கோவிலுக்கு வந்தோம்! குழந்தை பிறந்தாச்சா"

"பிறந்துடுச்சுப்பா! நீங்க உடனே கிளம்பி ஹாஸ்பிடல் வாங்க. வரும்போது அம்மாவைக் கூட்டிட்டு வாங்க"

"என்ன சொல்ற? ஏதாவது பிரச்சனையா"

"நேர்ல வாங்க. அம்மாவையும் மறக்காமல் கூட்டிட்டு வாங்க"

அப்பா, மகன் இருவரும் சீன மொழியில் உரையாடுவதுதான் வழக்கம். சீன மொழி நன்றாக தெரிந்தாலும் கணவர் பேசியதை மட்டுமே கேட்டவளுக்கு அந்தப் பக்கத்தில் மகன் என்ன சொன்னானோ என்ற பதற்றத்தில் இதயத் துடிப்பு எகிறிக் கொண்டிருந்தது.

"என்னாச்சுங்க! என்ன

## எழுதும் பெண்களும் எழுதப்படும் பெண்களும் - 17



அழகுநிலா

சொன்னான் லீ! கொழந்தை பிறந்துடுச்சா? பிரச்சனை ஒண்ணுமில்லையே? சுக பிரசவம்தானே? என்ன! நான் கேட்டுக்கிட்டே இருக்கேன். நீங்க அமைதியா இருக்கிங்க"

"குழந்தை பிறந்துடுச்சாம் உமை. ஆனா என்ன பிரச்சனைன்னு தெரியலை. நம்ம ரெண்டு பேரையும் ஒடனே கௌம்பி ஹாஸ்பிடல் வரச்சொல்றான்"

"ரெண்டு பேரையுமா! நல்லா கேட்டீங்களா? உங்களை மட்டும்தான் வரச் சொல்லியிருப்பான்".

"இல்லைம்மா! ஃபோனை வைக்கிறப்ப கூட உன்னை மறக்காமல் கூட்டிட்டு வரச் சொன்னானே!"

"என்னை வரவேண்டாம்ன்னு சொன்னவன் இப்ப வரச் சொல்றான்னா குழந்தைக்கு ஏதாவது.." அவளால் பேசமுடியாமல் தொண்டையை அடைக்க கண்களிலிருந்து கண்ணீர் குபுக்கென்று வெளிவந்தது.

அவர்கள் நினைத்த தற்கு மாறாக மருத்துவமனையில் மகிழ்ச்சி நிரம்பியிருந்த து. உமையாளின் மகன் லீயின் நண்பர்களும் அவளது மனைவியின் நண்பர்களுமாகத் திரண்டிருந்தார்கள். உள்ளே நுழைந்த பெற்றோர்களை - குறிப்பாக அம்மா உமையாளைத் தன்னருகே அழைத்து.

லீ அறிமுகப்படுத்தியவுடன் மரியாதைக்கு இருவரும் புன்முறுவல் செய்ய, வந்திருந்தவர்களில் ஒரு பெண் "ஹாய் லீ! நோ ஒண்டர்! ஷீ ரிசெம்பிள்ஸ் யுவர் மாம்லா!" என்று சத்தமாகக் கூவினாள். எல்லாரும் அதை ஆமோதிப்பது போல தலையாட்ட, இன்னொருவன் "யெஸ் ட்ரூ! ஃபோட்டோ காப்பிலா!" என்றவுடன் லீ, மருமகள் உட்பட எல்லாரும் சத்தமாக சிரித்தார்கள்.

அப்போதுதான் உமையாளுக்கு குழந்தையைப் பற்றிய நினைவு வர வேகமாகக் கட்டிலுக்கு அருகே போனாள். வெள்ளைத்துணியால் சுற்றப்பட்டு மருமகளின் பக்கத்தில் கிடத்தப்பட்டு இருந்த அந்த கறுப்பு ரோஜாவைப் பார்த்தாள். நிறத்தில் மட்டுமல்லாமல் சாயலிலும் அச்சு அசலாய் அவளை உரித்துக்கொண்டு பிறந்திருந்த குட்டி உமையாள். பாட்டியின் அருகாமையை உணர்ந்தவுடன் தனது பிஞ்சு கைகளையும், கால்களையும் அழகாக அசைக்க ஆரம்பித்தாள்.


இக்கதை எழுதப்பெற்ற முறையும் வடிவமும் கறாரான சிறுகதை வடிவத்தன்மை கொண்டது. ஒற்றை நிகழ்வு, அதற்குள் ஒரு திருப்பம், திருப்பத்தின் விளைவில் ஒரு தீர்வு , அதன் வழியாக ஒற்றை உணர்வு வெளிப்பாடு என்ற இலக்கணங்களைக் கொண்டிருக்கிறது. ஆனால் கதையில்

**அ.ராமசாமி**

விவாதிக்கப்படும் காதல் அல்லது கலப்புத் திருமணத்தை இந்த ஒற்றைநிலையில் விவாதிப்பதைவிடப் பல நிகழ்வுகளால், பல தன்மை கொண்ட பாத்திரங்களால், முன்னும் பின்னும் நகரும் காலத்தில் வைத்து எழுதப்பட்டிருக்க வேண்டும். அப்படி எழுதப் பெற்றிருக்கும் நிலையில், குறிப்பிடத்தக்க உலகக் கதையாக மாறியிருக்கும் வாய்ப்புக்கொண்ட தளமுடையது கதைக்கரு.

(அழகுநிலா சிங்கப்பூரில் வசிக்கும் பெண் எழுத்தாளர். கவிதைகள், சிறுகதைகள் எழுதியுள்ளார்.)

(தொடரும்)



# பார்த்தேன் ரசித்தேன்

வானமே பொத்துவிட்டதுபோல, மழை யாழ் மண்ணில் கொட்டித் தீர்த்தபோது, அதிர்ந்து போனேன்... கொட்டோ கொட்டென்று மதியம் 12 வரை மழை தன் கைரிசையைக் காட்டியதால், விவசாயக் காட்சிக்கு செல்லும் என் திட்டம் கிடப்பில் போடப்பட்டு விட்டது. ஆனால் அடுத்த நாள் உடலை எரிக்குமாற்போல் வெயில் அடித்ததால், , முதல்நாள் திட்டமிட்டபடி வட மாகாண விவசாய திணைக்களத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள விவசாயக் கண்காட்சியை நேரில் பார்க்க திருநெல்வேலிக்குச் சென்றேன்.வடக்கு, கிழக்கென்று பல்வேறு பாடசாலை மாணவர்களின் கூட்டம் அலைமோதியது. பாடசாலைச் சீருடை அணிந்து , சக ஆசிரியர்கள் சகிதம் இவர்கள் தொலைதூரத்திலிருந்து வந்து விவசாய அறிவை மேம்படுத்தும் நோக்கில் அங்கு நிறைந்து நிற்பதைப் பார்த்தேன் ரசித்தேன் மகிழ்ந்தேன். பல இடங்களில் போதனாசிரியர்கள் பயிர்ச் செய்கை பற்றிய விரிவான விளக்கங்களைக் கொடுப்பதும், மாணவர்கள் இதை ஆர்வத்தோடு செவிமடுப்பதையும் என்னால் காணமுடிந்தது.

"மண் தொடாத மனிதன் எப்பொழுதும் விண் தொட்டதில்லை"- இப்படித் தன் விழா ஆரம்ப உரையில் கூறியிருந்தவர் வேறு யாருமல்ல. நமது ஆளுநர்தான். பல கண்காட்சிகள் அடுத்தடுத்து நடப்பதும், அதை உற்சாகத்தோடு ஒழுங்குசெய்து, யாழவர்களை முன்னேற்றப் பாதையில். இட்டுச் செல்ல இவர் எடுக்கும் நடவடிக்கைகள் பாராட்டப்பட வேண்டியவை!"காலநிலை மாற்றத்தை எதிர்கொண்டு நஞ்சற்ற உணவு உற்பத்தியில் தன்னிறைவை நோக்கி" என்ற தொனிப்பொருளிலான கண்காட்சியைத்தான் ஏற்பாடு செயதிருக்கிறார்கள். நஞ்சற்ற உணவு கிடைக்காதா என்று ஏங்குமளவிற்கு, நம்மைச் சுற்றி எல்லாமே நச்சேறிப் போயிருக்கின்றன. வாழைப் பொத்தியை அறுத்துவிட்டு யூரியா கொஞ்சம் வைத்த பிளாஸ்டிக் பையைச் சுற்றிக் கட்டிவிடுகிறார்கள். இயற்கையாகப் பழுக்காத மாம்பழத்திற்கு ஊசி ஏற்றுகிறார்கள். மேலை நாடுகளில், பெண்கள் தமது மேலுறுப்பை பெரிதாக்க ஊசி போடுவதற்கும் இதற்கும் என்ன வித்தியாசம்? நமக்குத் தான் போதை தேவையென்றால், நமது உற்பத்திகளுக்குமல்லவா போதையேற்ற ஆரம்பித்து விட்டோம்?

இயற்கை முறை வேளாண்மை, சொட்டு நீர்ப்பாசனம், வீட்டுத் தோட்டங்கள், கால்நடை வளர்ப்பு, நகர்ப்புற வீட்டுத் தோட்டம், கால்நடைகளுக்கான தீவன வளர்ப்பு உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பில், இக்கண்காட்சியில் அறிவூட்டப்பட்டுள்ளது. அழிவடைந்துவரும் பல்வேறு தாவர வகைகள், மூலிகைகள் என்பனவும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. பெருவாரியாக வந்து ஆர்வத்தோடு இக் காண்காட்சியைப் பார்க்கும், இளம் மாணவ மாணவிகள் இனிவரும் காலங்களில், நஞ்சற்ற உணவை உற்பத்தி செய்வதில் பேரார்வம் காட்ட முனைவார்களா?சிறப்பு மிக்க உழவுத் தொழிலினை வள்ளுவர், "உழன்றும் உழவே தலை" என்று புகழ்கிறார்.சேறழைந்து பலருக்கு சோறு போடும் இந்தத் தொழில் மகத்தானது. இனிவரும் காலங்களில் அதிகமானவர்கள், விவசாயம் பக்கம் தம் பார்வையைத் திருப்புவார்களா?யாழ். திருநெல்வேலி விவசாய திணைக்கள தலைமை அலுவலகத்தில் ஆரம்பிக்கப்பட்ட இந்த கண்காட்சி, 4 நாட்கள்(17 ஆம் திகதி தொடக்கம் 20 ஆம் திகதி வரை) நடைபெற்றுள்ளது. இலவச அனுமதி, பலரை உள்நுழைய வைத்திருக்கின்றது. இயற்கை விவசாயம், தேனீ வளர்ப்பு, பயிர்ச்செய்கை, விலங்கு உற்பத்தி உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் இந்த கண்காட்சியின் ஊடாக தெளிவூட்டப்பட்டுள்ளன.

நான் சென்ற பொழுது மதிய நேரமாயிற்றே.. சுட்டெரிக்கும் வெயிலில் சுற்றியதால், தாகமெடுத்தது. பசித்தது. பக்கத்திலுள்ள அம்மாச்சி உணவகத்திற்குச் சென்றேன். என் ஸ்கூட்டரை நிறுத்தி வைக்க இடமில்லாத அளவுக்கு வரிசையில் வாகனங்கள். உணவகத்திற்குள் நுழைய முடியாதவாறு ஜனநெரிசல். முண்டியடித்துக் கொண்டு நின்றது மாணவர் கூட்டம். நஞ்சற்ற உணவை உண்போம் என்று கற்க வந்தவர்கள் பொருத்தமான இடத்திற்குத்தான் வந்துள்ளார்கள். அப்பம் , தோசை , ரொட்டி, என்று பாரம்பரிய உணவுகளை இவர்கள் ஒரு கை பார்ப்பது, பார்த்து ரசிக்கக்கூடிய ஒரு காட்சியாக இருந்தது. ஓதுவது தேவாரம் இடிப்பது சிவன்கோவில் என்று இல்லாமல், நஞ்சற்ற உணவை உண்போம் என்ற செய்தியை ஒரு காதில் போட்டு மறு காது ஊடாக வெளியே விட்டுவிடாமல், செய்தி கிடைத்த சூடோடு, நல்ல தரமான, சூடான உணவை மாணவர்கள் வாங்கி, உண்டு சுவைப்பதை பார்த்து ரசித்தேன்.

ஆனால் ஒரு நெருடல்..தொலைதூரத்தில் இருந்து பயணித்து வந்த ஆயிரக்கணக் கான மாணவமணிகளுக்கு நாம் சோறுபோட வேண்டி வரலாம் என்று முன்பே தெரிந்திருந்தும், கூடுதல் உணவை அன்று தயாரித்து வழங்க ஏன்அம்மாச்சி உணவகப் பொறுப்பு அதிகாரிகள் மறந்து விட்டார்கள்? மதியம் ஒரு மணிக்கு முன்பே பல கவுண்டர்களில் சாப்பாடு தீர்ந்து போயிருப்பதையும், பலர் ஏமாற்றத்தோடு தாம் விரும்பியதை வாங்க முடியாமல் , வெறும் கைகளோடு திரும்புவதையும் காணமுடிந்தது. இதை என்னால் பார்த்து ரசிக்க முடியவில்லை.எனக்குக் கிடைத்த, எனக்குப் பிடித்த இரு புளிச் சாதப் பார்சல்களோடு வெளியேறினேன்.....

நிலங்களில் பாய வேண்டிய நீர்
விழிகளில் வழிகிறது ...

# ‘உடல்தான் ஆயுதம்’ மிரட்டும் சிலந்தி

ராஜேஸ்

என் உடல்தான் எனது மூலதனம். அதை வைத்தே நான் பிழைத்துக்கொள்வேன் என்ற விதி எல்லா உயிரினங்களுக்கும் பொருந் தாது. மிகப் பெரிய உடலமைப்பைக் கொண்ட யானை யின் பலம் வேறு. சிங்கத்தின் பலம் வேறு. பிழைத் திருப்பதில் உடல் ஒரு கருவி மட்டும்தான். அந்தக் கருவியை மூளை எப்படிப் பயன்படுத்துகிறது என்பதில் தான் ஓர் உயிரினத்தின் பிழைத்திருப்பு இருக்கிறது.

எட்டுக் கால்கள் இருப்பது மட்டும்தான் சிலந்தி குறித்து உலகத்துக்குத் தெரிந்த விசயம். ஆனால், சிலந்தி ஓர் ஆயுதக் களஞ்சியம். அந்த ஆயுதக் கிடங்கைச் சுமந்து செல்லும் கருவிதான் அதன் கால்கள். சிலந்திகள் இரையைப் பிடிக்கப் பல உத்தி களை கையாளுகின்றன. வலைப் பின்னுவது சிலந்தி யின் இயல்பான குணம். அப்படிப் பின்னும் வலையை வைத்து அவை என்னவெல்லாம் செய்கின்றன என்பதில்தான் சுவாரஸ்யமே அடங்கியிருக்கிறது.

கோல்டன் ஓர்ப் வேவிங் (GOLDEN ORB WEAVING SPIDER) என்றொரு சிலந்தி வகை இருக்கிறது. தமிழில் பீமன் சிலந்தி என்று பெயர். இதன் வலை தங்க நிறத்தில் இருக்கும். இந்த சிலந்தியின் வலை மற்ற சிலந்தி வலைகளைக் காட்டிலும் வலிமையானது. சிலந்தியின் உடலுக்குள் பட்டு இழைகளை உற்பத்தி செய்யும் சுமார் 100 குழாய்கள் உள்ளன. அவற்றிலிருந்து வெளிவரும் திட பட்டிழைகள் சிலந்தியின் சக்தியால் வேகமாக வெளியே தள்ளும்பொழுது கடினமான திடப் பட்டிழைகளாக வெளிப்படுகின்றன. இடியப்பம் பிழிவது போன்ற முறைதான். ஆனால், சிலந்தியின் அழுத்தம் பல மடங்காக இருக்கும்.


இப்படி உற்பத்தியாகும் பட்டிழைகளைக் கொண்டே இவை வலையைப் பின்னுகின்றன. பின்னிய வலையில் எங்கு அதிர்வுகள் தெரிந்தாலும் உடனடியாக பீமன் சிலந்திகள் கண்டுபிடித்து விடுகின்றன. வலையில் சிக்கிய பூச்சிகளை இவை உடனடியாக உண்பதில்லை. சிக்கிய இரையை புதிய வலையொன்றைப் பின்னி அதற்குள் வைத்து மொத்த வலையின் நடுப்பகுதிக்குக் கொண்டுவந்து வைத்துவிடுகின்றன. அந்தப் பகுதி ‘வலைக்குள் இருக்கிற பிணவறையாக’ பயன்படுத்தப்படும். எப்போதெல்லாம் பசிக்கிறதோ அப்போதெல்லாம் எடுத்து உணவாக்கிக்கொள்ளும். பறவைகள், வெளவால்கள் கூட இந்த சிலந்தியின் வலையில் சில சமயங்களில் சிக்கிக்கொள்ளும். அந்தளவிற்கு அதன் வலை வலிமையானது.


ஜம்பிங் சிலந்தி JUMBING SPIDER அதாவது பாயும் சிலந்தி என்றொரு வகை சிலந்தி இருக்கிறது. இது மற்ற சிலந்திகளைப் போல வலை பின்னி இரைக்காகக் காத்திருப்பதில்லை. இரையைக் கண்டுவிட்டால் போதும் நேரடி தாக்குதலைத் தொடுத்துவிடும். இந்தச் சிலந்தி 8 கண்களைக் கொண்டது. 360 பாகையிலும் பார்வை கொண்டது. உண்மையில் “ஓடவும் முடியாது ஒளியவும் முடியாது” என்ற வசனம் இதற்குத்தான் பொருந்தும். தன்னுடைய உடலின் மொத்த நீளத்தைவிட முப்பது மடங்கு அதிக நீளத்தைத் பாயும் அளவுக்குத் திறமை கொண்டது. அப்படித் தாண்டும்போது அசம்பாவிதங்கள் நடக்காமல் இருக்க முன்னெச்சரிக்கையாக வலையைக் கயிறாகப் பயன்படுத்திக்கொள்ளும்.

fishing spider என ஒரு வகை இருக்கிறது. தண்ணீரில் நடக்கக் கூடியது. தண்ணீருக்கு அடியில் இருக்கிற உயிரினங்களை மிகத் துல்லியமாக அறியக் கூடிய சிலந்தி. இவ்வகை சிலந்தி கடலுக்கு அடியிலும் சுவாசிக்கக் கூடியது. இதன் முக்கிய உணவு சிறிய மீன்கள். மீனைப் பிடித்ததும் அதன் உடலில் விஷ த்தைச் செலுத்திவிடுகிறது. அந்த விஷம் இரையின் நரம்பு மண்டலத்தை முடக்கக்கூடியது. சுருங்கச் சொன்னால் மீனுக்குப் பக்கவாதத்தை உருவாக்கும். அதன் பிறகே மீனை உணவாக எடுத்துக்கொள்ளும்.

king baboon spider பபூன் சிலந்தி. சக்திவாய்ந்த மனிதர்கள் சக்திவாய்ந்த இடங்களிலிருந்து வருவார்கள் என்பார்கள். அதற்குப் பொருந்திப் போகிற ஒரு சிலந்தி. இதன் உருவத்தைப் பார்த்தால் மனிதர்கள் பயந்துதான் வாழ வேண்டும் என்றளவுக்கு விநோதமான சிலந்தி. ஆனால், அது தன்னை வெளி உலகத்துக்குக் காட்டிக்கொள்வதில் தயக்கம்கொண்டது. இதனால் மண்ணுக்கு அடியிலேயே வாழ்கிறது. தங்கி யிருக்கும் குழியின் நுழைவு வாயிலில் தன்னுடைய வலையைப் பின்னி வைத்திருக்கும். அதில் அதிர்வு கள் தென்பட்டால் உடனடியாக வாசலுக்கு வந்து இரை யைப் பிடித்துக்கொண்டு மீண்டும் உள்ளே சென்றுவிடும்.

இதன் இன்னொரு பலம் அதன் கண்கள். ஆறு கண்களும் தலைக்கு மேலாக இருப்பதால் 360 பாகை கோணத்திலும் இவற்றால் பார்க்கமுடியும். நீர்மூழ்கிக் கப்பல்களில் இருக்கும் பெரிஸ்கோப் கருவி போன்றது. கடலுக்குள் இருந்துகொண்டே கடலின் மட்டத்தை







வேவு பார்க்கும் அதே தொழில்நுட்பம்தான். இப்படிப் பல விசித்திரங்களைக் கொண்ட பல சிலந்திகள் உலகத்தில் இருக்கின்றன. நம் ஊரில் இருப்பதெல்லாம் சிலந்தி வகைகளின் தொடக்க வகைகள்தான். வில்லன்கள் எல்லாம் வெளிநாடுகளில்தான் இருக்கிறார்கள்.

கடந்த ஜூலை மாதம் வரை சுமார் 48,200 வகையான சிலந்தி வகைகள் கண்டறியப்பட்டுள்ளன. இதில் 205 வகை சிலந்திகள் விஷம் கொண்டவை. சிலந்தி வலை என்பது சிலந்தி வயிற்றுப்பகுதியில் நூற்கும் உறுப்பிலுள்ள பல நுண்ணிய துளைகள் வழியே வெளிப்படும் பொருள். அப்படி வரும் பட்டிழைகள் திரவ நிலையில்தான் சிலந்தியின் உடலிலிருந்து வெளிவருகிறது. பின்பு காற்றில் வினைபுரிந்து அந்த இழைகள் திட நிலையை அடைந்துவிடுகின்றன. இது உணவைப் பிடிப்பதற்கும் தான் வசிப்பதற்கும் பயன்படுத்துகிறது. ஆனால், அனைத்து வகை சிலந்திகளும் தங்கள் வலைகளை இரையைப் பிடிக்க பயன்படுத்துவ தில்லை. வலை பின்னாத சில வகை சிலந்திகள் கூட உள்ளன.

எல்லா சிலந்திகளின் உடலமைப்பும் ஒன்று போலவே இருக்கும். தலையோடு இருக்கும் நெஞ்சுப் பகுதியையும், வயிற்றுப்பகுதியும் மெல்லிய உருளை வடிவான இணைப்புத் தண்டு இணைக்கின்றது. இந்த இணைப்புத்தண்டை பெடிசெல் (pedicel) என்பர். விவசாயத்துக்குப் பயன்படும் உழவியந்திரத்தையும் பின்னால் பொருத்தப்பட்டட உழவு கருவியையும் நினைத்துக்கொள்ளுங்கள். இதன் குடல் மிகச் சிறியது என்பதால் சிலந்திகள் பெரிய கடின உணவை உண்ண இயலாது. சுவைக்கும் வாய்ப்பகுதியும் கிடையாது. எனவே, சிலந்திகள் தான் உண்ணும் இரையின் உடலினுள் தன்னுடலில் சுரக்கும் நொதி என்னும் சமிபாடு அடைய செய்யும் திரவத்தைச் செலுத்துகிறது. இரையின் தசைப் பகுதி அனைத்தும் அந்நீர்மத்தில் கரைந்து நன்கு திரவமாகிவிடுகிறது. அதனை சிலந்திகள் உறிஞ்சி உண்கின்றன.


உலகிலுள்ள 205 விஷச் சிலந்தி வகைகளில் 40 வீத சிலந்திகளின் விஷம் மருத்துவ உலகில் மருந்தாகப் பயன்படுகிறது. குறிப்பாக பிளக் விடோ என்ற சிலந்தியின் விஷம் மருத்துவப் பயன்பாட்டில் இருக்கிறது. இந்த விஷத்தில் லட்ரோரொக்சின் (latrotoxin) உள்ளது. இது ஒரு புரதம். சிலந்தியின் நஞ்சிலுள்ள புரதமானது நியூரான்களில் செல் இறப்பைத் தடுக்கிறது என ஆய்வில் தெரியவந்துள்ளது. எலிகளை வைத்து இதை சோதித்து உள்ளார்கள் வெற்றியடைந்தால் மனிதனுக்குச் செலுத்தப்படும்.

100 இற்கும் மேற்பட்ட சிலந்திகளின் நஞ்சுகளைச் சோதனை செய்த யேல் (Yale) பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்கள் ஹபெருவியன் பசுமை வெல்வெட் டரன்ட்லொஸ்' என்ற சிலந்தியின் விஷ த்தில் ஒரு வகை புரதம் இருப்பதை அடையாளம் கண்டனர். இது வலியைக் கடத்தும் நியூரான்களில் சேர்ந்து பயணிக்கும்போது. அந்த நியூரான்களின் செயல்திறன் குறைந்ததைக் கண்டறிந்தனர். எதிர்கால மருத்துவ உலகில் டரன்ட்லொஸ் சிலந்தியின் விஷம் முக்கியமான வலி நிவாரணியாக இருக்கும் என அவர்கள் கணித்திருக்கிறார்கள்.

உலகத்தில் பிறக்கும் ஒவ்வொரு உயிருக்கும் அதன் உடல்தான் மூலதனம். உயிர் பிழைத்திருக்கும் விடயத்தில் மனிதனைத் தவிர்த்து மற்ற உயிரினங் களின் மூளை 100 வீதம் வேலை செய்தால் உடலும் 100 வீதம் வேலை செய்தாக வேண்டும் அப்போது தான் பிழைக்க முடியும். சிலந்தி செய்வதும் அதைத்தான்.

# நான் வாக்காளன் சொல்லுறன், கேளுங்கோ...!

நடக்கிற கூத்திலை உது பெரிய கூத்து எண்டு நினைக்கிறன். வாற எலக்சன் நடக்கிறதுக் கிடையிலை உதைப் போலை பல கூத்தைப் பாக்கப் போறம் எண்டு நினைக்கிறன். ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின்ரை ஜனாதிபதி வேட்பாளர் கோட்டாபய ராஜபக்சவை எலச்சனிலை போட்டியிடுகிறதைத் தடுக்க அவைக்கு எதிரான பாட்டியள் தலைகீழா நிக்கிறதாக் கேள்வி. எலக்சனுக்கு முன்னம் அவரைக் கைது செய்து அடைச்சால் அவர் எலக்சன் கேக்கேலாது தானே? அப்ப தாங்கள் வெல்லலாம் எண்டு அவை எண்ணுகினம். இதை ஆர் சொல்லி இருப்பினம் எண்டு நினைக்கிறியள். ராஜபக்சவின்ரை காலைக் கையைப் பிடிச்சுக் கொண்டு திரியிற விமல் வீரவன்சதான் உப்பிடி எல்லாம் நடக்குதெண்டு சொல்லித் திரியிறார்.



இதைவிடப் பெரிய கூத்தும், நல்ல முசுப்பாத்தியும் எண்டு சொல்ல வேறை ஒரு விசியம் இருக்கு. அது என்னெண்டால் வாற எலக்சனுக்கு வோட்டுப் போட வெளிநாட்டிலை இருக்கிற சிங்கள ஆக்களையும் பிளேனிலை ஏத்திக் கொண்டு வரப்போகினமாம். இரண்டு லட்சம் சனம் வெளியிலை இருக்கினம் எண்டும் அவையளைக் கொண்டு வந்தால் சுலபமாத் தாங்கள் வெல்லலாம் எண்டும் ராஜபக்ச குழுமம் நினைக்கிது. உதைச் சாட்டி எத்தினை சனம் ஊருக்கு வந்து இனசனத்தைப் பாத்திட்டுப் போகப்போகுதோ தெரியாது. நல்ல காலம் தமிழ் அரசியல் தலையள் உது மாதிரிச் சிந்திச்சால் எண்டு நினைக்கேக்கை... உலகமெல்லாம் முப்பத்தைஞ்சு இலட்சம் தமிழ் சனம் இருக்கினம். அவையளைக் கொண்டு வந்து வோட்டுப் போட்டால்? சும்மா பகிடிக்கு ஒருதரம் யோசிச்சுப் பாத்தன். தயவு செய்து என்னை நக்கலடியாதையுங்கோ, ப்ளீஸ்..!

உதைக் கேள்விப்பட்டிட்டு ஒராள் ரெலிபோன் எடுத்து உது சாத்தியமோ? அண்ணை எண்டு என்னைக் கேட்டார். அதுக்கு நான் "பிளேன் ஒண்டை வாடைகைக்கு எடுத்து முஸ்லிம் ஆக்கள் ஹச்சுக்குப் போற மாதிரி இரவு பகலா ஏத்தி இறக்கினால் ஓரளவுக்கு விசியம் சாத்தியமாகலாம்," எண்டு சொன்னன். அவன் நம்பிவிட்டார்.

அப்பிடி கோத்தாவைக் கைது செய்யலாமோ எண்டும் ஒரு கேள்வி இருக்கு. 2005 ஆம் ஆண்டு அவர் "கொற" வாக்காளர் பதிவைச் செய்திருக்கிறார். பிறகு இலங்கை பாஸ்போட்டொன்றை எடுத்திருக்கிறார். அதுக்குப் பிறகு சண்டைப் பிளேன் வாங்கினதிலை மோசடி, பிறகு மிதக்கிற ஆயுதக் களஞ்சியம் வைச்சுச் சட்டவிரோத ஆயுத வியாபாரம். அப்பிடி இப்பிடி எண்டெல்லாம் பல குற்றச்சாட்டுகள் மாப்பிளையிலை இருக்கு. இது ரணிலுக்கும் தெரியும், மைத்திரிக்கும் தெரியும். அதாலை ஆளை அமத்திப் போட்டால் தான் வெல்லலாம் எண்டது ரணிலின்ரை ஐதீகம். உப்பிடித்தான் தனக்கு எதிரா சஜித் போனாலும் எண்டு ஏதோ பழைய பைலைக் கிளறி எடுத்திட்டு அவரையும் வெருட்டினவராம் ரணில். ஆனால் சஜித் அதுக்குப் பயப்பிடேல்லை எண்டும் ஒரு கதை.

ஆனால் கோத்தாவை எவரும் விழுத்தேலாது. அவர் ஒரு வீரன். அவருக்குப் பத்தும் பலதும் தெரியும். ஆள் தப்புவர் எண்டு பொதுஜனப் பெரமுனக் கட்சியின்ரை தவிசாளர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் சொல்லிப்போட்டு ஜனாதிபதித் தேர்தலிலை அவர் வெற்றிபெறுவது உறுதி எண்டும் சொன்னவராம்.

"தாய் நாட்டைக் காப்பாற்றுவோம். கோத்தாவை வெற்றி பெறச் செய்வோம். நவம்பர் 16 ஆம் திகதி தேர்தலுக்காக இலங்கைக்குச் செல்வோம்" என்ற கருத்துப்பட கொழும்பிலையும் பிற ஊர்களிலையும் கூட்டம் நடத்திக் கத்தினமாம். அதோடை மத்திய கிழக்கு நாடுகள் உள்ளிட்ட வெளிநாடுகளிலையும், விழிப்புணர்வுக் கூட்டங்களை நடத்தி இலங்கை பிரஜாவுரிமையோடை அங்கு சீவிக்கிற சிங்கள மக்களையும் இலங்கைக்குக் கூட்டிக்கொண்டு வந்து நவம்பர் 16 ஆம் திகதி வாக்களிக்க வைக்க வேணும் எண்டு மஹிந்தா குழுமம் நாண்டு கொண்டு இருக்கினமாம்.

அவை அப்பிடிச் சிந்திக்கிறதையும் பிழை எண்டும் சொல்லேலாது. பேராசிரியர் சன்ன ஜயசுமன போலை உள்ள சிங்களப் புத்திசீவியளை வெளிநாடுகளுக்குப் பிளேனிலை கூட்டிக் கொண்டு போய் அங்கை இருக்கிற சிங்கள ஆக்கள் கேக்கக் கூடியதாக விழிப்புணர்வுக் கூட்டங்களை நடத்தினாலும் கோத்தா வெல்ல வாய்ப்பிருக்கிறதாயும் கதைக்கினம். அதிலை முதலாவது கூட்டத்தை பிரான்ஸிலை வைக்கப் போயினமாம். அதைத் தொட்டுப் பிறகு அவுஸ்திரேலியா, நியூஸிலாந்து, அமெரிக்கா, கனடா எண்டு எல்லா நாட்டிலையும் பிரச்சாரக் கூட்டங்களை நடத்தினால் கோத்தாவுக்கு நல்ல ஆதரவு கிடைக்கும் எண்டு பேந்தும் பேந்தும் பீரிஸ்தான் சொல்லித் திரியிறாராம்.

அதைக் கேட்ட எங்கடை ஒராள் சொல்லுறார், மூளை கெட்டவங்கள். அப்பிடி இரண்டு லட்சம் சனத்தை வெளிநாட்டிலை இருந்து கொண்டு வாறதைக் காட்டிலும், இஞ்சை ரணிலுக்குப் போடுறம் எண்டு நாண்டு கொண்டிருக்கிற சகோதரங்களுக்கு உந்தக் காசைக் குடுத்தால் வலு சுலபமா வோட்டைப் போட்டிட்டுப் போயிடுவங்கள். ஆக்களை இம்போட் எக்ஸ்போட் எல்லாம் செய்யத்தேவை இல்லை எண்டும் சனம் கதைக்கினம்.

காசுக்குக் குண்டு வைக்கிற கோஷ்டி கையுக்கை இருக்கேக்கை அவங்களைக் கூப்பிட்டு, "இந்தா தம்பி காசைக் கையிலை பிடி.. வோட்டைப்போடு.. குண்டை மட்டும் வையாதை" எண்டு சொல்லிக் காசைக் குடுத்து வோட்டை விலைக்கு வாங்கிறது சுலபமெல்லே! ஏன் சும்மா ஆக்களையும், பிளேனையும் மினைக்கெடுத்துவான்?

எப்பிடியும் மஹிந்தான்ரை குழு கோத்தாவைக் கொண்டு வந்திட வேணும் தலை குத்திக் கொண்டு நிக்கினமாம். அமெரிக்காவும், இந்தியாவும் இரட்டைக் கேம். இரண்டு பக்கமும் விளையாட்டைக் காட்டுறாங்கள். அதுக்கு இந்தியா றோவும் வரதராசாப் பெருமாளைப் பிடிச்சுக் கோத்தாவுக்காகப் போய்க். கதைச்சுச் சனத்துக்கு முன்னாலை நடியுங்கோ. எண்டு சொன்னதாக் கேள்வி. வரதரும், டக்கரும் மச்சான் பாட்போட்டுக் கொண்டு மட்டக்களப்புக்குப் போனவை யாம். பிறகு ஒருக்கா திருகோணாமலைக்கும் போக வேணுமெண்டு கதைச்சவையாம். அமெரிக்கா ஒரு பக்கம். இந்தியாக் காரர் ஒரு பக்கம். அவை இரண்டு பேருக்கும் நடுவிலை சைனாக்காரன் ஆப்பிளுத்த குரங்குமாதிரி என்ன செய்யிறதெண்டு தெரியாமல் முழிக்கிற முழிப்பு? படம் பாத்த மாதிரிக் கிடக்கு. சாதுவா எங்களுக்கும் தலை சுத்துதெல்லே?

எப்பிடி இருக்கு இந்தக் கூத்துகள்? ஊருலகத்திலை இல்லாத நாட்டுக் கூத்தெல்லே இது!



# வைரமுத்து வாத்தியார் பேசுகிறார்

இதை ஒழுக்கத்துடன் வாழ்கின்ற உறவுகள் படிப்பதைத் தவிர்க்கவும். அனைத்து புலம்பெயர் உறவுகளிற்குமான பதிவல்ல, சூழ்நிலை சார்ந்து, அதாவது தம்மை எல்லாவகையிலும் உயர்ந்ததாகக் காட்ட நடிக்கும் உறவுகளுக்கானது மட்டுமே!

புலம்பெயர் தமிழ் உறவுகளே, சற்றுச் சிந்தியுங்கள்...!

என்று சர்வதேசவாசி ஒருவர் தனது முகநூலில் பதிவிட்டிருப்பதாக எனக்கு அன்பர் ஒருவர் காட்டினார். அந்தப் பதிவைப் பார்த்ததும் வாத்தியாரல்லவா நான்! அதனைப் பொது மக்களாகிய உங்களுடன் பதிவிடலாம் என்று எண்ணினேன். நீங்களும் படியுங்கள். பிடித்தால் பிறருக்கும் பகிருங்கள். பயனடையுங்கள்.

நீங்கள் இங்கு வரும்போது, இங்கு உள்ள உங்கள் உறவினர்களிடத்தில் வெளிநாட்டு மதுபானங்களையும் சிகரெட்டுகளையும் அறிமுகப்படுத்தாதீர்கள் மாறாக வெளிநாட்டுக் கல்வியையும், பொருளாதாரத்தையும் அறிமுகப்படுத்துங்கள். மாதாந்தம் பணம் வழங்கி முதுகெலும்பற்ற பிறரில் தங்கிவாழும் தலைமுறையை உருவாக்காதீர்கள், முடிந்தால் நிலையான வருமானமீட்டலிற்கோ – வாழ்வாதாரத்திற்கோ உதவி செய்யுங்கள். அவர்களின் ஆடம்பர வாழ்க்கைக்கு பணம் வழங்குவதைவிட இன்னமும் அடிப்படை வசதிகளிற்காய் ஏங்கும் தமிழ் உறவுகளிற்கு உதவுங்கள்.

பனியில் வெய்யிலில் பதினொருமாதம் வேலை செய்து ஒரு மாதம் ஓய்வெடுக்க நீங்கள் வருவதை நாமறிவோம். ஆயினும், உங்கள் ஒருமாத கால உல்லாச வாழ்க்கையையே வெளிநாட்டு வாழ்வாக எம்மவர்கள் பிழையாக புரிந்து கொள்கின்றார்கள். எனவே இங்கு நீங்கள் தங்கியுள்ள ஒருமாத காலத்திலும் உங்கள் செயற்பாடுகள் இவர்களுக்கு சிறந்த முன்னுதாரணமாக அமைந்தால் சிறப்பாக இருக்கும். (குறிப்பாக நீங்கள் கூழ் காச்சி தண்ணி அடித்துக் கும்மாளம் கொட்டும் புகைப்படங்களை எடுத்துத் தயவு செய்து சமூக வலைத்தளங்களில் பதிவேற்ற வேண்டாம்.) தற்பொழுதுள்ள இளைய தலைமுறையை இலங்கையிலேயே தொடர்ந்து தமது அடையாளத்துடன் வாழ அறிவுரை கூறுங்கள்.

இன்னமும் தமிழர் குடிபெயர்ந்தால் இது சிங்கள மக்களிற்கான நாடு என்பதில் பிழையேதும் இல்லை. குறிப்பாகக் கற்ற அறிவுசார் உறவுகளிடத்தில் உங்கள் கல்விக்கு நீங்கள் வெளிநாடு வந்தால் இவ்வளவு உழைக்கலாம் என இலங்கை ரூபாவில் பெருக்கிக் கூட்டிக் கழிச்சுக் கணக்குக் காட்டாதீர்கள். அவர்கள் வாய் பிழந்து ஏங்குமாறு அங்குள்ள விடயங்களை அதிகப்படுத்திக் அவர்களுக்குக் கூறாதீர்கள் அவர்கள் தான் எதிர்காலத்தில் ஏனைய தமிழ் மக்களிற்கு பலமாகவும் வழிகாட்டியாகவும் இருக்கப்போகின்றவர்கள். எனவே வாழ்க்கையை ஒழுக்கம் நிறைந்த, அறிவு பூர்வமாகச் சிந்திக்கக் கூடியதான புத்திமதிகளைச் சொல்லிவிட்டுப் போங்கள். அப்படி ஏதாவது வாங்கிக் கொடுத்து அவர்களை மகிழ்விக்க எண்ணினால், அவர்களை நல்ல புத்தகக் கடைக்குக் கூட்டிக் கொண்டு செல்லுங்கள். அவற்றில் அவர்களுக்குப் பிடித்தமானவற்றை வாங்கிக் கொடுங்கள். அவர்கள் வாசிக்க விருப்பமற்றவர்களாக இருக்கக் கூடும். ஆனால் அவர்களுக்கு அந்த விருப்பத்தையும் நீங்கள்தான் ஏற்படுத்த வேண்டும். உங்களால் முடியும். சிந்தியுங்கள்.

# நேசிக்கிறார்கள் வாசிப்பதை!



தன் தலைநகரின் சதுக்கத்தில், அழகிய , பிரமாண்டமான ஒரு நூலகத்தை கட்டியெழுப்பி இருக்கின்றது பின்லாந்து. இந்த நூலகத்திலிருந்து பாராளுமன்றத்தை முழுமையாகப் பார்க்க முடியும். 10,000 சதுரஅடி விஸ்தீரணத்தைக் கொண்ட இந்த நூலகத்தின் 95 வீதமான பகுதி; மக்கள் பாவனைக்காகவே விடப்பட்டுள்ளது. ஒரு வாரத்தில் 90 மணி நேரம் பொதுமக்கள் இங்கு தமது நேரத்தைச் செலவிட முடியும். Oodi என்று பெயரிடப்பட்ட இந்த நூலகத்திற்கு, 2019ஆம் ஆண்டுக்குரிய சிறந்த நூலக விருதை அளித்துள்ளார்கள். உலகெங்கிலுமுள்ள 16 நூலகங்கள் இந்த விருதுக்கு போட்டியிட்டிருந்தன. மக்களின் பலதரப்பட்ட தேவைகளைப் பூர்த்தி செய்ய நிலமட்டத்தோடு உள்ளதோடு, பிள்ளைகள் விளையாடும் இடம் , சினிமா தியேட்டர், உணவகம் என்றும் கட்டியெழுப்பி இருக்கிறார்கள். இரண்டாம் மாடியில் ஸ்கானர் தொடக்கம் தையல் இயந்திரம் வரை மக்கள் பாவனைக்காக உள்ளன. மேல் மாடியில்தான் 100,000 வரையிலான புத்தகங்களோடு நூலகம் இருக்கின்றது.

வாசகர் வருகையால்
விடுதலை பெற்றன
நூலகப் புத்தகங்கள்

# 22வயதுக்கு 900 டொலர்களா?

எதைக் கொண்டு விலை தீர்மானிக்கப்படுகிறது? சில நேரங்களில் இதைப்பற்றிச்சிந்தித்தால் குழப்பந்தான் எஞ்சும். தலையைச் சுற்ற வைக்கும் விலைகளும் இருக்கின்றன.எம்மால் ஒரு கப் கோப்பி 100 ரூபாவுக்கு குடிக்க முடிகிற அதே நேரத்தில், 162000 ரூபா( 900 டொலர்) கொடுத்து ஒரு கப் கோப்பியை அருந்துகிறார்கள் என்பது நம்ப முடியாத



கதைதான். ஆனால் நிஜத்தில் நடக்கிறதே. சுவையான கோப்பிக்கு பிரபல்யமான ஜப்பானின் ஒரு சிறிய கோப்பிக் கடையான "மஞ்சில்" (Münch)தான் இந்த விலை. உடனடியாக வறுத்து தயாரிக்கப்படும் இந்தக் கோப்பிக் கொட்டையின் வயது 22 ஆண்டுகள். இந்தக் குட்டிக் கடையை தனி ஒருவரே நடத்துகிறார். வைன் பீப்பாய்களில் அடைத்து வைக்கப்பட்டு, பல வருடங்கள் கழித்து பெரு விலையில் விற்கப்படுவதுபோல, இவரும் கோப்பிக் கொட்டைகளை வறுத்தெடுக்க முன்னர், ஆண்டுக்கணக்காக பீப்பாய்களில் அடைத்து வைக்கிறார். கஞ்சி ரானகா என்ற பெயர் கொண்ட இந்த ஜப்பானியரிடம், மலிவான விலையில், அதாவது 10 டொலர் விலையிலும் சுவையான கோப்பியைப் பருக முடியுமாம்.

எழுத்துக்கு விலை இல்லை
என்பான் அமைதியாக
உணவிற்கு விலையுண்டு
அவனுக்குத் தெரியவில்லை

# மணல் கோட்டைகள்



எது எதெற்கெல்லாம் இந்த கின்னஸ் நிறுவனம் சாதனைகளை உருவாக்கி வருகிறது என்ற விவஸ்தையே இல்லாமல் போய்விட்டது. மனம் பலதையும் ஆசைப்பட்டு, அதைச் சாதனையாக்கவும் விழைகிறது நடந்தால் ஒரு சாதனை.. இருந்தால் இன்னொரு சாதனை, எழுந்தால் வேறு சாதனை என்று அப்பப்பா சாதனைகளின் தலைகள் நன்றாகவே உருட்டப்படுகின்றன. கடலோரம் 2044 மணற்கோட்டைகள் கட்டி, சாதனையாளர்களாகி இருக்கிறார்கள். ஒரு அமைப்பின் 5000 உறுப்பினர்கள் ஒன்றுகூடி விட்மோர் குடா கடற்கரையில்(அமெரிக்கா) இச் சாதனையை நிறுவி இருக்கிறார்கள். ஒரே தொடரில் இந்தக் கோட்டைகள் எழுப்பப்பட வேண்டும் என்பதோடு, குறைந்த பட்சம் நான்கு கோபுரங்க ளாவது ஒரு கோட்டைக்கு இருக்க வேண்டும் என்பது, அதிகாரிகளின் விதிமுறை. இதற்கு முன்பு 1924 மணல் கோட்டைகள் கட்டி முடிக்கப்பட்டதே உலக சாதனையாக இருந்து வந்துள்ளது.

எல்லா ஆசைக்
கனவுகளை
எப்பொழுதும்
வங்கி சேமிப்பில்
நிரப்பிக்கொண்டே
இருக்கிறது மனம்

# அட கண்றாவி...




மேலைநாட்டு நாகரீகம் என்பது சில சமயங்களில் அத்துமீறிப்போய்விடுகின்றது. இங்கே நடந்திருப்பது, கோமாளித்தன மானதாகவும்ஈ அதே சமயம் அருவருப்பூட்டுவதாகவும், கேவலமானதாகவும் இருக்கின்றது. இச் சம்பவம் பிரான்ஸின் தெற்கிலுள்ள ஒரு ஹாட்டலில்தான் நடந்துள்ளது. தாம் இருந்த ஹாட்டலின் பால்கனியில் தம்மை மறந்து உடலுறவில் ஈடுபட்டிருந்த ஒரு ஜோடி, 12 உயரத்திலிருந்து தலைகுப்பற கீழே விழுந்துள்ளது. ஒரு சனிக்கிழமை அர்த்தராத்திரி 12.30மணிக்கு இந்தக் கேவலம் நடந்துள்ளது. முதலில் தரையில் விழுந்தது பெண். அவளுக்கு மேல் விழுந்ததால் ஆணுக்கு, காயங்கள் கொஞ்சம் குறைவு என்கிறார்கள். அவசர சிகிச்சை வண்டியை வரவழைத்து, தெருவில் நின்றவர்கள் இருவரையும் மருத்துவமனைக்கு அனுப்பி வைத்துள்ளார்கள். ஆணுக்கு வயது 30. சம்பந்தப்பட்ட கனடிய பெண்ணின் வயது 28. கீழே விழுந்தபோது போதையில் இருந்தார்களா என்பதை பொலிஸார் உறுதி செய்ய முயன்றுள்ளார்கள்.

ஒவ்வொரு மனிதனும் ஒரு ரகம்
ருசியாய் விரும்பிக் கடித்துச் சிலர்
சாப்பிடுவதோ விரல் நகம்.

## இங்கே இவர்கள் இப்படி

ஏ.ஜே.ஞானேந்திரன்

# அச்சமில்லை அச்சமில்லை



ஆத்மா, ஆவி என்று சம்பந்தப்படுத்தி, மேலைநாடுகளில் ஹாலோவீன் என்னும் ஒக்டோபர்31இல் உலக நாடுகள் பலவற்றில் இடம்பெறுவது வழமை. இந்தத் தடவை இத் திருவிழாவை ஒட்டி அமெரிக்க பிராந்திய நிறுவனமொன்று . சினிமா ரசிகர்களுக்கு ஒரு சவாலை முன்வைத்திருக்கின்றது. பொதுவாகவே ஸ்டீபன் கிங் என்ற அமெரிக்க எழுத்தாளரின் பேய்க் கதைகள் பல வாசகர்களுக்கு கிலியூட்டுபவை. இவருடைய அனேகமான நாவல்கள் படமாக்கப்பட்டுள்ளன. மொத்தம் 13 ஸ்டீபன் கிங் திரைப்படங்களை பார்க்க அனுமதிப்பதோடு, இவர்களது இருதயத் துடிப்பு எப்படி இருந்தது என்பதையும் கணக்கிடப் போகிறார்கள். ஒரு நேர்முகப் பரீட்சைக்கு முகம் கொடுத்து, அதில் தெரிவாகினால்தான் இந்த வாய்ப்பு கிடைக்கும். ஒரு திரைப்படத்தை பார்த்து முடித்தபோது, எப்படியான உணர்ச்சிக்கு ஆட்பட்டிருந்தார் என்பதும் பதிவு செய்யப்படும் . இதோடு முடியவில்லை. 13 திரைப்படங்கள் பார்த்த கூடோடு, அதிக புள்ளிகளோடு தெரிவாகும் பார்வையாளருக்கு 1300 டொலர் பணமும் வேறு சில பரிசுப் பொருட்களும் வழங்கப்படும்.

உச்சிமீது வானிடிந்து வீழுகின்ற போதினும்,
அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்பதில்லையே.


# இலங்கை இனத்துவ முரண்பாட்டு அரசியலிலில் கேலிச்சித்திரங்கள்

## அத்தியாயம் 3.1.1




### கார்ட்டூன் மொழியும் குறியீடுகளும்

**ஒளிரும் பொருள், வெளிச்சம்**



இக்குறியீடுகளின் மூலம் ஒரு பொருள் வெளிச்சம் பீறிடும் அல்லது ஒளிரும் பொருளைக் காட்டப் பயன் படுத்தப்படும்.

**காதல், பாசம், அன்பு**



இக்குறியீடு காட்டூன் பாத்திரத்தின் காதல், அன்பு, பாசம் என்பவற்றைக் காட்டப் பயன்படுத்தப்படு. காட்சிகளுக்கு ஏற்பப் பொருள் கொள்ளப்படும்.

**பாட்டு, சங்கீதம், ராகம்**



இத்தகைய குறியீடானது காட்டூன் உருவம் பாட்டுப் பாடுதல் அல்லது இராகங்களைக் குறிப்பதற்குக் காட்டூனில் பயன்படுத்தப்படும்.

**துப்பாக்கியால் சுடுதல், டுமீல் சத்தம்**



இத்தகைய குறியீடானது காட்டும் உருவம் துப்பாக்கியால் சுடும்போது குழல் முனையிலிருந்து வெளிப்படுவதுபோல் காட்டப்படுகின்றது.

### அரசியல் கார்ட்டூன்களும் கார்ட்டூனிஸ்டுகளும்

காட்டூன்களின் சமூகப் பெறுமதி அரசியலிலேயே உச்சம் பெறுகிறது. ஏனெனில் அரசியலில் தான் சமூகத்தின் சகல கூறுகளும் மையம் கொள்கின்றன. அரசியல் காட்டூன்களின் முகிழ்ப்பானது பிரித்தானியாவிலேயே ஆரம்பிக்கின்றது. பிரித்தானியா பிரித்தானியர்களுக்கு உறுதிப்படுத்தியுள்ள ஜனநாயகப் பாரம்பரியத்தின் பின்னணியிலேயே வைத்து அது அரசியல் காட்டூன்களின் பிறப்பிடமாக அமைந்ததைப் புரிந்து கொள்ளமுடியும். ஜனநாயக விளைச்சலாகிய அரசியல் காட்டூன் 'ஆர்.கே.லக்ஷ்மன்' குறிப்பிடுவது போல் ஜனநாயகத்தைப் பாதுகாக்கும் அம்சங்களில் ஒன்றாகவும் தொடர்ந்து வளர்ந்து வந்துள்ளது.

*"பழைய காலத்தில் பிரான்ஸில் நிலவிய*
*எதேச்சதிகாரம்*
*அங்கதச் செய்யுள்களால் தணிக்கப்பட்டது*
*என்றும்,*
*ரஷ்யாவில் அது கொலைகளால் தணிக்கப்பட்டது*
*என்றும்,*
*இங்கிலாந்தில் வசதி படைத்தோரின் ஆட்சி*
*கரிக்கேச்சரால் தணிக்கப்பட்டது என்றும்*
*கூறப்படுவதுண்டு"*

என்று இந்தியாவின் பிரபல காட்டூனிஸ்ட் 'அபு ஏபிரகாம்' தனது 'இந்தியக் காடடூன்கள்' எனும் தொகுப்பு நூலின் முன்னுரையில் பதிவாக்கியுள்ளார்.

இன்றைய உலகில் அரசியல் என்பது மிகவும் குழப்பகரமானதாகவும், ஆபத்தானதாகவும் மாறிவிட்டது. எனினும், சிரிப்பதற்கு அரசியலில் தான் அதிகம் உண்டு.

*"அரசியல் என்று ஒன்று இல்லை என்றால்*
*எமது நாட்டில் சிரிப்பதற்கே ஒன்றும் இருந்திருக்காது"*

என்ற பிரஞ்சு முதுமொழியை இங்கு மனங் கொள்ளலாம்.

பிரஞ்சுப் புரட்சியின்போது காட்டூன்கள் அவை இன்றுள்ள வடிவத்தைப் பெற்றிருக்கவில்லை என்றாலும் துண்டுப்பிரசுரங்களில் பதிக்கப்பட்டு மக்களிடையே விநியோகிக்கப்பட்டன. ரஷ்யாவில் ஜார்ஜ் மன்னனின் ஆட்சிக் காலத்தில் காட்டூன்கள் சிறப்பான இடத்தையோ, வளர்ச்சியையோ பெற்றிருக்க வில்லை. ஆனால் ஒக்ரோபர் புரட்சியைத் தொடர்ந்து புரட்சியின் செய்திகளைப் பிரசாரம் செய்யவும், புரட்சி யின் எதிரிகளை விமர்சிக்கவும், கடவுளின் நாமங் களை விமர்சிக்கவும் காட்டூன் ஒரு எளிமையான கலையூடகமாகத் அமைந்திருப்பதனைக் காணலாம்.

சீனாவில் புரட்சியின் பின்னரும் கலாசாரப் புரட்சிக் காலத்திலும் அற்ப ஆளைக் கொண்ட 'தியனென்மென்' எழுச்சியின் போதும் காட்டூன் ஒரு பிரசாரக் கருவியாகப் பயன்பட்டது. இந்திய சுதந்திரப் போராட்டக் காலத்திலேயே தமக்கென சொந்தமாகக் காட்டூனிஸ்ட்டுகளை உருவாக்கவேண்டிய தேவை ஏற்பட்டது.

அதற்கு முன்பு பிரித்தானிய 'பஞ்ச்' பத்திரிகையின் வாசகர்களாக இருந்த படித்த இந்தியர்கள் ஆங்கிலேயரின் இரசனைக்கே பெரிதும் தம்மை இசைவாக்கிக்கொண்டிருந்தனர். ஆனால் சுதந்திரப் போராட்டதின் வளர்ச்சி நிலைகளின்போது இந்தியர்கள் காட்டூனை தேசிய எதிர்ப்பின் ஓவியச் செய்தியாளர்களாகவே இனங்காட்டினர்.

அரசியல் காட்டூன்கள் ஒவ்வொன்றும் அளவிடமுடியாத அல்லது ஒப்பிடமுடியாத உயர்ந்த படைப்புக்கள். இதன் கருத்துக்களை மதிப்பிடுதல் என்பது சிக்கலான நிலையைத் தோற்றுவிக்கும். பார்த்தல், பேசுதல் ஆகிய வளங்களைத் திரட்டி அதன் கருத்துக்களை ஒரே வரிசையில் கட்டுமாணப்படுத்துவது அரசியல் காட்டூன்களாகும்.

வெவ்வேறு காலகட்டங்களில் வெவ்வேறு நாடுகளில் வேவ்வேறு நோக்கங்களுக்காகக் காட்டூன் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது. எனினும் எல்லா இடங்களிலும் அது அந்தந்தக் காலத்தின் விம்பமாகவே அமைந்திருந்தது என்பது பொதுவான அம்சமாகும். ஒரு காட்டூன் அது வெளிவந்த காலத் தொடர்புகளில் இருந்து அதன் Context ஐ பிரித்தறிய முடியாது. குறித்த காலத்தின் சமூகப் பொருளாதார அரசியல் நிலமைகள் பற்றிய விளக்கம் இல்லாமல் அக் குறித்த காலத்துக் காட்டூனை இரசிப்பது சிரமம்.

(தொடரும்)

# கணவனைப்....

(05ஆம் பக்கத் தொடர்ச்சி)

தந்தை செல்வா நாடாளுமன்றத்தின் உள்ளேயும் போராடினார் வெளியேயும் அறவழியில் போராடினார். ஏனெனில் நாடாளுமன்றத்தில் சிங்களப் பெரும்பான்மை இருக்கும் வரை எம்மால் வாக்கெடுப்புகள் மூலம் எமது உரிமைகளைப் பெறமுடியாது ஆனால் நாடாளுமன்றத்தை ஒரு மேடையாக எமது இனத்தின் குரலாக ஒலிக்க வைத்துக்கொண்டு வெளியில் அறவழியில் போராடினால்தான் உரிமைகளை அடையலாம் என்பதுதான் அவர் காட்டிய வழி. விக்கினேஸ்வரன் வேறெந்தப் பாதையைச் சிபார்சு செய்கிறீர்கள் என்பதற்கு இதுதான் விடை. அதேபோல் பதின்மூன்று தீர்வாகாது என்றால் எதுதான் தீர்வு என்று சொல்லியிருக்க வேண்டிய அவர். இந்தியாவை நம்புவதில் என்ன பிழை என்று கேட்டுள்ளார். அது மட்டுமல்ல இந்தியாவை நம்பாமல் சீனாவை நம்பச் சொல்கிறீர்களா என்று எதிர்க்கேள்வி கேட்கிறார்.சட்டம் படித்தவர் நீதிபதியாக இருந்தவர் அப்படிக்கேட்பது விந்தையல்ல. அவர் மேலும் சொல்கிறார் கணவனைப் பறிகொடுத்த சோனியா காந்தி காலம் வேறு இப்போதைய மோடி காலம் வேறாம். இது நகைப்புக்குரிய ஒரு பதிலாகும். பாவம் அவர் அசியலுக்கு புதியவர்தான். ஆனாலும் அவர் ஒன்றை சூட்சுமமாகக் கூறுகிறார் ராஜீவ் காந்தியின் சாவை இங்கு கொண்டு வந்து கணவனைப் பறிகொடுத்த என்று சொல்கிறார். இதன் உட்பொருள் என்ன யாரை நோக்கி அவரது வினா வைக்கப்படுகிறது யார் மேல் குற்றம் சுமத்துகிறார் என்பதுதான் இங்கு எழுகின்ற பெரிய வினாவாகும். காங்கிரஸ் ஆட்சி வேறு பா.ஜ.க. ஆட்சி வேறு என்று சொல்லாமல் இவ்வாறு கணவனைப் பறிகொடுத்த என்று கூறித் தனது இந்தியப் பற்றினைக் காட்டுகிறார். இந்தியாவின் கொள்கை வகுப்பாளர்கள் பதின்மூன்றுக்கும் அப்பால் செல்ல ஒருபோதும் இடமளிக்கமாட்டார்கள் என்பது அரசியலில் உள்ள அனைவருக்கும் தெரியும் ஆனால் விக்கினேஸ்வரனுக்கு அது புரியவில்லை. ஏனெனில் அவருக்கு அரசியல் புதியது. காஷ்மீரில் இப்பொழுது என்ன நடக்கிறது . எதற்காக அம்மாநிலத்தின் உரிமைகளைப் பறித்து இரண்டு ஒன்றியப் பிரதேசங்கள் ஆக்கினார் மோடி என்பது தெரியாமல் மோடி எதோ செய்வார் என்று நம்பும் அளவிற்கு இவர் உள்ளாரே. அரசியலையும் இந்திய நடப்புகளையும் கொஞ்சம் படிக்க வேண்டும் இவர். இந்தியாவின் மோடி ஆட்சியைத் தான் தமிழ்தேசியக் கூட்டமைப்பும் நம்பி உள்ளது. எனவே விக்கினேஸ்வரன் இந்த விடயத்திலாவது அவர்களுடன் இணைந்து பணியாற்றலாமே.

கணவனைப் பறிகொடுத்த சோனியாவைப் பற்றிக் கூறியவர் மனைவியைக் கைவிட்ட மோடியை நம்புக்கிறார். அவர் உரிமைகளைப் பெற்றுத்தருவாராம். இவர் திருமணமே செய்யாத வாஜ்பேய் இரண்டாயிரமாம் ஆண்டு எப்படி நடந்துகொண்டார் என்பதை நினைவில் கொள்ளாமல் வி.பி.சிங்கைத் துணைக்கு இழுத்துள்ளார். ஆனால் மோடி ஆட்சிக்கு வந்து ஐந்து ஆண்டுகள் கடந்த நிலையில் இருபதெட்டு ஆண்டுகளாகச் சிறையில் வாடும் அந்த ஏழு பேர் பற்றி சிந்தித்தாரா இல்லையே.. அப்படிப்பட்ட மோடியை நம்பலாம் என்கிறார் விக்கினேஸ்வரன்.

பெரும்பான்மை இன மக்ககளின் ஒற்றை ஆட்சி அமைப்புள்ள நாடாளுமன்றத்தின் மூலம் தமிழி னத்திற்கு உரிமைகள் பெற வாய்ப்பு இல்லை என்பதை விக்கினேஸ்வரன் முதலில் புரிந்து கொள்ள வேண்டும். தமிழினம் உரிமைகளுடன் இங்கு வாழ வேண்டுமானால் மற்ற இனத்தின் தலையீடு இன்றி வாழ வேண்டுமானால் பதின்மூன்று தீர்வு தராது. ஆனால் இந்தியாவை நம்புவோம் மோடியை நம்புவோம் என்ற பொருத்தமற்ற சொல்லைப் பயன்படுத்திக்கொண்டிருக்காமல் தமிழினத்திற்குப் பதின்மூன்றால் பயனில்லை ஒரு முழுமையான இணைப்பாட்சிதான் தேவை என்று துணிந்து கூற வேண்டும். இதை விடுத்து மோடியையை நம்புவோம் நாடாளுமன்றத்திற்குச் சென்று நெருக்கடிகள் கொடுப்போம் என்பது தமிழினத்தைப் படுகுழிக்குள் தள்ளும் வெற்று அரசியலே ஆகும்.

# அந்த ஒரு நிமிடம்

எஸ். கணபதி



“பாஸ்கி” என்று செல்லமாக அழைத்து அவரின் கைகளை அவள் பற்றிக் கொண்டாள். அவளின் பிஞ்சுக் கைவிரல்கள் அந்தக் கரடுமுரடான கைவிரல்களைப் பற்றிக் கொண்டதை ஒரு சாதாரணமாக எடுத்துக் கொள்ள முடியாவிட்டாலும், அவள் அவரை, அந்த முதிர்ந்த வயதிலும் காதலிக்கிறாள் என்று அறிந்தபோது அவர் நாடிகள் ஒரு கணம் சப்தமற்று ஒடுங்கிப் போய்விட்டன. இருந்தாலும் நிராகரிக்க முடியாதவராய்.... அதனை ஏற்றுக் கொண்டவராய்.....

அவர் அவளோடு நடந்து கொண்டிருந்தார்.

“பாஸ்கி” அவள் மீண்டும் அவரைச் செல்லமாக அழைத்து அவர் தலையை வருடி முத்தமிட்டபோது... அவள் உணர்வுகள் காதலில் தத்தளிக்கிறதா? அல்லது காமத்தின் விழிம்பிலிருக்கிறதா? என்றதை அவரால் தீர்மானிக்க முடியாதபடி அவள் அவரைக் கட்டிப் போட்டிருந்தாள்.

ஒரு இலக்கியச் சந்திப்பில் அது நிகழ்ந்தது. காலை முதல் மாலை வரை தொடர்ந்து மூன்று நாட்கள்... அறிமுகம், விமர்சனம், உரையாடல், இரசனைப் பகிர்வு, படைப்பின் தேவை, படைப்பின் இரகசியம் என பல கோணங்களில் விடயங்கள் பிரசன்னமாயின. வயது வித்தியாசமற்ற கலைஞர்கள் சந்திப்பாக அது நடைபெற்றது. திட்டமிடாதவாறு, ஒவ்வொரு கணத்திலும் அவள் பாஸ்கியோடு மோதவேண்டி ஏற்பட்டது. அச் சந்தர்பங்களில் எல்லாம் பாஸ்கியின் ஆளுமையை அவளால் வெல்ல முடியாது தடுமாறிப்போனாள். அப்போதெல்லாம் “வெல்ல முடியவில்லையே” என்று அவர் மீது அவள் கொண்ட பொறாமையே அவளின் காதலுக்கு ஆரம்ப கர்த்தாவானது.

“முடியாது” என்று மனம் மறுத்த போதெல்லாம், அவர் உதடுகள் மௌனம் சாதித்தன.இது பொருத்தமற்ற உறவு. மனோ பலம் மட்டும் ஒருவரின் வாழ்க்கையைத் தீர்மானிக்காது. உடலாலும் வாழ்க்கை நகர்த்தப்பட வேண்டும் என்ற உண்மையைப் பல முறை எடுத்துச் சொல்லிவிட்டார் பாஸ்கி. அவள் அதனைக் கேட்பதாக இல்லை.

“நான் உங்களுக்கு ஒரு சேவகியாக இருந்து விட்டுப் போகிறேன்” என்கிறாள் அவள்.

“சேவகியாக இருப்பது உனக்கு வேண்டுமானால் இலகுவான காரியமாக இருக்கலாம். நான் அந்தக் குற்றத்தை உடலால் மட்டுமல்ல, உணர்வாலும் சுமக்க வேண்டுமே!. உலகத்தையோ அல்லது அதன் அபிப்பிராயத்தையோ நான் ஒரு பொருட்டாக மதிப்பதில்லை. உலகம் சூழ்நிலைக் கேற்றவாறும், சந்தர்பத்துக்கு ஏற்றவாறும் தன்னை மாற்றிக் கொள்ளும்.

ஆனால் இந்த உறவில் எனக்கு நான் பதில் சொல்ல வேண்டிய சந்தர்பங்கள் பல உண்டு. அவற்றையும் நான் கடந்தாக வேண்டுமே! ஒரு தெருவில் செல்பவனை தெரு ஒழுங்கு விதி முறைகளைப் பின் பற்று என்று அறி வுரை சொல்ல வேண்டிய பொறுப்பைப் போன்றதொரு இடத்தில் இருக்கும் நான் என்னளவிலும் முதல் அந்த ஒழுங்கையும் விதி முறைகளையும் பின்பற்றுபவனாக இருக்க வேண்டாமா! அத்துடன் அதனைப் பின் பற்றுபவனாகப் பிறரால் மதிக்கப்பட வேண்டும். இல்லையேல் எனது பயணம் அர்த்தமற்றதாகப் போய்விடும்.“ என்ற விடயத்தில் பாஸ்கி விடாப்பிடியாக நின்றார்.

ஆரம்ப நாட்களில் ஒரு முறை ஒரு சாலைக் கடவையில் அவர்கள் நின்றிருந்தனர். வண்டிகள் வராது அந்தச் சிறு இடுக்கில் அவள் பாய முற்பட்டபோது பாஸ்கியின் கைவிரல்கள் அவளது இடுப்பினைப் பற்றி அவள் பாய்வதைத் தடுத்து நிறுத்திய அந்த அக்கறை உணர்வு பற்றி...... பின்னர், அதைத்தொடர்ந்து வந்த சந்தர்பங்களில் பாஸ்கியே பல முறை தன்னிடம் அது பற்றிய கேள்விகளைக் கேட்கத் தொடங்கியிருந்தார்.

அவள் தன்னை விரும்புவது அவளது பலவீனம் மட்டுமல்ல, தனது பலமும், பலவீனமும் அதில் அடங்கியிருக்கிறதென்பதை அவரால் ஏற்றுக் கொள்ள முடியாவிட்டாலும் அதற்கு அவரும் பங்களித்திருப்பதை அவர் ஆழ் மனம் உறுத்தியிருக்க வேண்டும். ஏனெனில் அவள் அவரைச் சந்திக்க அழைத்த போதெல்லாம் அவர் மறுக்கவில்லை. அத்துடன் அத்தனை வேலைப் பழுவிற்கும் நடுவிலும் அவர் அவளைச் சந்தித்துக் கொண்டார். அவள் கேள்விக்குப் பதிலளிப்பதற்காக அதிக நேரத்தை எடுத்துக் கொண்டார். ஆரம்பத்தில் அதற்கான காரணத்தை அக்கறை என்றும் ஆர்வமுள்ள ஒருவருக்கு உதவுவதாகவும் எண்ணிக் கொண்டார்.

ஒரு கணம் ஒரு நாவலில் அவள் லயித்துப் போயிருந்தாள். அவளுக்காக வரவழைத்த காலை உணவும், தேநீரும் சூடாறிக் கொண்டிருந்தது. அவர் அவளுக்கு அதை ஞாபகப்படுத்திக் கொண்டார். அவள் கவனமற்றிருந்தபோது உரிமையோடு அவளைக் கடிந்து கொண்டதை அக்கறை என்று மட்டும் எடுத்துக் கொள்ளலாமா?

ஒரு மாரி காலத்து அதி காலைப் பொழுது. அவர் எழுந்துவிட்டார். குளிர் என்றும் பாராது மிகவும் உற்சாகத்தோடு புறப்பட்டு தெருவுக்கு வந்து பஸ் பிடித்து அவள் இருப்பிடம் நெருங்கியபோது அவள் இன்னும் உறங்கிக் கொண்டிருந்தாள் என்பதை மூடியிருந்த வீட்டின் கதவுகள் சொல்லிக் கொண்டன. மழைத் தூறல் எண்டும் பாராமல் அவள் கண் விழிக்கும் வரையும் தாழ்வாரத்தில் ஒதுங்கி நின்று அவள் கண்விழத்து வந்து கதவைத் திறந்தபோது அவளுக்கு பிறந்ததின வாழ்த்தைச் சொல்லி .. அவள் மகிழ்ச்சியில் இரண்டறக் கலந்ததனை எந்த வகைக்குள் உட்படுத்துவதென்று தடுமாறிப் போனார் பாஸ்கி.

கடந்த இரு நாட்களாக அவர் அவளுக்குப் பலவற்றை எடுத்துச் சொல்லிவிட்டார். அறிவு சார்ந்த சிந்தனை எத்துணை அவசியமானதென்று அவளுக்கு விளக்கமளித்துவிட்டார். அவர் எண்ணப்படி ஒரு பேராசிரியராகப் பலரை வெற்றிக் கொள்ள வைத்தவர், பலரை வெற்றி கொண்டவர். ஆனால் பல முறை அவளிடம் தோற்றுப் போயிருந்தார். குற்ற உணர்வில் தடுமாறிப் போயிருந்தார். பல முறைத் தன்னைப் பல கேள்விகளால் கொன்றிருந்தார். மனம் சார்ந்தது மட்டுமல்ல, உணர்வு சார்ந்த விடயம் என்றும் இதனை அவர் பார்ப்பதனால் அவரால் தன்னையும் மீறி, தான் ஒரு சாதாரணமான மனிதன் என்றதையும் கடந்து, தான் ஒரு பொறுப் புள்ள பேராசிரியராக இருப்பதையே அவர் விரும்புகிறார்.

**மாலை 7 மணி 12 நிமி. 43 செக்.**

பாஸ்கி தன் பெட்டி படுக்கைகளை எடுத்துக் கொண்டு தான் இருந்த வீட்டு வாசலை நெருங்கிவிட்டார். வண்டிக்காய் சில நேரக் காத்திருப்பில் அவள் தன்னருகே நின்று கொண்டிருக்கிறாள் என்பதையும் மறந்து அவர் கண்கள் லேசாகப் பனித்திருந்தன. அவள் அதனைக் கண்டு கொள்ளக் கூடாது என்பதற்காக ஒரு சாக்கினைச் சொல்லி ஒருமுறை வீட்டிற்குள் போய் வந்தார். அவர் இருந்த வீட்டுக்காரியும் கதவால் எட்டிக் கதை சொல்லிவிட்டுப் போனாள்.

**மாலை 7 மணி 18 நிமி. 53 செக்.**

வண்டி அந்தக் கிரவல் ஒழுங்கையை விட்டு பெருந்தெருவில் நுழைந்து கொண்டது. அவர் மௌனத்தைக் கலைக்கத் திராணியற்றவராகப் பயணித்துக் கொண்டிருந்தவர் தன் ஆழ் மனதில் அவளை ஏமாற்றிவிட்டேனோ? என்று ஆதங்கப்பட்டுக்கொண்டிருந்தார். கடந்த நாட்களில் தம்மிடையே நடந்த சம்பாஷணைகளை அவர் மனம் இரைமீட்டுக் கொண்டிருந்தது. ஏமாற்றப்பட்டவளாக இல்லை. தனது மனதைச் சமாதானப் படுத்திக் கொள்ள அவள் பல கேள்விகள் கேட்டாள். திருப்தியற்ற போதெல்லாம் அவள் மௌனமாக இருந்தாள். இருந்தும் விடாது தொடர்ந்தாள். தான் திருப்திப்படும்வரையும் பாஸ்கியிடம் பலவற்றை அவள் பேசிவிட்டாள்.

**மாலை 7 மணி 22 நிமி. 32 செக்.**

பாஸ்கியால் இறுக்கத்திலிருந்து இன்னும் விடுபட முடியவில்லை. முதலில் இருந்த நெருக்கம் இல்லை. வண்டியில் அவள் சற்று விலகி அமர்ந்திருந்தாள். இடது கைவிரல்களால் வலது கைவிரல்களைப் பிசைந்தபடி அவள் எதையோ எண்ணி இருக்க வேண்டும். “பாஸ்கி, இனி எப்போது வருவீங்க” மௌனத்தை கலைத்தபடி அவள் வண்டியிலிருந்து இறங்கிக் கொண்டிருந்தாள்.

**மாலை 7 மணி 30 நிமி. 14 செக்.**

பண்ணைவெளியில் நிறுத்தப்பட்டிருந்த அந்த சொகுசு பஸ் வண்டிக்கு முன்னால் அவர்கள் நின்று கொண்டிருந்தனர். “பாஸ்கி! இன்று எனது மொபைல் இலக்கத்தை மாற்றி விட்டேன். வரும்போதுதான் அதனை செயல்படுத்தினேன். குறித்துக் கொள்ளுங்கள். 077.......” அவள் சொல்லச் சொல்ல பாஸ்கி தனது செல்போனில் அதனைப் பதிவேற்றிக் கொண்டார். லவ்விங் மாலதி என்றிருந்ததற்குப் பதிலாக “மறக்க முடியாதவள்” என்று பதிவிட்டுக் கொண்டார் பாஸ்கி.

**மாலை 7 மணி 31 நிமி. 43 செக்.**

பஸ் வண்டியில் எல்லோரும் ஏறிக் கொண்டனர். வண்டி புறப்படத் தயாரானதை அறிவிக்க இருமுறை “ஹோர்ண்” ஒலி எழுப்பிக் கொண்டான் ஓட்டுநர்.

“புறப்பட்டுமா? பாஸ்கி அவளைப் பார்த்தார்.

“பாஸ்கி உங்களுக்கு ஒன்றைச் சொல்ல மறந்துவிட்டேன். கடந்த வாரம் என்னோடு ஒரு புது “கொலிக்” ஆய்வுக்காக இணைந்திருக்கிறான். அவன் பேச்சு, வழக்கு, நடை, உடை எல்லாமே உங்களை ஞாபகப்படுத்துகிறது. நீங்கள் விட்டுச் செல்லும் இடைவெளியை அவன் நிரப்புவான் என்று நம்புகிறேன்.....!

அந்த சொகுசு பஸ் ஒரு கர்ப்பிணித் தாய்போல ஆடி அசைந்து தனது நீண்ட பயணத்துக்காகப் புறப்பட்டது. கண்ணாடிக்குப் பின்னால் பாஸ்கி இருந்து கையசைத்துக் கொண்டதைப் பார்த்தபடி அவள் நிதானமாக நடந்து கொண்டபடி முச்சக்கர வண்டிக்காய்

யாழ்.தர்மினி பத்மநாதன்

# நீதிமன்று...; அமைதி...!

ஏன் வாழவேணும்? இருந்தும் என்ன பயன்? என்ற பதிலில் இருந்து தொடங்கியது அவளின் கதை . அவள் அப்போதுதான் அவசர அவசர மாக வவுனியாவிலிருந்து பஸ் பிடித்து , பஸ்தியான் சந்தியில் இறங்கத் தெரியாமல் யாழ்.நகர் சென்று அங்கிருந்து கொய்யாத்தோட்டம் புது வீதிக்கு அண்மையில் கடற்கரையுடன் இருக்கும் சிறுவர் மற்றும் நீதிவான் நீதிமன்றம் வந்திருந்தாள். களைந்து போன நிலையில் கலைந்து காடாகிப் போன தலையுடன் அங்கும் இங்கும் வெறித்துப் பார்த்தவளாய்...

"உள்ளே எப்படி வருவது என்றே தெரியவில்லை. பழக்கமும் இல்லை. பயந்து பயந்து தான் வந்தன் ரசலில் நின்ற பொலீஸ் கைப்பையை செக் பண்ணிட்டு போனை ஆப் பண்ணிட்டு கன்ரீனில குடுத்துட்டுப் போக சொன்னார். நானும் பிரீ எண்டு நினைச்சன் பாதுகாத்து தர 20 ரூபாவாம் . நானோ சாப்பிடக் காசும் இல்லாமல் விடிய 5 மணிக்கு வெளிக்கிட்டு தேத்தண்ணியும் குடிக்காமல் 9 மணிக்கு நிக்கவேணும் எண்டு ஓடி வந்தன்" என்றவள் பெருமூச்சுடன் நீதிமன்ற இருக்கையின் பின்னால் உள்ள மணிக்கூட்டை பார்க்கையில் . அது நேரம் 9. 45 ஐக் காட்டியது. இருந்தும் இன்னும் நீதிபதி மன்றுக்கு வரவில்லை.

"இப்பிடித்தான் நான் இதோட 4,5 முறை வந்திட்டான் ஒருக்காலும் நேரத்துக்கு தொடங்கிறதில்லை. 9 க்கு நில்லுங்கோ 9.30 க்கு வழக்கு தொடங்கும் என்று தான் லோயர் சொல்றவர். ஆனால் நாங்கள் வந்தாலும் சொன்ன நேரத்துக்கு லோயரும் வாறதில்லை, நீதிமன்றம் தொடங்கிறதும் இல்லை. மேல் நீதிமன்றம் இப்பிடி பிந்துறது இல்லை. இதை லோயர் மாரும் கதைக்கமாட்டினம் அவையும் வந்து காஞ்சு கொண்டு இருப்பினம்". என்றாள் பக்கத்தில் இருந்த யாழ் நகரைச் சேர்ந்த இளம் பெண் ஒருவர்.

அப்போது,

அங்கும் இங்கும் ஒவ்வொரு பணியாளர்களும் உரத்து சத்தமிட்டபடி அறை மாறி அறை திரிந்து கொண்டு இருந்தார்கள். சந்தை போன்று சத்தமிட்டுக் கொண்டிருந்த மன்றின் அவையினுள் அவர்களுக்கு நடுவில் கோவைக் கட்டுகளுடன் சுகாதார பணியாளர்கள். டெங்கு பரிசோதகர், போலீசார் என்று வரிசையாக இருக்கைகளில் இருக்க தொடங்கினார்கள். அவர்களின் பின்னால் குற்றவாளிகளாக குற்றம் சுமத்தப் படப் போகின்றவர்கள் பின்தொடர்ந்தமர்ந்தனர். சட்டத்தரணிகளும் மிக வேகமாக வந்து நீதிபதி முன்னாள் உள்ள தமது ஆசனங்களில் அமர்ந்து கொண்டனர். பொதுமக்களுடன் பக்குவமாக கண்ணியமாக தொடர்பாடலை ஏற்படுத்த தெரியாத ஒருவன் எடுபிடியாக நின்று மக்களை இருக்கையில் அமர்த்தும் பணியினை மிக மோசமாக செய்து கொண்டிருந்தான். அவனால் ஆகக்குறைந்தது "அங்கால தள்ளு, இங்கால போ, உள்ளுக்கு போன் வைச்சிருக்க கூடாது" இவ்வாறான வார்த்தைகளை மட்டும் பயன்படுத்தவே அனுமதிக்கப் பட்டுள்ளான் என்பதை உணர்த்தி நின்றான்.

ஆயினும் நீதிபதி மன்றுக்கு வரப் போகின்றார் என்று சரசரப்பு ஏற்பட்டபோது நேரம் 11.30ஆனது. மாபெரும் உயர்ந்த குரலொன்று "நீதிமன்று.... அமைதி ...." என்று ஓங்கி உரைத்தது. சட்டத்தரணிகள், அவையினர் அனைவரும் எழுந்து வணக்கம் சொல்ல நீதிபதி ஆசனத்தில் அமர்ந்தார். சட்டத்தரணிகள் மற்றும் ஏனைய அரச அதிகாரிகள் யாவரும் தலை சாய்த்து வணங்கிக் கொண்டனர். அதுவரையில் பல்வேறு பெண்களுடன் உரையாடக் களமானது நீதிமன்ற இருக்கைகள். ஆளை ஆளை முகத்தைப் பார்த்துக்கொண்டு எதிரியைப் போன்று பக்கத்தில் இருப்பவர்களுடன் இருக்க முடியுமா? என்ன ? 80 வீதம் பெண்களே பிரசன்னமாகி இருந்தார்கள். ஏனைய வீதத்தினர் சட்டவிரோத செயலாளிகளாகவும், டெங்கு மற்றும் சுகாதார பிரிவினரால் குற்றம் சுமத்தப் பட்டவர்களாகவும் இருந்தனர். அந்த உரையாடல்களின் வெளிப்பாடுகள் யாவும் குடும்பத்தில் முரண்பாடு, சண்டை , குடும்ப வன்முறை, குடும்ப பிரிவு, தாபரிப்பு, ஏமாற்றுதல், இரண்டாந்தாரத் திருமணம், என்றே நீண்டது ....

"கலியாணம் கட்டி எத்தினை வருஷம் பெரிய பிள்ளைகள் 2 இருக்கினம், படிக்கினம், பெரியவளுக்கு கம்பஸ் கிடைச்சிருக்கு தகப்பன் எண்ட பொறுப்பு இல்லாமல் விட்டிட்டு தலைமறைவாகிட்டார். கூலி வேலை தான் செய்றவர். எங்கட குடும்பத்தை பிரிக்க அவரண்ட ஆக்கள் பிள்ளைக்கும் எங்களுக்கும் செய்வினை செய்து போட்டினம். நல்லா இருந்த பிள்ளை. இப்ப அறையை விட்டு வெளிய வாரமல் இருக்கிறாள். யாரோடையும் கதைக்கிறாள் இல்லை. எந்த நேரமும் நாய் போல குரைக்கிறாள், கத்துறாள், என்னைக் கண்டாலும் கதைக்கிறாள்



இல்லை. தடை வெட்ட கோயில் எல்லாம் கொண்டு போயும் ஒரு பிரயோசனம் இல்லை. அதுதான் லோயரோட கதைச்சன். அவரை கூப்பிட்டு விசாரிச்சு பிள்ளைகளை வளர்க்க ஆவது அவர் உதவி செய்ய வேணும். ஆம்பிளையளை நம்பித்தானே எங்கட தாய் தகப்பன் எங்களை கட்டிக் குடுத்தது. அவையள் குடும்பத்தை பார்க்காமல் இடையில விட்டிட்டு எப்படி போக முடியும்? எங்களுக்கும் வேலை வெட்டி தெரியாது. பக்கத்தில எங்கயும் நாலு சனத்திட்ட போயும் அறியம். இந்த நிலையில எங்களுக்கு இப்பிடியும் ஒரு நிலை வந்தால் எங்களை யார் பார்க்கிறது" என தனது சின்னச் சின்ன கனவுகள் வாழ்க்கையின் எதிர்பார்ப்புகள் கவலைகளை கொட்டியவள். "ஏன் வாழ வேணும் ? இருந்தும் என்ன பயன்? மனசெல்லாம் உடைஞ்சு போச்சு. சனத்துக்கு முன்னுக்கு போக வெட்கமாய் இருக்கு. பிள்ளைகளுக்காக தான் வாழ வேண்டி இருக்கு. நாங்கள் கௌரவமாக வளந்தனாங்கள். அவர் மேசன் கூலி வேலை, தங்குமிட வேலை எண்டு போறது. வேற தொடர்பு என்றும் சொன்னவையள். அதை நான் கேட்டால் காது கன்னம் என்று அடிப்பார் உதைப்பார். யாழ்ப்பாணத்தை விட்டு இப்ப அம்மாவோட தான் பிள்ளையளைக் கொண்டு போய் வைச்சிருக்கிறன் அம்மாவும் வயசானவா. உதவி இல்லை, பாதுகாப்பு இல்லை. அதால தான் வழக்குக்கு வவுனியாவில் இருந்து வந்தன். திரும்ப பயணம் போக வேணும் என்றாள் 50 வயது மதிக்க தக்க ஒரு பெண்.

அவளைத் தொடர்ந்து "ஆம்பிளையள் குடிக்கிறது பிரச்சனை இல்லை. தொழிலுக்கு போறவை உடம்பு களைப்பு, கஷ்டம் எல்லாம் இருக்கு அதுக்காக வாழ்க்கையில் குடிக்கிறதுதான் தொழில் எண்டால் எப்பிடி வாழ்வது ? அப்பா அம்மா தந்த சொத்து இல்லை. நகை பணம் இல்லை. எல்லாம் கரைச்சுக் குடிச்சு அழிச்சுப்போட்டு அடிக்கிறதும் அயலில சனத்தை இருக்க விடாமல் கத்துறதும் தான் அவருக்கு வேலை. தம்பிதான் சொன்னவன் இவர் இனி சரி வரமாட்டார். திருந்த போறதும் இல்லை. வீட்டை விட்டுக் கலைச்சு விடு எண்டு. அவன்தான் அடிச்சுக் கலைச்சவன். காத்திலையும் மழையிலையும் தொழிலுக்கு போறது எண்டு இரக்கப்பட்டும் வேதனை எனக்குத்தான். உழைக்கிற பணம் எங்க போகிறது எண்டு தெரியாது இப்ப நாங்கள் பிரிஞ்சு 10வருடமாக போச்சு. மாதம் மாதம் 8000 காசு கட்டுறார். மூன்று மாசமாய் காசு வரல. மூன்று மகன்மார் படிக்கினம். இந்த கால செலவு என்ன? சீவியம் என்ன ? வாழ்க்கை என்ன? நான் என்ன குறைவிட்டன் நல்லாதான் வாழ்ந்தன். இப்ப மேசன் வேலைக்கு போறாராம். தாயோட தான் இருக்கிறார்."

"அவர்களதும் உங்களதும் குடும்பங்கள் நீங்கள் பிரிஞ்சு இருக்கிறதை ஏற்றுக் கொண்டனரா" பிழை அவரதுதான். சொல்லிச் சொல்லிப் பார்த்தன்திருந்த வேயில்லை. இப்பிடியானவரை தலையில் தூக்கி கோபுரமே கட்ட முடியும்? நான் செய்வது தவறாக இருக்காது என்பது அவர்களுக்கு தெரியும். அதனால அவரின்ர தாய் சகோதரம் என்னட்ட கேள்வி கேட்டு வரயில்லை" என்றார் குருநகரை சேர்ந்த 48 வயதுடைய ராணி (பெயர் மாற்றப்பட்டுள்ளது)

பிள்ளை பிறந்தும் ஆஸ்பத்திரிக்கு கூட பார்க்க வராத கணவன். மாமியார் கொடுமையில் குடும்பத்தை பிரிந்த மருமகள், இரண்டாந்திருமண பந்தத்தில் இணைந்து கொண்ட கணவன், ஏமாற்றி திருமணம் செய்யப்பட்டதாகவும், வீட்டார் அனுமதி இன்றி வீட்டை விட்டுச் சென்று காதலில் ஏமாந்து கைவிடப்பட்டு விம்மி அழும் பெண்கள், திருமண ஆசையூட்டி வெளிநாட்டு திருமணங்களுக்கு தலை நீட்டி ஏமாற்றக் காத்திருப்பில் இருக்கும் பெண்கள் என்ற வகையறாக்கள் அன்று நீதிமன்றை அலங்கரித்து நின்றன.

"எப்போதும் என் மீது சந்தேகம். நான் சுதந்திரமாக நின்மதியாக என் பாட்டில் வாழ முடியவில்லை." என்ற ஆதங்கம் ஓர் ஆசிரியையின் மனசை நிறைத்திருந்தது. "எனக்கு கௌரவமான வேலை இருந்தால் சொல்லுங்க. சின்னப் பிள்ளைகளோடு செய்ற மாதிரி. வேலை நல்லம். பேபி பிறந்து 5 மாசம். பிறக்க முன்னம் கண்டி போனவர் இன்னும் வரல. சொந்த மச்சான்தான். நல்லூரில் இருக்கிறோம். அம்மாண்ட இடம் புங்குடுதீவு. இப்ப அம்மாவோடதான் இருக்கிறன். ஏ.எல் தான் படிச்சன். கனக்க படிக்கல. கடையில நிக்கிறது அந்த மாதிரி வேலை அம்மாக்கு பிடிக்காது. நல்ல வேலை எண்டால் சொல்லுங்கள். நானும் வேலை செஞ்சால் தான் இனி பிள்ளையை வளர்க்க முடியும் பயன்பிள பிள்ளை. கஷ்டப் படாமல் வளர்க்க வேணும்..."

"சரி மச்சான் என்று சொல்றீங்கள் . ஏன் இப்படி செய்தார்?" "எதுக்கு இங்க வந்தனீங்கள்?" "டிவோஸ் குடுக்கமாட்டன். நான்தான் மனைவி. அவர் இன்னொரு பெண்ணை கலியாணம் செஞ்சு கண்டியில் இருக்கிறார். அதுக்கான ஆதாரம் எல்லாம் நான் கண்டிக்கு போய் எடுத்திட்டு வந்தனன். நான் சண்டை பிடிச்சேன் "நீதான் எண்ட மனைவி, நீதான் வேணும் எண்டு சொல்லுறார். "அவர் மச்சான்தான் ஆனா நம்புற அளவில நான் இல்லை. வழக்கு போடப் போறன் எண்டு தான் இப்படி பொய் சொல்றார்... இப்போ 22 வயது. விரும்பிக் கேட்டு தான் கட்டினவர்." என்றவள் மனம் நிறைய கதைகள் பலதை தேக்கி வைத்துக் கொண்டு, "நீதிமன்று..... அமைதி...." என்றதும் அவளும் அமைதியானாள். என்னுடைய அழைப்பு முடித்து அவளை கையசைத்து விட்டு ஒவ்வொரு பெண்களின் மனங்களையும் எண்ணங்களாக்கிக் கொண்டு விடைபெறுதலே அன்றைய எனது கடமையாக அமைந்தது.

■ **சட்டத்தை மீறும் கலாசாரம் எத்தகையதாக இருக்கும்? அது சார்ந்த மக்கள் எப்படிப்பட்டவர்களாக இருப்பர்?**

மூ.கோமளன் – சில்லாலை

● அது பகுத்தறிவுள்ள மக்களின் கலாசார மாக இருக்காது. அது சார்ந்த மக்கள் மந்த புத்தியுள்ள மாக்களாக இருப்பார்கள்.

■ **ஜனாதிபதி தேர்த்தலுக்கான வேட்பாளர் தெரிவில் ரணிலின் இழுபறி நிலை என்னத்தைக் காட்டுகிறது.**

சு.ஏரம்பமூர்த்தி – சுன்னாகம்

● கட்சிக்குள் ஒருமைப்பாடு காணமுடியாத வர்களால் தேசத்தில் ஒருமைப்பாட்டை- எந்தக்காலத்திலும் ஏற்படுத்த முடியாது என்பதைக் காட்டுகிறது.

■ **தமிழ் மண்ணில் இவ்வளவு அராஜகம் நடைபெறுகிறதே. அதைப் பார்த்துக்கொண்டு மௌனமாக இருக்கும் தமிழ் தேசியக் கூட்டமைப்பு சபைக்குதவாதவர்கள் என்று சொல்லுகிறேன். ஏற்பீர்களா?**

மு.ந.தம்பி – முள்ளிவாய்க்கால்

● கீழோர் சபைக்கு உதவுபவர்கள் என நினைக்கிறேன்.

■ **காணி நிலம் வேண்டும் பராசக்தி... என்ற பாடிய பாரதி இன்றிருந்தால் தமிழ் மண் பறிபோவதை எண்ணி என்ன பாடி இருப்பான்?**

ம.தமயந்தி – சிலாபம்.

● காணி நிலம் வேண்டும் - அதைக் காக்கும் பலமும் வேண்டும் – என பராசக்தியை வேண்டிப் பாடியிருப்பான்.

■ **கண்ணில் பட்டதை எல்லாம் உண்மை என்ற நம்பினால்..?**

க.புஸ்பராசா, கரணவாய்

● உங்களை நீங்களே ஏமாளிகளாக அடையாளப்படுத்த நேரிடும். இளிச்ச வாயன் என்ற பட்டமும் கிடைக்கும்.

■ **வாடகை வீட்டில் இருந்து கொண்டு எழும்பமாட்டேன் என்ற சொல்லுகிறவனை என்ன செயயலாம்.**

இரா. மயூரநாதன், தாவடி

● எம் சொந்த மண்ணை அடாத்தாக ஆக்கிரமித்துக்கொண்டு விடமாட்டேன் எனச் சொல்லும் ஒருத்தரை என்ன செய்ய வேண்டுமோ அதையே செய்யலாம்.



# அங்கதன் பதில்கள்

■ **கல்வி நிலையத்திற்குப் பொறுப்பானவர் என்று கருதப்பட்டவர் களவெடுத்தால அவரை என்ன செய்யலாம்?**

ஐ.பரமேஸ்வரன், கரவெட்டி.

● களவும் கற்று மற என்ற கருத்துக்கு உயிர் கொடுக்க முயல்பவரை என்ன செய்யலாமோ அதையே செய்யலாம்.

■ **ஆலும் வேலும் பல்லுக்கு உறுதி என்று சொல்லிக் கொண்டு ஆலமரத்தை இல்லாதொழிக்கும் சமூகம் எப்படியானது, ஐயா?**

கு.கஜன், வல்வெட்டி

● நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி என்பதையும் புறந்தள்ளி விடும்.

■ **பிறந்ததில் இருந்து அரசின் ஓசி கல்வியைக் கற்றுப் பட்டம் பெற்றுப் பட்டதாரியாகி பொறுப்பான பதவிக்கு வந்தபின் சம்பளம் காணாது என்று பணிப் புறக்கணிப்பை செய்யும் அரச அதிகாரிக்கு யமலோக தண்டனை என்னவாக இருக்கும்?**

எஸ்.சேவியர், மன்னார்

● பாவம் செய்தவர்கள் இருக்கின்ற பகுதியைப் பராமரிபவனாக நியமிக்கப்படுவான்.

10. **மதுக்கடைகள் முன் உள்ள கூட்டம் அறம் சார்ந்த நிகழ்வுகளில் இல்லாதது ஏன்?**

எம்.வசீகரன், பச்சிலைப்பள்ளி

● மதுவில் மயக்கம் உண்டு. மதுரமான நிகழ்ச்சிகளில் மயக்கம் இல்லாததில் அதற்குப் போவதில் தயக்கம் உண்டு.

■ **கோத்தாபய ஜனாதிபதியாம். என்ன செய்வோம்?**

வ.அருணன், வங்களாவடி

● அடுத்த முள்ளிவாய்க்கால் எங்கு தீர்மானிக்கப்படுகிறதோ என்ற அச்ச எச்சரிக்கையுடன் இருப்போம்...!

■ **முன்னாள் வட மாகாண முதல்வரும் ஒரு அரசியல்வாதிபோல் பேசுகிறார், என்ன செய்யலாம்?**

ஐ.ஹாசீம், புத்தளம்

● அவரது தோற்றத்தைப் பார்த்துவிட்டு அவரை ஒரு ஆன்மீகவாதி என்று தப்பாக நினைத்துவிட்டீர்கள் போலும்.

■ **நாட்டில் வரட்சி என்கிறார்கள். பின்னர் கனமழை என்கிறார்கள். இயற்கையும் அரசியல்வாதிபோலாகி விட்டதா?**

ம.தனஞ்செயன், வரணி

● இல்லை இல்லை இயற்கை அதற்கு விதித்தபடி தன் கடமையைச் செய்கிறது.... அதனால் அரசியல்வாதியை ஒருபோதும் அதற்கு ஒப்பிடாதீர்கள்..

■ **பஞ்சம் பாட்டுப்பாடுவதை ஒரு பழக்கமாகக் கொண்டிருக்கும் எனது சிநேகிதனுக்கு என்ன புத்திமதி சொல்லலாம் என்று எண்ணுகிறீர்கள்?**

ப.செந்தூரன், பட்டிருப்பு

● நான் உன்னிடம் கடன் கேட்கப் போகும் சிநேகிதன் அல்ல என்பதை அவனுக்கு உணர்த்தினால் போதும்.

■ **நவராத்திரி வருகிறது. மூன்று பெண்களில் உங்களை வசீகரிப்பவர் யார்?**

து.வாணி, மூளாய்

● தாய், சகோதரி, மகள் மூவரிலும் வசீகரமானவர் யார்?

■ **இனிவரும் நாட்களில் மாவையின் மகன் நகரபிதா என்றும், ஆனோல்ட பாராளுமன்ற உறுப்பினர் என்றும் பேசிக்கொள்வது பற்றி உங்கள் கருத்து..?**

ம.ஆறுமுகம், சிவலிங்கப்புளியடி

● அரசியலில் இப்படி பேசுவது, நடப்பதும், நடக்காமல் விடுவதும் சகஜமப்பா... எல்லாம் ஒரு பரபரப்புக்குத்தான்.

■ **பாட்டும்நானே..பாவமும் நானே என்கிறாராம் சுமந்திரன்?**

வ.கிறிஸ்ரி, வவுனியா

● ஓ... அதுவும் சூ மந்திர ஜாலம்தான்.

■ **அறுசுவை உணவு யாழ்ப்பாணத்தில் எங்கு கிடைக்கும்?**

பா.தம்பிராசா, யாழ்ப்பாணம்.

● அம்மாவின் அடுப்படியில் மட்டுமே...!

■ **இப்போ வெளிவரும் சினிமாக்கள் சமூக மேம்பாட்டை ஏற்படுத்துமா?**

மு.தணிகை, நாயன்மார்கட்டு

● மேம்படுத்தாமல் விட்டாலும் சரி சமூகப் பண்பாட்டை சிறுமைப்படுத்தாமல் சமூகச்சீர்கேட்டை ஊக்குவிக்காமல் இருந்தால் சரி.

■ **சபைக்கு உதவாத உறவை என்ன செய்யலாம்?**

க.திரிஷா, கட்டுடை

சபைக்கு உதவாத உணவை பந்தியில் பரிமாறலாமா? தூக்கி எறிய வேண்டியது தான்.



**அங்கதனிடம் பதில்பெற வேண்டுவோர் உங்கள் கேள்விகளை சரியான பெயர் முகவரியுடன் தெளிவாக எழுதி newsdeepam19@gmail.com என்ற முகவரிக்கோ அல்லது இல.151,நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.**

**தரமான கேள்விகளை அனுப்புவோருக்கு 500 ரூபா பணப் பரிசில் வழங்கப்படும்.**

பெயர் :...............................................

முகவரி :...............................................

:...............................................

தொலைபேசி இல. ...............................

# அவர்கள் சொன்னதும் ஐயா சொல்வதும்

போனவாரம் பேப்பர் செய்திகள் ஒரே தமிழ் அரசியல் கோமாளிகளின் குழப்பத்தையும் அறியாமையையும் மட்டுமல்ல அளவுக்கு மீறிய அகங்காரத்தையும் வெளிப்படுத்துவதாக இருந்தது பாருங்கோ...

● ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்கள் பலரை ஆதரிப்பது என்பது குறித்து ஒருமுகமாக ஏகமனதாக முடிவெடுக்க தமிழ் கட்சிகளை ஒரே மேடையில் சந்திக்க வைக்க தமிழ்மக்கள் பேரவைக் கூட்டத்தில் தீர்மானமாம்.

எழுக தமிழ் பேரணிக்கே எழுந்துவர இசைவான மனதையோ இயங்கும் தன்மை கொண்ட் உடல் வலுவையோ கொண்டிராத சுய சிந்தனையோ சுயமாக முடிவெடுக்கும் தகைமையோ முழுமையாகக் கொண்டிராத வரண்ட கட்சி அரசியல் பேசும் தலைமைகளை ஒன்றிணைக்கும் முயற்சி நாய்வாலை நிமிர்த்தும் பிரயத்தனம் தான்...

இதனை மௌமாக சாதித்துக் காட்டும் மாபெரும் ஆளுமை ஒருவரிடம்தான் இருந்தது. அதை நான் சொல்லத்தேவையில்லை. அந்த ஆளுமை இன்றிருந்தால் மூச்சுப் பேச்சின்றி எல்லோரும் சொன்னதைச் செய்திருப்பார்கள். நிமிராவால் ஒட்ட நறுக்கப்பட்டிருக்கும். உதைக் கதைத்தென்ன நடக்கிறதை கவலையோடு வேடிக்கை பார்ப்போம்.

● ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தயாசிறி ஜெயசேகர வடக்கு மக்களை தொடர்ச்சியாக பிரதமர் ரணில் ஏமாற்றுகிறார் எனச் சாடுவதாக ஒரு செய்தி.... ஐயா சொல்லுறவு உண்மை... உண்மையை உலகிற்குச் சொன்னதற்கு நன்றி... ஆனால் உங்கட 'சூ- தந்திரக் கட்சி மட்டும் நேர்மையான ஆட்களைக் கொண்டதோ... பண்டாரநாயக்க முதல் சிறிமா, சந்திரிகா, மகிந்த, மைத்திரி என்று வரிசை கட்டி நின்று தமிழரை ஏமாற்றிய கதைகள் கொஞ்ச நஞ்சமோ..! தமிழினப் படுகொலைக்கான மூல இனவாத வித்து பண்டாவால் தானே விதைக்கப்பட்டது.... சும்மா ஆடு நனையுதென்று ஓநாய் ஒப்பாரி வைத்து அழுததாம் என்ற கதை மாதிரி தமிழ் மக்களை வைத்து அரசியல் பண்ணுற வேலையை தயாசிறி போன்றோர் விட்டுவிட்டு அவரசர் அரசியல் பிழைப்பை பார்த்துக்கொண்டு போங்கப்பா...!

● நீதிமன்ற அவமதிப்பு வழங்கில் ஜனாதிபதி மைத்திரிபாலவின் கருணையால் பொதுமன்னிப்பில் விடுதலையாகி வெளியே வந்து தொடர்ந்தும் அதே வகை யான குற்றச் செயல்களில் அரசுக்கும், சட்டம் மற்றும் நீதித்துறைக்கும் எதிராக பகிரங்கமாக 'முடிந்ததைப் பண்ணிப்பார்' என்ற தொனியில் அகங்கார வெறியுடன் செயற்பட்டுவரும் ஞானசார தேரர் (இவரைத் தேரர் என்று ஒப்புக்கொள்வது பௌத்தத்துக்கு அவமானம்) வடக்கிலும் கிழக்கிலும் கூட பௌத்தத்திற்கே முதலிடம் என்று கூறியிருக்கிறார். ஐயா ஞானசாரரே உங்களைப் போன்ற பிக்குகள் செய்யும் அடாவடித்தனத்தால் வெட்கித் தலைகுனிகிறோம் என்று இந்த நாட்டின் பிரதமரே அறிக்கை விட்டிருக்கிறார் என்றால் உங்களின் பௌத்த தர்ம சிந்தனை ஒரு நாட்டையே தலைகுனிய வைத்துள்ளதாகத்தானே அர்த்தம் பௌத்தத்தையும், நாட்டையும் தலைகுனிய வைத்த உங்கள் மீது கருணை காட்டி விடுதலை செய்த வரலாற்றுத் தவறுக்காக ஜனாதி பதி வருத்தப்படுவாரா, மனம் மகிழ்வாரா?

● இராணுவத் தளபதியாக சவேந்திர சில்வா நியமனத்தின் எதிராளியாக ஐ.நா. அமைதிப்ப டையில் இருந்து இலங்கை இராணுவத்தை விலக்குவதாக ஒரு செய்தி படிச்சன்.

இது ஒரு வெறும் தீர்மானமா முடிவா என்பது தெரியவில்லை. ஆனால் இப்படி ஒரு செய்தி வெளிவந்துள்ளமை யானது இலங்கை அரசுக்கும் இராணுவத்துக்கும் சர்வதேச அரங்கில் எத்தகைய மதிப்பீட்டை வழங்கப்பட்டிருக்கிறது என்பதை தெளிவுபடுத்துவதாக உள்ளது என்பது உண்மையே...

● பௌத்த மத குருமாரின் அராஜக அடாவடித்தனம் சட்டம், ஒழுங்கு மற்றும் நீதித்துறையின் பலவீனமாக நிலை, பெரும்பான்மை இன அரசியல் தலைமைகளின் பௌத்த மத அடிப்படை வாதத்துக்கு தூபமிடும் செயற்பாடு பல்வேறு வடிவங்களில் தொடரும் சிறுபான்மை இனத்தவர்களுக்கு எதிரான இனவழிப்பு நடவடிக்கைகள் யாவும் ஐ.நா.வுக்கோ சர்வதேச மன்னிப்புச் சபைக்கோ இலங்கைக்கு பல்வேறு வழிகளில் முண்டுகொடுத்துவரும் அயலக மற்றும் ஏனைய வல்லாதிக்க சக்திகளுக்கோ தெரியாததல்ல.



ஆனால் இவற்றை தடுத்து நிறுத்த முயடிாது இருக்கும் நிலைக்கு யார் காரணம்? இதுவே இன்றைய கேள்வி?

# விளையாட்டு உலகில்

காவலூர் ஞானம்



## கைமாறாத கிண்ணம்

1972ஆம் ஆண்டு இங்கிலந்தில் நடைபெற்ற ஆஷஸ் தொடர் 2-2 என வெற்றி தோல்வியீன்றி முடிந்தது. அதன்பின் 47 ஆண்டுகள் கழித்து தற்போது "டிரா "ஆகியுள்ளது. தொடர் "டிராவில்" முடிந்தால் ஆஷஸ் கோப்பை, இதற்கு முந்தைய தொடரை யார் வென்றார்களோ, அவர்களிடம் ஒப்படைக்கப்படும். அதன்படி ஆஸ்திரேலியாவிடம் ஆஷஸ் கோப்பை வழங்கப்பட்டது. அதேசமயத்தில் இந்தத் தொடருக்கான கேடயம் இரு அணிகளுக்கும் பகிர்ந்து அளிக்கப்பட்டது1972ஆம் ஆண்டு இங்கிலாந்து ஆஷஸ் கோப்பையை தக்கவைத்தது. ஆனால், தற்போது ஆஸ்திரேலியா கோப்பையை தக்கவைத்துள்ளது.1938, 1962-63, 1965-66, 1968இல் நடந்த ஆஷஸ் தொடர்களும் டிராவில் முடிந்துள்ளன.

## டோனியை முந்தினார் ரிஷப் பந்த்



வெஸ்ட் இண்டீசுக்கு எதிரான 2ஆவது டெஸ்ட் போட்டியில் 3ஆவது நாளில் வெஸ்ட் இண்டீஸ் அணி வீரர் பிராத் வெய்ட், இஷாந்த் ஷர்மா பந்து வீச்சில் விக்கெட் கீப்பர் ரிஷப் பந்திடம் பிடி கொடுத்து ஆட்டம் இழந்தார். 11ஆவது டெஸ்ட் போட்டியில் ஆடிய ரிஷப் பந்த் பிடி மற்றும் ஸ்டம்பிங் வகையில் அவர் செய்த 50ஆவது 'அவுட்' இதுவாகும். இதன் மூலம் குறைந்த டெஸ்ட் போட்டியில் 50 பேரை ஆட்டம் இழக்க வைத்த இந்திய விக்கெட் கீப்பர் என்ற பெருமையை ரிஷப் பந்த் பெற்றார். இதற்கு முன்பு விக்கெட் கீப்பர் டோனி 15 டெஸ்ட் போட்டியில் இந்த இலக்கை எட்டியதே சாதனையாக இருந்தது.

## ஜப்பானில் றக்பி வெற்றிக் கிண்ணம்

ஜப்பானில் றக்பி உலகக் கிண்ணப் போட்டிகள் இந்த மாதம் 20ஆம் திகதி ஆரம்பாமாகின. ரோக்கியோ நகரில் ஆரம்பித்துள்ள இந்த மோதல்கள் நவம்பர் 2வரை தொடரும். இறுதி மோதல் யொக்கோஹாமா நகரில் இடம்பெறப் போகின்றது. 2020இல் இடம்பெறப்போகும் கோலகால ஒலிம்பிக் விளையாட்டுத் திடலிலேயே இந்த மோதல்கள் முதலில் இடம்பெறுவதாகத் திட்டமிடப்பட்டிருந்தது.

4 வருடங்களுக்கு ஒரு முறை இடம்பெறும் இந்தச் சுற்றுப்போட்டியில், தகுதி பெற்ற 20 நாடுகள் மோதிக் கொள்கின்றன. ஆசிய நாடொன்றில் இந்தப் போட்டிகள் இடம்பெறுவது இதுவே முதற் தடவையாகும். 2015இல் சாம்பியனாகிய நியூசிலாந்து அணி, தொடர்ந்து 3வது தடவையாக, வெற்றிக் கிண்ணத்தைத் தக்கவைத்துள்ளது.

RUGBY WORLD CUP
JAPAN日本2019

## பந்து வீச ஓராண்டு தடை



25 வயதாகும் இலங்கை அணியின் முன்னணி சுழற்பந்து வீச்சாளராக வளர்ந்து வரும் அகிலா தனஞ்ஜெயா விதிமுறைக்கு மாறாக பந்து வீசுகிறார் என புகார் கூறப்பட்டது.12 மாதத்திற்குள் இரண்டுமுறை இந்த விவகாரத்தில் சிக்கியதால், ஐசிசி ஓராண்டு தடைவிதித்துள்ளது.இதனால் தனஞ்ஜெயா சர்வதேச போட்டிகளில் அடுத்த ஆண்டு ஆகஸ்ட் மாதம் வரை பந்து வீச இயலாது. தனஞ்ஜெயா 6 டெஸ்ட், 36 ஒரு-நாள் மற்றும் 22 டி20 போட்டிகளில் விளையாடி 106 விக்கெட்டுக்கள் கைப்பற்றியுள்ளார்.







## இதென்ன அநியாயம்

இதென்ன அநியாயம் என்று நீங்கள் கத்திக் கூச்சலிட முடியாது. இதற்காகவே அமெரிக்க குத்துச் சண்டைகள் களத்தில் அரங்கேற்றப்படுகின்றன. நியாயம், நீதி ஒரு சதத்திற்கும் கிடையாது. "பிக் டோக்" என்று அறியப்படும் றோமன் றெயின்ஸ் இராட்சத பலம் கொண்ட எறிக் றோவானிடம் வாங்கிக் கட்டிக் கொண்டது போதாது என்று, இன்னொரு இராட்சதரான லூக் ஹார்ப்பர், களத்தில் குதித்து, பிக் டோக்கை துவைத்து எடுக்கிறார். இந்த இலட்சணத்தில் யார் வென்றார் என்று சொல்லவும் வேண்டுமா?

அலெக்ஸா பிளிஸ் - நிக்கி குரொஸ் ஜோடி, மான்டி றோஸ் - சோனியா டெவில் ஜோடிக்கு எதிரான மோதல் விறுவிறுப்பாக இருந்தது. பெல்டைக் கைப்பற்றலாம் என்று வந்த மண்டி - சோனியா ஜோடியால் அது முடிய வில்லை. இந்த 24/7 சாம்பியன் பெல்ட் கைமாறும் விதம் சிரிப்பைத்தான் தருகிறது.

மோதல்களின் நடுவில் சர்க்கஸ் கோமாளிகள் போல் இவர்கள் வந்து போகிறார்கள். றன்டி ஓர்ட்டனும், சாம்பியன் கோபியும் மோதிக்கொண்டது விறுவிறுப்பான மோதலாக இருந்தது. ஓர்ட்டனின் சாரமாரியான அடிகளையெல்லாம் எப்படியோ சமாளித்து, இறுதியில் எதிரியை மண் கவ்வ வைக்கும் சாம்பியன் கோபியின் பராக்கிரமம் திகைக்க வைக்கின்றது..



## குவியும் சாதனைகள்

மூன்று வகை கிரிக்கெட்டிலும் 50இற்கு மேல் சராசரி வைத்திருக்கும் ஒரே துடுப்பாட்ட வீரர் விராட் கோலிதான்.

தென்ஆப்பிரிக்க இந்திய அணிகளுக்கு இடையிலான 2ஆவது ரி20 கிரிக்கெட் போட்டி மொகாலியில் நடைபெற்றது. இதில் இந்திய அணித் தலைவர் விராட் கோலி 72 ஓட்டங்கள் அடித்ததன் மூலம் ரி20 கிரிக்கெட்டில் அதிக அரைச்சதங்கள் (22), அதிக ஓட்டங்கள் அடித்த வீரர் என்ற பெருமையை பெற்றுள்ளார். 2ஆவது இடத்தில் ரோகித் சர்மா உள்ளார்.

அதுமட்டுமல்ல மூன்று வகை கிரிக்கெட்டிலும் 50இற்கு மேல் சராசரி வைத்துள்ள ஒரே துடுப்பாட்ட வீரர் என்ற பெருமையை பெற்றுள்ளார்.


டி20 கிரிக்கெட்டில் 71 போட்டிகளில் 66இல் பேட்டிங் செய்து 2441 ஓட்டங்கள் அடித்துள்ளார். சராசரி 50.85 ஆகும்.ஒருநாள் போட்டியில் 60.31 சராசரியும், டெஸ்ட் போட்டியில் 53.14 சராசரியும் வைத்துள்ளார்.

## பசியால் வாடியபோது 'பர்கர்'

சிறுவயதில் பயிற்சி முடிந்த பின்னர் சாப்பிட உணவு இல்லாம் பசியால் வாடியுள்ள கிறிஸ்டியானோ றொனால்டோவுக்கு, மெக்டெனால்டில் வேலைபார்த்த ஒரு பெண்மணிதான் உதவியுள்ளார். பர்கர் கொடுத்து உதவிய பெண்ணிற்கு ஏதாவது கைம்மாறு செய்ய, அவரை தேடி வந்தார் றொனால்டோ. அந்த பெண்ணை கண்டுபிடித்து அவருக்கு கைம்மாறாக,



நான் டின்னருக்கு அழைக்க விரும்புகிறேன் என்று தெரிவித்துள்ளார்.இரண்டு பிள்ளைகளின் தாயான போலா என்பவர், தான்தான் அந்தப் பெண் என்று ஒரு வானொலிப் பேட்டியில் ஒப்புக் கொண்டுள்ளார். என்னை இரவு உணவுக்கு அழைத்தால் நான் கலந்து கொள்ளத் தயார் என்றும் குறிப்பிட்டுள்ளார். புகழின் உச்சியில் இருக்கும் றொனால்டோ, தனது மறுபக்கத்தை இப்படி வெளிப்படுத்தியதை இட்டு, பலரும் அவர் நேர்மையைப் பாராட்டுகிறார்கள். கால்பந்து விளையாட்டில் கொடிகட்டி பறப்பவர் கிறிஸ்டியானோ றொனால்டோ. கோடிக்கணக்கில் சம்பளம் வாங்கும் இவர், ஓட்டலில் தங்கும்போது ஊழியர்களுக்கு டிப்ஸ் ஆக லட்சக்கணக்கில் பணம் வழங்குவார். டின்னர், பார்ட்டி என பணத்தை தண்ணீராக செலவழிப்பார்










தீபம் பத்திரிகை மற்றும் தொலைக்காட்சிக்கு அனைத்து மாவட்டங்களிலிருந்தும் விளம்பர முகவர்கள் தேவைப்படுகின்றார்கள். உடன் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கம் 077 198 9445

இந்தப் பத்திரிகை இல. 151, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் உள்ள நோர்சி மீடியா (பிரைவேற்) லிமிடெட் நிறுவனத்தால் 29.09.2019 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.